இலக்கம்	கணக்காய்வு அவதானிப்புக்கள்	அறிக்கை ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசுகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியிலுள்ளவாறான சிபாரிசுகளின் அமுல்படுத்தல் நிலைமை
01.	2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பந்திக்கு முரணாக கம்பனிக்கு அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அங்கீகரித்த ஆளணியினர் எண்ணிக்கை காணப்படவில்லை.	2023	நிறுவனம் சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும்.	2023 திசெம்பர் 04 அன்று தொழில்நுட்ப அமைச்சகம் (MOT) மூலம் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் நிதி அமைச்சகத்திடம் இருந்து அனுமதி கோரப்பட்டது.	ஆட்சேர்ப்புத் திட்டம் 2024 செப்தெம்பர் 30 வரையிலும் அங்கீகரிக்கப்படவில்லை.
02.	அரசாங்கத்தின தொழில் முயற்சிகளின் ஒரு ஊழியர் அமைச்சுக்கு அல்லது ஏனைய நிறுவனத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் இல்லாது விடுவிக்கப்படாதிருக்க வேண்டியதுடன்	2022 2023	சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும்.	நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	விடுவிக்கப்பட்ட காலப்பகுதியில் எந்தப் படியும் செலுத்தாதிருக்க வேண்டிய போதிலும் கம்பனியின் உத்தியோகத்தொருவர் அங்கீகாரமின்றி தொழில்நுட்ப அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது துடன் மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டில் சம்பளம் மற்றும் தொலைபேசிப் படியாக ரூபா 1,948,000 மற்றும் ரூபா 2,066,400 செலவு செய்யப்பட்டிருந்தது.				
03.	2017 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அவசர கணனி பரிகார மன்றத்திற்கு (இலங்கை சேர்ட்) செலுத்த வேண்டிய ரூபா 40,215,928 தொகை தீர்த்துவைக்கப்படாது முன்கொண்டு வரப்பட்டிருந்தது.	2021 2022 2023	செலுத்த வேண்டிய பணத்தை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	தொழில்நுட்ப அமைச்சால் இந்த விடயத்தினை பார்ப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.	2024 செப்தெம்பர் 30 வரையிலும் கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.
04.	பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்திற்கு மாறாக 30 ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளதால், 2023 செப்தெம்பர் 14 ஆம் திகதிய சட்டமா அதிபரின் இல. ஈ/112/2023/ஐசீரீஏ கடிதத்தின் ஊடாக	2023	அங்கீகரிக்கப்பட்ட சம்பள விகிதங்களின்படி கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும்.	அந்தச் சம்பள சீர்திருத்தங்கள் கழிக்கப்பட்ட போதிலும், மேலதிக கொடுப்பனவுகள் அறவிடப்பட்டிருக்கவில்லை.	அதிகமாக வழங்கப்பட்ட சம்பளம் தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

குறித்த சம்பள அதிகரிப்புகள் பயனற்றதாக இருந்தது என நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், 2023 ஆம் ஆண்டில் சம்பளமாக ரூபா.7,211,465 அதிகமாகச் செலுத்தப்பட்டது.

3.4 லங்கா கவர்ன்மெண்ட் இன்போர்மேசன் இன்பிராஸ்ட்ரக்சர் (பிறைவட்) லிமிட்டெட் கம்பனி

	மொத்தச் சொத்துக்கள் (ரூபா.)	மொத்தப் பொறுப்புக்கள் (ரூபா.)	உரிமையாண்மை (ரூபா.)	வரிக்கு முன்னரான இலாபம் ரூபா.	அபிப்பிராயம்
2021	46,643,595	5,671,895	40,971,700	(2,041,493)	முனைப்பழியுள்ளது.
2022	45,148,859	5,855,583	39,293,276	(2,133,248)	முனைப்பழியுள்ளது.
2023	45,429,379	1,057,351	44,372,028	-	முனைப்பழியுள்ளது.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
01	2022 நவம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற தாய்க் கம்பனியின் (இன்போர மேசன் கொமியுனிக்கேசன் டெக்னொலொஜி ஏஜென்சி ஒப் ஸ்ரீலங்கா (பிரைவட்) லிமிட்டெட்) இன் பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது கம்பனிகள் சட்டத்தின் 242 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி இன்போர்மேசன கொமியுனிக்கேசன் டெக்னொலொஜி ஏஜென்சி ஒப் ஸ்ரீலங்கா (பிரைவட்) லிமிட்டெட் உடன் ஒன்றிணைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2024 ஏப்ரல் 30 வரை அந்த பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	2023	மாவட்ட முகாமைத்துவ செயலகத்தின் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல வேண்டும்.	கம்பனியின் செயலாளர், இயக்குநர்கள் குழுவின் ஒருங்கிணைப்புடன் நியமிக்கப்பட்டார்.	ஒருங்கிணைப்பு 2024 செப்தெம்பர் 30 வரையிலும் செய்யப்படவில்லை. .

3.5 இலங்கை சர்ட் (பிரைவேட்) லிமிடட் கம்பனி

	மொத்தச் சொத்துக்கள் (ரூபா.)	மொத்தப் பொறுப்புக்கள் (ரூபா.)	உரிமையாண்மை (ரூபா.)	வரிக்கு முன்னரான இலாபம் ரூபா.	அபிப்பிராயம்
2021	83,277,223	16,392,082	66,885,141	5,512,737	முனைப்பழியுள்ளது.
2022	129,031,608	45,944,106	83,087,502	7,902,861	முனைப்பழியுள்ளது.
2023	384,092,035	279,326,013	104,766,022	22,941,665	முனைப்பழியற்றது.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
01	கம்பனிக்காக அங்கீகரித்த ஆட்சேரப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை இல்லாதிருந்தும் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆளணியினர்களுக்கு செயலாற்றலினை மதிப்பீடு செய்ததன் பின்னர் 05 சதவீதத்திலிருந்து 13 சதவீதம் வரையான சம்பள ஏற்றம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் கம்பனியின் அனைத்து ஆளணியினரும் ஒப்பந்த அடிப்படையில்	2023	ஒப்பந்த அடிப்படையில் ஆளணியினரைச் சேர்த்துக்கொள்ளும் போது சேவைக்காலம், செலுத்தப்படுகின்ற வேதனம் என்பன முன்னரே காட்டப்படுவதனால் செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைக்காக உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல வேண்டும்.	நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை.

	சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவர்களில் இரண்டு நபர்களுக்கான பதவியுயர்வினை 2023 ஆகஸ்ட் 01 ஆந் திகதி பணிப்பார் சபை அங்கீகரித்திருந்தது.				
02	கம்பனி 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,977,653 இனை செலவு செய்து திறைசேரி/ பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி சுகாதார மருத்துவ காப்புறுதியினை வழங்கியிருந்தது. மேலும் ஒரு உத்தியோகத்தருக்கு ரூபா 2,500 வீதம் சுகாதார மருத்துவ படியும் ரூபா 15,000 வீதம் பிரயாணச் செலவு படியும் செலுத்தப்பட்டிருந்தும் அதற்காகத் திறைசேரி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை	2023	அனைத்து கொடுப்பனவுகளுக்கு மாக பணிப்பாளர் சபை மற்றும் பொதுத்திறைசேரி முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படு தல் வேண்டும்.	பணிப்பாளர் சபையின் பரிந்துரைகளின் கீழ் இலங்கை சேர்ட் ஊழியர்களுக்காக வழங்கப்படும் சுகாதார காப்புறுதிக்கு தொழில்நுட்ப அமைச்சு திறைசேரியின் அனுமதியை கோரியுள்ளது.	அனுமதி இதுவரை பெறப்பட்டிருக்கவில்லை.
03.	2017 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் இன்போமேசன் கொமியுனிகேசன் டெக்னோலஜி ஏஜன்சி (பிரைவேட்) லிமிடட் கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 40,215,928 மீதியை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.	2021 2022 2023	பெறவேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல வேண்டும்.	இக்கணக்கு மீதி தொடர்பாக பரீட்சிப்பதற்காக ஒரு குழு தொழில்நுட்ப அமைச்சினால நியமிக்கப்பட்டுள்ளதுடன் குழுவின சிபாரிசின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.	2024 செப்தெம்பர் 30 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

3.6 ஓஷன்வீவ் டிவொலொப்மன்ட் (தனியார்) கம்பனி

	மொத்த சொத்துக்கள்	மொத்த பொறுப்புகள்	மூலதனம்	வரிக்கு முன்னைய இலாபம் (நட்டம்)	அபிப்பிராயம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	
2021	3,268,310,944	199,060,552	3,069,250,392	265,226,885	முனைப்பழியுள்ள
2022	3,653,529,693	165,568,040	3,487,961,654	413,544,071	முனைப்பழியுள்ள
2023	3,865,953,732	172,024,056	3,693,929,676	225,919,819	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
01	2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் 01 - 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அறவீடு செய்திருக்காத கடன்பட்டோர் மீதி ரூபா 4,975,913 தொகையாக காணப்பட்டதுடன், 05 – 11 வருட காலம் கடந்திருந்த போதிலும், அறவீடு செய்யப்படாத கடன்பட்டோர் மீதி ரூபா 9,071,144 தொகையாகக் காணப்பட்டதுடன், கணக்காய்வு திகதியளவில் இந்த வதிவோர்கள் வாடகை வீடுகளிலிருந்து அகன்றிருந்ததுடன் ரூபா 1,385,526 தொகை அறவிடப்பட வேண்டிய குடியிருப்பாளர்களின் கோவைகளும் காணாமல் போயிருந்தது.	2021 2022 2023	விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	ரூபா 1.8 மில்லியனுக்காக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. நிறுவனம் மூடப்பட்டமையால் ஏற்பட்ட நிலுவைத் தொகையை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் எஞ்சிய பணிகள் மேற்கொள்ளப்படும்.	அறவிடப்பட்டிருக்கவில்லை.

02	2007 இன் கம்பனிச் சட்டம் பிரிவு 223(2) இன் பிரகாரம், கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் கம்பனிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் 2015 ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.	,2022 2023	அதிகாரச்சட்டத் தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	கம்பனிச் செயலாளர் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இடம்பெற்றி ருக்கவில்லை.
03	2007 இன் கம்பனிச் சட்டம் பிரிவு 206 இன் பிரகாரம், முறையான செய்முறை ஒன்று கடைபிடிக்காமல் பணிப்பாளர்களை அகற்றுதல் மற்றும் சேர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அது கம்பனியின் நல்லெண்ணச் செயற்பாட்டிற்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.	,2022 2023	அதிகாரச்சட்டத் தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	முறையான செய்முறை ஒன்று எதிர்காலத்தில் கடைபிடிக்கப்படும்.	முறையான செய்முறை ஒன்று கடைபிடிக்க ப்பட்டிருக்க வில்லை.
04	கம்பனியினால் 2019 ஆண்டின் போது பார்க் ரோட் கட்டிடத்தின் 21 கடையறைகள் ரூபா 70,025,000 தொகைக்கு மேன் லேன்ட் க்ளோபல் கம்பனிக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதற்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கொள்வனவாளர்களிடம் ரூபா 20,025,000 இற்கான தொகை கிடைக்க வேண்டியிருந்தது. அந்தக் கடையறைகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருத்தல் மற்றும் தேவையான மின்சார மற்றும் நீர் வழங்கியிருக்காமை	2022 2023	இணக்கப்பாட்டு ஒன்றிற்கு வந்து இணக்கமொன்று ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.	பார்க் ரோட் கடையறைகள் மூடுவதற்கான காரணம் அது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டுள்ளமை.	வழக்கு நடவடிக்கை ககள் தொடர்ச்சி யாக காணப்படுக ின்றது.

	காரணமாக கடையறையை பயன்படுத்த முடியாமையால் கொள்வனவு செய்வோரினால் ரூபா 130 மில்லியனுக்கான நட்டஈடொன்று கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கம்பனிக்கு எதிராக வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்த. அதே போல் 2005 ஆண்டில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த இந்த 21 கடையறைகளும் கணக்காய்வுத் திகதியாகிய 2024 பெப்ரவரி 28 திகதி வரை 19 வருடங்கள் மூடப்பட்டிருத்தல் வினைத்திறனற்ற முகாமைத்துவத் தீர்மானங்களின் விளைவு என அவதானிக்கப்பட்டது.				
05	நுவரெலிய, மாலிகாவத்த, தெல்கந்த, கேகாலை வலவ்வத்த மற்றும் கேகாலை சியம்பலாபிடிய ஆகிய 05 வீடமைப்பு செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்காக கம்பனி 2022 ஆண்டின் ரூபா 39.5 மில்லியன் ஒதுக்கப்பட்டு அந்த ஆண்டு ரூபா 1,012,411 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2023 ஆம் ஆண்டு அந்த செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்காததுடன் , தெல்கந்த செயற்திட்டத்திற்காக ரூபா 6,650 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் படி முன்னைய	2021 2022 2023	செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முன்னர் காணிகளின் சிக்கலற்ற தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.	நுவரெலிய மற்றும் மாலிகாவத்த செயற்திட்டங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. தெல்கந்த காணி காணப்படும் நிலைமையிலே விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. வளவ்வத்த மற்றும் சியம்பலாப்பிட்டிய செயற்திட்டங்களில் ஆரம்ப பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் காணிகளின் சிக்கலற்ற தன்மை உரிய முறையில் காணப்படாமையால்	காணிகளின் உரித்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

	ஆண்டில் நிறைவேற்ற முடியாமல் போன செயற்திட்டங்களை எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்காக நீண்டகால வேலைத் திட்டமொன்றின்றி கம்பனி செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்காக இவ்வாறான செலவுகள் மேற்கொள்ளல் பலவீன முகாமைத்துவத் தீர்மானங்கள் என அவதானிக்கப்பட்டது.			செயற்திட்டங்களை மேற்கொள்ளல் முடியாமல் காணப்படுகின்றது.	
06	09 வீட்டு அலகுகளின் உடன்படிக்கைகள் இரத்து செய்யப்பட்டு 10 மாதம் முதல் 6 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் புதிய உடன்படிக்கைகளுக்கு அணுகாமல் வாடகை வீட்டு உரிமையாளர்கள் வசித்து வருகின்றார்கள் என அவதானிக்கப்பட்டது.	2021 2023	உடன்படிக்கை மேற்கொள்ளல் விரைவாக மேற்கொள்ள வேண்டும்.	06 வீடுகளுக்காக உடன்படிக்கை பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளது. 2 வீடுகளுக்காக வாடகைக் காலத்தை அதிகரித்துக் கொள்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டிற்காக உடன்படிக்கை மேற்கொள்வதற்கு தேவையான சட்ட மற்றும் முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.	உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது.
07	2012 ஆம் ஆண்டில் கம்பனியால் கஹதுடுவ பிரதேசத்தில் 398.1 பேர்ச்கள் காணியை ரூபா 19.21 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்திருந்ததுடன், 2014 ஆம் ஆண்டில் கஹதுடுவ செயற்திட்ட கட்டம் I இன் கீழ் அந்த காணியில் 11 வீடுகள் ரூபா 77.31 மில்லியன் கிரயத்தில் கட்டப்பட்டிருந்தன. ஆனால் அவற்றில் 04 வீடுகளை 2022 ஆம் ஆண்டு இறுதிக்குள் கூட விற்க முடியவில்லை. ஆனால் அந்த வீடுகளில் நான்கு	2021 2022	முறையான மதிப்பீட்டிற்குப் பின்னர் முதலீட்டு முடிவு எடுக்கப்பட்டு, முன்திட்டமிட்டவாறு செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட வேண்டும்.	கம்பனி வீடுகள் மற்றும் காணியை விற்பனை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.	தற்போதைய நிலையில் வீடுகள் மற்றும் காணியை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது.

	வீடுகளை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு விற்க முடியவில்லை. எனினும், கஹதுடுவ செயற்திட்ட கட்டம் II இன் கீழ் முன் விற்பனை அடிப்படையில் 36 வீடுகளை நிர்மாணிப்பதற்கு 2021 நவம்பர் 21 இல் பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்ததுடன், பொருத்தமான வாங்குபவரிடமிருந்து நிதியிடப்படாமல் கம்பனியின் ரூபா 40.38 மில்லியன் சொந்த நிதியை செலவிட்டு 11 வீடுகளின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிறைவு செய்யப்பட்டிராததுடன், அந்த நிலையில் விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது.				
08	05 – C வீட்டு அலகின் பெண் வதிவாளர் 2009 ஆண்டு முதல் வீட்டில் வசித்து வந்த போதிலும் 2018 ஆண்டு ஒக்தோபர் மாதத்தின் பின்னர் உடன்படிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. மேலும் வீட்டு அலகிற்காக ரூபா 26,580 தொகை போன்ற குறைந்த வாடகையொன்று அறவீடு செய்வதுடன் ஏனைய வாடகை வீட்டாளர்களிடம் போன்று வருடாந்த வாடகை அதிகரிப்பொன்று மேற்கொண்டிருக்கவில்லை. மேலும் 2023 ஒக்தோபர் 26 திகதிய பணிப்பாளர் சபை பத்திரம் மற்றும் அதன் தீர்மான இலக்கம் 261-05	2023	உரிய முறையில் உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ள வேண்டும்.	பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதன் தீர்மானித்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.	பணிப்பாளர் சபையின் தீர்மானித்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

	இன் படி மாதாந்த வாடகைத் தொகை மாற்றம் செய்யாது ரூபா 26,580 தொகை மற்றும் சேவைக் கட்டணமென ரூபா 7,500 தொகையாக 2024 ஜனவரி 01 திகதி முதல் இரண்டு வருடங்களுக்கு உடன்படிக்கை மேற்கொள்வதற்கு வதிவோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டு அலகின் மாதாந்த வாடகை பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி ரூபா 240,086 தொகையாகக் காணப்பட்டதுடன், உடன்படிக்கை மேற்கொண்டிருந்த வாடகை ரூபா 26,580 ஆகும். இதன் காரணமாக உடன்படிக்கை மேற்கொண்ட இரண்டு வருடங்களுக்காக கம்பனி இழந்துள்ள வாடகை வருமானம் ரூபா 5,124,144 தொகையென அவதானிக்கப்பட்டது.				
09	பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 194,285 தொகையாகிய 07-C வீட்டு அலகு மற்றும் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 249,320 தொகைக்கான 01-A வீட்டு அலகுக்காக 2023 ஜூலை 31 திகதி பணிப்பாளர் சபைப் பத்திரத்தின் தீர்மான இலக்கம் 257-04 படி வருடாந்த வாடகை அதிகரிப்பொன்றின்றி 05 வருடங்களுக்காக மாதாந்த வாடகைகள் மற்றும் சேவைக் கட்டணம் என ரூபா 90,000 அறவீடு	2023	நிறுவனத்திற்கு பாதகம் ஏற்படாத வகையில் வருடாந்த வாடகை அதிகரிக்கப்பட்ட வேண்டும்.	வீட்டுவாசிகளின் அடிப்படை உரிமை வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டு பின்னர் அகற்றுவற்கு இணக்கியிருந்தமையால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.	பணிப்பாளர் சபையின் தீர்மானித்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

செய்வதற்கு உடன்படிக்கை மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது. நிறுவனத்தின் வழமையான செய்முறையாகிய வருடாந்தம் வாடகை 5 சதவீதத்தினால் அதிகரித்தல் ஆக இருந்த போதிலும் இந்த நபர்களுக்கு 05 வருட காலத்திற்காக வருடாந்த கட்டண அதிகரிப்பொன்று மேற்கொள்ளப்படமாட்டாது . அதன் படி கம்பனிக்கு சேகரிக்கக் கூடிய ரூபா 17,478,984 இற்கான வருமானம் ஒன்றினை இழக்குகின்றன என அவதானிக்கப்பட்டது.

3.7 வரையறுத்த இலங்கை திரிபோஷ கம்பனி

	மொத்த சொத்துக்கள்	மொத்த பொறுப்புகள்	மூலதனம்	வரிக்கு முன்னைய இலாபம் (நட்டம்)	அபிப்பிராயம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	
2021	2,255,918,451	375,850,575	1,880,067,876	105,520,305	முனைப்பழியற்ற
2022	2,296,664,426	460,167,021	1,836,497,405	(48,310,073)	முனைப்பழியுள்ள
2023	3,337,790,207	1,043,236,541	2,294,553,666	555,406,517	முனைப்பழியற்ற

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1	2021 நவம்பர் 16 ஆந் திகதி அரசாங்க பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பொது முயற்சிகளுக்கான நிர்வாக வழிகாட்டிக் கோவை மற்றும் செயல்வழிக் கையேட்டின் 3.2 (v) ஆம் பந்தியின் பிரகாரம், ஊக்குவிப்பு படிகளைச் செலுத்தும் போது பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி சுபோச விற்பனையிலிருந்து இலக்கிடப்பட்ட படியாக கம்பனியின் அனைத்து ஊழியர்களுக்குமாக மீளாய்வாண்டின் போது ரூபா 12,687,147 ஊக்குவிப்பு படிப்பணம் செலுத்தப்பட்டது.	2022 2023	வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	இலங்கை திரிபோஷ கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கம்பனயின் சகல அம்சங்களையும் உள்ளடக்கிய செயற்பாட்டு கையேடு 2023 ஆம் ஆண்டில் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. உற்பத்தியின் அடிப்படையில் விற்பனையால் வழங்கப்படும் இலக்கு கொடுப்பனவு முறையானது தொடர்புடைய செயல்பாட்டுக் கையேட்டில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது மற்றும் பொது முயற்சிகள்	இலங்கை திரிபோஷ கம்பனி ஒரு உற்பத்தி நிறுவனம் என்பதால், அதன் செயற்பாடுகளை தொடர்வதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தினால் மேலதிக அனுமதி வழங்கப்படும் வரை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது

				திணைக்களத்தால் செயல்பாட்டு கையேட்டை பகுப்பாய்வு செய்யப்பட்டு எதிர்காலத்தில் தேவையான அங்கீகாரங்கள் வழங்கப்படும் என்பது.	
2	செயற்பாட்டுக் கையேட்டின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம், ஒவ்வொரு பிரிவினதும் சேவைத் தேவைப்பாடுகள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு உள்ளடக்கப்பட்ட மூலோபாய மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனி அதற்கமைய செயற்பட்டிருக்கவில்லை.	2023	வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	மூலோபாய மனிதவளத் திட்டமொன்றை தயாரிக்கும் பணி தற்போது இடம்பெறுகின்றது என்பது.	மூலோபாய மனித வளத் திட்டத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
3	2018 யூலை 18 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ii ஆம் பந்தியின் பிரகாரம் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை தீர்மானிக்கும் அதிகாரம் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்படவில்லை மற்றும் மேலதிக கொடுப்பனவுகளாக வழங்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளும் திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டும், 2017 இல் கம்பனி அறிமுகப்படுத்திய சுபோஷ தயாரிப்புக்காக பணியமர்த்தப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமையாளருக்கு	2022 2023	இதற்குத் தேவையான முறையான அனுமதிகள் பெறப்பட வேண்டும்.	பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செயற்பாட்டு கையேட்டில் இதற்கான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளமை.	பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கும் வரை பணிப்பாளர் சபையின் அனுமதியின் பேரில் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது.

	பணிப்பாளர் சபையின் அற்கீகாரத்தின் அடிப்படையில் சுபோஷா கணக்கிலிருந்து ரூபா 10,000 தொகையான மேலதிக கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 120,000 திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்தின் அனுமதியின்றி செலுத்தப்பட்டிருந்தது.				
4	முன்மொழியப்பட்ட சைலோ கட்டமைப்பின் நிர்மாணத்திற்காக, 2021 ஆம் ஆண்டில் உலக உணவுத் திட்டத்தால் (WFP) ரூபா 192,091,525 வழங்கப்பட்டிருந்ததுடன், அந்தப் பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டது. 2023 ஜனவரி 02 இல் உள்ளபடியாக அதன் முதிர்வு பெறுமதி ரூபா 207,815,400 ஜனவரி 20 அன்று பணமாக்கப்பட்டதுடன் 2023 ஜனவரி 27 ஆந் திகதி ரூபா 125,000,000 மீண்டும் முதலீடு செய்யப்பட்டது. எவ்வாறாயினும், இந்த நிதியை வழங்குவதன் நோக்கத்தை நிறைவேற்றாமல் வேறு நோக்கங்களுக்காக இந்த நிதி செலவிடப்பட்டதை கணக்காய்வின் போது அவதானிக்க முடிந்தது.	2022 2023	இந்த பணத்தை உத்தேச நோக்கத்திற்காக செலவிடப்பட வேண்டும்.	சைலோ கட்டமைப்பினை நிர்மாணித்தல் 2023 ஆம் ஆண்டளவில் மதிப்பீடானது ரூபா 800 மில்லியனாக காணப்பட்டமை. (2022 - ரூபா 500 மில்லியன்) கம்பனிக்கு மூலதன நிதியேற்பாடு இல்லாதிருந்தமையால் 2022 ஆம் ஆண்டின் போது நிலையான வைப்பின் ஒரு பகுதி பயன்படுத்தப்பட்டது என்பது.	2023 ஜனவரி மாதத்தில் ரூபா 125 மில்லியனும், 2024 யூலை மாதம் ரூபா 100 மில்லியனும் எனுமாறு எதிர்காலத்தில் சிலோ அமைப்பின் கட்டுமானத்திற்காக ரூபா 225 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.
5	கம்பனியை நிறுவியதன் முக்கிய நோக்கமான திரிபோஷ உற்பத்தியை விட, சுபோஷ	2023	வருடாந்த திரிபோஷா தேவையை பூர்த்தி	உற்பத்தி இலக்கு கொடுப்பனவை முறைமைப்படுத்துவதற்காக கம்பனியின்	உற்பத்தி இலக்கு கொடுப்பனவை முறைப்படுத்த,

	உற்பத்தியில் நிறுவனம் அதிக ஆர்வத்துடன் இருந்ததாகவும், இந்த நிலைமைக்கு பிரதான காரணமாக சுபோஷ உற்பத்தி சந்தைப்படுத்தல் வருமானத்தின் அடிப்படையில் இலாபத்தில் 5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை இலக்கு கொடுப்பனவை செலுத்தி கம்பனி நடவடிக்கை எடுத்தமை வெளிப்படுத்தப்பட்டது. மேலும், இலக்கு கொடுபபனவுகளுக்கு முறையான அங்கீகாரம் மற்றும் நடைமுறையொன்று காணப்படவில்லை.		செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் மற்றும் உற்பத்தி இலக்கு கொடுப்பனவு முறைப்படுத்தப்ப ட வேண்டும்.	ஒட்டுமொத்த உற்பத்தி இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு இலக்கு கொடுப்பனவு முறையானது, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கம்பனியின் செயல்பாட்டுக் கையேட்டில் உள்ளடக்கப்பட்டு பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது.	கம்பனியின் ஒட்டு மொத்த உற்பத்தியின் அடிப்படையில் இலக்கு கொடுப்பனவு திருத்தப்பட்டு, பணிப்பாளர் ஒப்புதலுடன் கம்பனியின் செயல்பாட்டுக் கையேட்டில் சேர்க்கப்பட்டு பொது முயற்சிகள் திணைக்களத்திற் கு அனுப்பப்பட்டுள் ளது.
6	கம்பனினால் 2016 ஆம் ஆண்டு நிர்வாக விதிக் கோவை தயாரிக்கப்பட்டு அதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றிருந்த போதிலும், இதுவரை பொது முயற்சிகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படவில்லை. இருப்பினும், கம்பனியால் அதில் உள்ள சில அங்கீகரிக்கப்படாத சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் பின்பற்றியமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.	2023	உரிய முறையான அனுமதி கிடைக்கும் வரை செயல்பாட்டுக் கையேட்டிலுள் ள விடயங்கள் செயல்படுத்தப்ப டக் கூடாது.	பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ள நிர்வாக விதிக் கோவையும் உள்ளடங்களாக செயற்பாட்டு கையேட்டில் காணப்படும் விடயங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் அங்கீகாரம் கிடைக்கும் வரையிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனமொன்றாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்	பொது முயற்சிகள் திணைக்களத்திட ம் இருந்து உரிய அனுமதி கிடைக்கும் வரை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன.

என்பது.

7	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட இலக்கம் DMS/E4/13/08/413/1 கொண்ட 2013 மார்ச் 28 ஆந் திகதிய கடிதத்தின் படி, 2010 திசெம்பர் 02 அன்று அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பதவிகளுக்கும் 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை விதிகளின்படி தயாரிக்கப்பட்ட தேசிய சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஒப்புதல் அளித்திருந்தாலும், அந்த திகதிக்குப் பிறகு உருவாக்கப்பட்ட மூன்று புதிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின்றி சில ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டிருப்பதும் தெரியவந்தது.	2023	ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்பு நடைமுறைகள் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும்.	கம்பனியில் ஆட்சேர்ப்பு நடைமுறை இல்லாது நிலவும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டுள்ளமை.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
8	ஊழியர் ஊக்குவிப்பாக மற்றும் அனுமதிக்கப்பட்ட/அனுமதிக்கப்படாத சம்பளமற்ற விடுமுறை எடுக்காத 162 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டில் தலா இரண்டு சம்பள உயர்வுகள் ஊழியர்	2023	இதற்கு முறையான அனுமதிகள் பெறப்பட்டு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	2023 ஆம் நிதியாண்டின் நிதிப் பெறுபேற்றின் அடிப்படையில் ரூபா 811 மில்லியனான வரிக்கு முன்னைய இலாபம் அறிக்கையிடப்பட்ட காரணத்தால்	எதிர்காலத்தில் வரிசை அமைச்சிற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.

ஊக்கத்தொகையாக நிறுவனத்தின் தலைவரின் ஒப்புதலுடன் செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, சம்பள உயர்வாக மாதம் தோறும் ரூபா 67,690 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. இந்த முன்னுதாரணமானது 2024 சம்பள உயர்வுகளிலும் பின்பற்றப்பட்டு, தலா இரண்டு சம்பள உயர்வுகள் செலுத்தப்பட்டிருந்தது.

உற்பத்தி செயல்திறன் ஆகிய விடயங்களின் அடிப்படையில் 02 சம்பள ஏற்றங்கள் வீதம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை. இதற்காக கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பது.

3.8 குருநாகல பெருந்தோட்ட கம்பனி

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்த பொறுப்புக்கள் ரூபா	தேறிய சொத்துக்கள் ரூபா	வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்)	அபிப்பிராயம்
2021	3,287,099,773	338,721,597	2,948,378,176	468,604,709	முனைப்பழியுள்ள
2022	3,692,485,597	507,429,292	3,185,056,305	511,539,402	முனைப்பழியுள்ள
2023	3,862,697,258	448,857,374	3,413,839,884	534,430,745	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
(ஆ)	2009 மே 26 ஆம் திகதிய DNS/A/8/27 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி கம்பனியின் HM, MM மற்றும் JM சம்பளத் தொகுதிகளுக்குரிய சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு காசாக மாற்றக்கூடிய ஊழியர் படிகளாக ரூபா 13,179,028 ஆன தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவுகளுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய	2021	இந்த கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக தொடர்புடைய சுற்றறிக்கைளின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.	தொடர்புடைய சுற்றறிக்கை திறைசேரியின் அனுமதியினை பெற்று கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.	திறைசேரியின் அனுமதி இன்றுவரை பெறப்படவில்லை.

	திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.				
(ஆ)	2009 மே 26 ஆந் திகதிய DNS/A/8/27 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி கம்பனியின் உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது மருத்துவ உதவிக் கொடுப்பனவுகளுக்காக ரூபா 8,669,745 ஆன கொடுப்பனவை மேற்கொள்ளும் போதும் திறைசேரியின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	2021	இந்த கொடுப்பனவிற்காக தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.	தொடர்புடைய சுற்றறிக்கை திறைசேரியின் அனுமதியினை பெற்று கொள்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.	திறைசேரியின் அனுமதி இம்மட்டுமாய் பெறவில்லை.
(இ)	வெள்ளை தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தின் மற்றும் கருவா எண்ணெய் உற்பத்தி செய்யும் செயற்திட்டம் 2022 ஆண்டு ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரை அவற்றை செயற்படுத்தியிருக்கவில்லை.	2022	எதிர்பார்த்த இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	இச்செயற்றிட்டத்தினை முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றன.	கருவா எண்ணெய் உற்பத்தி செய்யும் செயற்திட்டம் 2023 ஆம் ஆண்டில் முன்வைக்க பட்டதுடன், இப்பொழுது அதனை உற்பத்தி செய்ய தொடங்கிவிட்டனர். அத்துடன் புதிய தேங்காய் எண்ணெய்

					தொழிற்சாலை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.
(ஈ)	மஞ்சள் பயிர்ச்செய்கைக்காக 2020 ஆம் ஆண்டு முதல் அடுத்த ஆண்டுகளுக்கான மொத்தத் தொகை ரூபா 8,432,049 ஆக கணக்கு வைக்கப்பட்டு இருந்தாலும், இந்தச் செலவின ஒப்பீட்டு எண்ணக்கருவின் பிரகாரம் அந்த ஆண்டுகளில் ஈட்டிய வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்படாது நடைமுறைச் சொத்துக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளமையால் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் திரண்ட வருமானம் அந்த பெறுமதியால் மிகைக் கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது.	2023	குறுகிய காலப் பயிரான மஞ்சள் சாகுபடிக்கு ஆகும் செலவை, ஒப்பீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆண்டுகளில் ஈட்டப்பட்ட வருமானத்தில் ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.	குறுகிய கால செயற்திட்டங்களில்)ஒரு வருடத்திற்கும் குறைவான) செலவினங்களை ஈட்டப்பட்ட வருமானத்துடன் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	இச் செலவினங்கள் உரிய காலத்தில் சரி செய்யப்படவில்லை.
(உ)	கம்பனியின் தம்பதெனிய மாகாண தோட்டத்தின் அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,500,000 மதிப்பீடு தயாரிக்கப்பட்டது, ஆனால் 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை ரூபா 7,038,605 தொகை அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக	2023	கட்டுமானப் பணிகளுக்கான அளவிடைப் பத்திரங்கள் மற்றும் பொருள் மதிப்பீட்டைத் தயாரித்து அதற்கேற்ப தேவையான பொருட்கள் மற்றும் அளவுகளை வாங்குவதன் மூலம் செலவுகளைக் கட்டுப்படுத்த	எதிர்காலத்தில் செய்யப்படும் நடவடிக்கைகளுக்கான பொருள் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை தயாரிக்குமாறு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது.	கட்டுமானப்பணிகள் இன்றுவரை முடிவடையவில்லை என்பதோடு செலவை, மதிப்பிடுவதற்கு தேவையான அளவீட்டு தாள்கள் தயாரிக்கப்படவில்லை.

	செலவிடப்பட்டுள்ளதுடன், மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட ரூபா 538,605 அதிகரிப்பு என்பதும், கட்டிடத்தின் பணிகள் இதுவரை முடிவடையாமையால் செலவு மேலும் அதிகரிக்கக்கூடும் என அவதானிக்கப்பட்டது. மதிப்பிடப்பட்ட செலவினங்களைத் தாண்டிச் செலவு செய்ததற்கான ஒப்புதலும் பெறப்படவில்லை. இந்த கட்டுமானம் தொடர்பாக மூலப்பொருள் மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை என்பதுடன், அதற்குரிய அளவிடைப் பத்திரங்கள் மூலம் செலவுகள் உறுதி செய்யப்படவில்லை.		வேண்டும்.		
(ஊ)	2023 டிசம்பர் 31 இல் உள்ளபடியாக தென்னை உற்பத்திகளின் கடன் பட்டோர் மீதியான ரூபா 63,510,576 தொகையினுள் 03 மற்றும் 08 ஆண்டுகளைத் தாண்டிய முறையே ரூபா 1,688,527 மற்றும் ரூபா 4,677,838 கடன் பட்டோர் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	2023	நீண்ட கால கடன் பட்டோர் மீதிகளை வசூலிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.	சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.	ரூபா.6,366,365 பெறுமதி 08 மற்றும் 03 வருடங்களுக்கு மேலாகியும் இன்றுவரை பெற்று கொள்ளப்படவில்லை.

3.9 சிலவ் பிளான்டேஷன் விமிடட் கம்பனி

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்த பொறுப்புக்கள் ரூபா	தேறிய சொத்துக்கள் ரூபா	வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்)	அபிப்பிராயம்
2021	2,392,501,090	471,418,566	1,921,082,524	510,887,112	முனைப்பழியுள்ள
2022	2,890,032,133	534,978,980	2,355,053,153	513,881,001	முனைப்பழியுள்ள
2023	3,047,592,877	667,990,604	2,379,602,273	302,606,407	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
(அ)	கம்பனியிடம் உள்ள பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத 186.15 ஹெக்டயர்கள்' பல்வேறு நபர்களினால் பலவந்தமாக கிராமங்களை விரிவுபடுத்துவதற்கு மற்றும் அத்துமீறிய குடியிருப்புக்களாக பிடித்துவைக்கப்பட்டிருந்தன. அதன் மூலம் 89.16 ஹெக்டயர் அளவான காணியை மாத்திரம் மீளப்பெற்றுக்கொள்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் மிகுதியான 96.99 ஹெக்டயர் அளவான காணி பிடித்துவைக்கப்பட்டிருந்தமை சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.	2022	குத்தகை உரிமையின் கீழ் உள்ள அதிகாரமின்றி பிடித்துவைத்துள்ள காணிகளை தீர்த்துவைப்பதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் கம்பனியின் பொறுப்பாகும்.	தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	96.99 ஹெக்டயர் நிலப்பரப்பின் மீது எந்த ஒரு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதேப்போன்று, நிறுவனம் பொறுப்பேற்பதற்கு முன்பு நடந்த சம்பவங்களுக்கு இன்று வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ)	கம்பனிக்கு ஏனைய நிறுவனங்களுக்கு கடன் வழங்க சட்ட உரிமைகள் இல்லை என்றாலும், கம்பனியால் **மக்கள்** தோட்ட அபிவிருத்திச் சபை, அல்கடுவ பெருந்தோட்டக் கம்பனி, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், அரச வளங்கள் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் இறப்பர் உற்பத்தி ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிற்கு ரூபா 105 மில்லியன் கூட்டுத்தொகையான கடன்கள் 2010 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. கம்பனியின் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில், 2014 ஆம் ஆண்டில் தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து வட்டி உட்பட வசூலிக்கப்பட வேண்டிய ரூபா 119.758 மில்லியன் தொகைக்காக நிதிக்கூற்றுக்களில் முழு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில், வட்டி உட்பட மொத்த வசூலிக்க முடியாத தொகை ரூபா 190.157 மில்லியன் ஆகும்.	2023	கம்பனியின் நோக்கங்களைப் பின்பற்றி கடன் தொகையும் வட்டியும் உடனடியாக வசூலிக்க தாமதிக்காது நடவடிக்கை எடுக்க வேண்டும்.	கொடுக்கப்பட்ட உரிய கடன் தொகையை திரும்ப பெறுவதுதொடர்பாக கடன் வழங்கப்பட்ட ஆண்டில் இருந்து பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இயக்குனர்கள் குழுவின் முடிவின் படி 2014 ஆம் ஆண்டில் நிதி கூற்றுக்களில் முழு ஏற்பாடுகளும் ஒதுக்கப்பட்டன.	கடன் வழங்கப்பட்ட ஆண்டில் இருந்தே அதனை மீளப்பெறும் முயற்சிகள் மேற்கொண்டாலும் கூட ,அதனை இன்று வரைபெற்றுக்கொள்ள முடியவில்லை. இக்கடனை மீள பெற்று கொள்வதற்கான சாத்திய தன்மை குறித்து, சிலவ் தோட் டநிறுவனம் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு கொடுக்க வேண்டிய குத்தகை வாடகையில் இருந்து இக் கடன் மற்றும் வட்டியை மீள பெறுவதற்கான புலன் விசாரனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
(இ)	பிரதான காரியாலயத்தின் அனுமதியின்றி நாளொன்றுக்கு ரூபா 900 ஊதியத்தின் அடிப்படையில 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் உட்பட 23 ஊழியர்களை வேலைக்கு அமர்த்த தோட்ட அதிகாரிகள் ஏற்பாடு செய்திருந்தனர்.	2023	கம்பனியின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப முறையான அதிகாரியின் ஒப்புதலின் பேரில் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும்.	தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	சரியான முறையில் ஆட்சேர்ப்பு செய்து கொள்ளாமை மற்றும் அவர்களுக்கு வழங்கிய சம்பளம் குறித்தும் சட்ட ரீதியான

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

3.10 இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனம் லிமிடெட்

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்த பொறுப்புக்கள் ரூபா	தேறிய சொத்துக்கள் ரூபா	வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்)	அபிப்பிராயம்
2021	-	-	-	-	-
2022	-	-	-	-	-
2023	-	-	-	-	-

- இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனம் லிமிடெட் இன் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கணக்கு அறிக்கைகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கவில்லை. (கணக்குகள் இறுதியாக 2011.03.31 இல் தயாரிக்கப்பட்டது)
- 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கொடுக்கல்வாங்கள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
(அ)	2023 ஆம் ஆண்டு சனவரி 31 ஆம் திகதியிடப்பட்ட CP/22/2180/616/034 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், 06 மாத காலத்திற்குள் இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு உடன்பட்டு 2022 திசெம்பர் 01 முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒரு தகைமைவாய்ந்த உத்தியோகத்தரொ	2023	2023 செப்தெம்பர் 12 ஆம் திகதியிடப்பட்ட CP23/1428/616/025-1 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2023 யூலை 01 முதல் செல்லுபடியாகும் காலத்திற்கு 04 மாதங்கள் மட்டுமே கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கலைப்பு	2023 நவம்பர் 01 முதல் தகைமைவாய்ந்த அதிகாரி நியமிக்கப்படாததால், கூட்டுத்தாபனத்தினை கலைக்க தகைமைவாய்ந்த அதிகாரியை நியமணம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.	கலைப்பு செயல்முறை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை..

	ருவர் நியமிக்கப்பட்டுள்ளார். எவ்வாறாயினும், ஒரு வருட காலப்பகுதி கடந்திருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தின் கலைப்பு இன்னும் நிறைவடைந்திருக்கவில்லை.		செயல்முறை 2024 மார்ச் 31 வரையிலும் கூட நிறைவடைந்திரக்கவில்லை. எனவே, கலைப்பானத துரிதப்படுத்தப்படல் வேண்டும்.		
(ஆ)	இறப்பர் தொடர்பான முடிக்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகளை அமைப்பதன் மூலம்சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 1999 ஆம் ஆண்டு மற்றும் 2001 ஆம் ஆண்டு இந்த கம்பனிக்கு திறைசேரியால் வழங்கப்பட்ட உபகடன் தொகையில் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான அட்டுறு உப கடன்தொகை ரூபா 766.74 மில்லியன் ஆக இருந்ததுடன் அட்டுறு வட்டி ரூபா 612.80மில்லியன் ஆக இருந்தது. மேலும் எல்பிட்டிய நுரை இறப்பர்தொழிற்சாலையை பொருத்தமானமுதலீட்டாளருக்கு குத்தகைக்கு வழங்குவதற்கும் அதன் இயந்திரங்களைவிற்	2023	உரிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பொறுப்புக்களை தாமதமின்றித் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	எல்பிட்டிய நுரை இறப்பர் தொழிற்சாலையின் இயந்திரங்களை மதிப்பீட்டு பெறுமதியை விட குறைந்த பெறுமதிக்கு விற்பனை செய்வதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.இரும்பினால் செய்யப்பட்ட பொருட்களை மதிப்பீட்டை விட குறைந்த விலைக்கு விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்க முடியாது எனவும், அதற்கு பதிலாக ஏலத்திற்கு விடப்படல் வேண்டும் எனவும் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நிலுவையில் உள்ள கடன் மற்றும் வட்டியைத்	அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் , இது தொடர்பான பொறுப்புகளை தீர்ப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

	பனை செய்வதற்கும் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு 2019 ஏப்ரல் 24 ஆம் திகதிய CP/19/0985/117/031 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்துவதற்கும், மேற்படி உபகடன்கள் உட்பட கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கும்மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டுத்தாபனம் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.			தீர்ப்பனவு செய்வதற்கு சொத்துக்களை விற்பனை செய்து பயன்படுத்தி கொள்வதற்கு கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.	
(இ)	வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 06 தொழிற்சாலைகளில் 04 குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன், அதில் ஒரு தொழிற்சாலை சாட்சியமளிக்கும் வழக்கின் மூலம் காணியின் உரிமையாளரால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மற்ற தொழிற்சாலை, எல்பிட்டிய நுரை இறப்பர் தொழிற்சாலையை பொருத்தமான முதலீட்டாளருக்கு குத்தகைக்கு விடுவதற்கும் அதன்	2023	தீர்மானங்களின் பிரகாரம் இயந்திரங்களை மதிப்பீடு செய்து பெறுகை முறைகள் மூலம் விற்பனை செய்வதற்கும், தொழிற்சாலையை குத்தகைக்கு விடுவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	எல்பிட்டிய நுரை இறப்பர் தொழிற்சாலையின் இயந்திரங்களை பொது ஏலத்தில் விடுவதற்கும், அதன் பின்னர் பொருத்தமான முதலீட்டாளருக்கு தொழிற்சாலையை குத்தகைக்கு வழங்குவதற்கும், அத்தகைய சொத்துக்களை காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.	அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

	இயந்திரங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பெறுகைமுறையைப் பின்பற்றி விற்பனைசெய்வதற் கும் 2016 நவம்பர் 09, 2019 ஏப்ரல் 24 மற்றும் 2023 மார்ச் 08 ஆம்திகதிய முறையே CP/16/1902/726/04 1, CP/19/0985/117/03 1 மற்றும் CP/23/0225/616/00 6 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானங்கள் மூலம்அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அந்த பணிகள் நாளதுவரை நிறைவேற்றப்பட்டிரு க்கவில்லை.				
(ஈ)	அரோமா நச்சுரல் இறப்பர் (பிறைவேட்),மாவனெ ல்ல கேந்திர அப்சரி, மாவனெல்லரயர் ரியூப் மற்றும் பதுரலிய கிறீப் இறப்பர் ஆகியவற்றிற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள மூன்று தொழிற்சாலைகளில், மாவனெல்லரயர் ரியூப் மற்றும் பதுரலிய கிறீப் இறப்பர்ஆகிய	2023	குத்தகை உடன்படிக்கைக ளின் பிரகாரம் குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் கணக்காய்விற்கு த் தேவையான தகவல்கள் முறையாக வழங்கப்பட வேண்டும்.	அதிகரிக்கப்பட்ட குத்தகை வாடகைத் தொகை தற்போது அறவிடப்படுகின் றது.	குத்தகை வாடகையை செலுத்தாத தொழிற்சாலை களில் இருந்து குத்தகை வாடகை அறவிடப்பட்டி ருக்கவில்லை. ஒப்பந்தப்படி உயர்த்தப்பட்ட குத்தகை வாடகையும் அறவிடப்பட்டி ருக்கவில்லை.

	இரண்டு தொழிற்சாலைகள்மாத்திரமே தற்போது குத்தகை வாடகையை செலுத்தி வருகின்றன. குத்தகைஉடன்படிக்கை இல. 05 இன் விதிமுறைகளின் பிரகாரம் 2021 மார்ச் 14 முதல் அதிகரிக்கப்பட வேண்டிய குத்தகை வாடகை அறவிடப்பட்டிருந்த போதிலும் 2017 மார்ச் 13 முதல் 2021 மார்ச் 13 வரையிலான காலப்பகுதிக்கான அதிகரிக்கப்பட்ட குத்தகை வாடகையான ரூபா 3,908,016 அறவிடப்பட்டிருக்கவில்லை. அதேபோல், இந்த இரண்டுதொழிற்சாலைகளிலும் 2020 ஏப்ரல் முதல் 2021 மார்ச் வரை அறவிடப்பட்டுள்ள குத்தகை வாடகை தொடர்பான விபரங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.				
(உ)	2014 ஆம் ஆண்டு முதல் தற்போதுள்ள குத்தகை உடன்படிக்கைகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை, மேலும் குத்தகை	2023	குத்தகை உடன்படிக்கைகளை நாளதுவரையாக்கி அதன் உட்பிரிவுகளின் பிரகாரம் உடன்படிக்கையை செயற்படுத்துவத	நிறுவனம் குத்தகை ஒப்பந்தங்களை நாளதுவரையாக்கல் செய்யவில்லை.	குத்தகை ஒப்பந்தங்களை நாளதுவரையாக்கல் செய்வதற்கும் மற்றும் கட்டிடங்களுக்கு காப்புறுதி செய்வதற்கும்

	உடன்படிக்கைகளின் 5 ஆம் உட்பிரிவின் குத்தகையாளரின் xi ஆம் நிபந்தனைகளின் பிரகாரம் குத்தகையாளரால் கட்டிடங்கள் மற்றும் ஏனைய நிரந்தர நிர்மாணங்கள் உட்பட அனைத்து அபாயங்களும் காப்புறுதி செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.		ற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஊ)	கம்பனிக்குச் சொந்தமான மூன்று தொழிற்சாலைகளை குத்தகைக்கு விடும்போது குத்தகையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளிருப்பு சொத்துக்கள் தொடர்பான ஆவணங்கள் மற்றும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படாததால், குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் விபரங்கள் மற்றும் அச் சொத்துக்களின் இருக்கும் தன்மையை கணக்காய்வால் கண்டறிய முடியவில்லை.	2023	குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் விபரமான பட்டியல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்ட சொத்துகள் பற்றிய அறிக்கைகள் மற்றும் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் இதுவரை தயாரிக்கப்படவில்லை.	குத்தகைதாரர்களால் கையேற்கப்பட்ட சொத்துக்கள் குறித்த ஆவணங்கள், இதுவரை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

3.11 எல்கடுவ பிளாண்டேசன் லிமிடெட் கம்பனி

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்த பொறுப்புக்கள் ரூபா	தேறிய சொத்துக்கள் ரூபா	வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்)	அபிப்பிராயம்
2021	1,673,448,658	992,296,484	681,152,174	326,161,829	முனைப்பழியுள்ள
2022	-	-	-	-	
2023	-	-	-	-	

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
01	1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய சட்டத்தின் II ஆம் பகுதியின் 16(1) ஆம் பிரிவு, 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் 15 மற்றும் 16 ஆம் பிரிவுகளின் பிரகாரம் தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் தவணைப் பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மிகை கட்டண தொகையுடன் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 28,948,985 தொகையும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா	2021	நியதிச்சட்ட பொறுப்புக்களை உரிய பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படல்	கம்பனியின் ஆரம்பம் தொடக்கம் நிலவும் நிதி பற்றாக்குறை காரணமாக ஊழியர்களின் சட்ட ரீதியான கொடுப்பனவுகளை உரிய முறையில் கிரமமாக தீர்ப்பதற்கு கம்பனி தவறியுள்ளது. வரிசை அமைச்சின் தலையீட்டுடன் மற்றும் பொது திறைசேரியின் நிதி ரீதியான பங்களிப்புடன் நிலுவையாக காணப்படும் நியதிச் சட்ட கொடுப்பினை தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்ட	பொது திறைசேரியின் ஊடாக நிலுவை நியதிச்சட்ட கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு ரூபா 522.68 மில்லியன் வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. பணம் கிடைக்கவில்லை.

					276,416,074 தொகையும் தோட்ட ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கு (ESPS) ரூபா 9,603,595 தொகையும், இலங்கை தோட்டக்காரர்களின் சேமலாப நிதியத்திற்கு (CPPS) ரூபா 17,343,877 தொகையும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. போதிலும் இந்த நிலுவை பணத்தை முழுமையாக செலுத்தி தீர்ப்பதற்கு முடியாது உள்ளது. 2022 ஆம் ஆண்டு முதல் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரிய கொடுப்பனவுகளை உரிய முறையில் மேற்கொண்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டு முதல் ஊழியர் சேமலாப நிதியம், தோட்ட ஊழியர் நலன்புரி நிதி மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுகள் ஆகிய நீதி சட்ட கொடுப்பனவுகளும் தொடர்ச்சியாக செலுத்தப்படும்.
02	1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் அதிகாரச்சட்டத்தின் 02 ஆம் பிரிவின் 5(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்று	2021	நியதிச்சட்ட பொறுப்புக்களை உரிய பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படல்	வரிசை அமைச்சின் தலையீட்டுடன் மற்றும் பொது திறைசேரியின் நிதி ரீதியான பங்களிப்புடன் நிலுவையாக காணப்படும்	பொது திறைசேரியின் ஊடாக நிலுவை நியதிச்சட்ட கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு ரூபா 522.68 மில்லியன் வழங்குவதற்கு

சென்றுள்ள அல்லது மரணமடைந்து 30 நாட்களினுள் ஊழியருக்கு உரிய பணிக்கொடை கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அதற்கமைய உரிய திகதியில் பணிக்கொடை செலுத்தப்படாத காரணத்தால் 1996 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய பணிக்கொடைகளின் பெறுமதி 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக ரூபா 171,873,551 ஆகும். 2021 ஆம் ஆண்டின் இறுதி அளவில் ரூபா 51,562,065 தொகையான மிகை கட்டணங்களும் செலுத்த வேண்டியதாக காணப்பட்டது.	நியதிச் சட்ட கொடுப்பினை தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்ட போதிலும் இந்த நிலுவை பணத்தை முழுமையாக செலுத்தி தீர்ப்பதற்கு முடியாது உள்ளது. 2022 ஆம் ஆண்டு முதல் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரிய கொடுப்பனவுகளை உரிய முறையில் மேற்கொண்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டு முதல் ஊழியர் சேமலாப நிதியம், தோட்ட ஊழியர் நலன்புரி நிதி மற்றும் பணிக்கொடை கொடுப்பனவுகள் ஆகிய நீதி சட்ட கொடுப்பனவுகளும் தொடர்ச்சியாக செலுத்தப்படும்.	அங்கீகாரம் கிடைத்துள்ளது. பணம் கிடைக்கவில்லை.

03	கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் நிதி பீடத்தின் மூலம் 2021 ஜூன் மாதத்தில் வெளியிடப்பட்ட ஆராய்ச்சி ஒன்றின் பிரகாரம் 121 ஆம் ஆண்டில் ஒரு ஹெக்டேயரில் அங்கீகரிக்கப்பட்ட இறப்பர் பால் விளைச்சலானது 800 கிலோகிராம்கள் முதல் 1000 கிலோ கிராம்களுக்கு இடைப்பட்டதாக காணப்பட்டதுடன், கம்பனியில் அந்த பெறுமதி 326 கிலோகிராம்கள் முதல் 711 கிலோகிராம்கள் இடைப்பட்டதாக காணப்பட்டது. பயன்படு ஆயுட்காலத்தை மிஞ்சிய பயிர்கள் அகற்றப்பட்டு புதிய பயிர்கள் நடப்பட்டிருக்காமை இறப்பர் பால் விளைச்சல் வீழ்ச்சி அடைந்தமைக்கு காரணமாக அமைந்திருந்தது.	2021	விளைச்சலை அதிகரிக்கும் புதிய இறப்பர் பயிர்ச்செய்கைக்காக மற்றும் ஒட்டு இறப்பர் பயிர்ச்செய்கை மூலம் இறப்பர் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	கம்பனியில் தற்போது காணப்படும் இறப்பர் பயிற்சிகையானது 73 சதவீத விளைச்சல் இல்லாத ஆயுட் காலம் 60 வருடங்களை விட பழைமையான இறப்ப பயிர்கள் காணப்பட்டது டன், அதிக விளைச்சலுட னான ஒட்டு இரப்பர் பயிர்ச்செய்கையை 27 சதவீதத்தினை விட குறைவான பெறுமதியை கொண்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் நிலவிய அதிக மழை வீழ்ச்சி காரணமாக ஹபுகஸ்பிட்டியை தோட்டத்தில் 110 நாட்களும், இந்த தோட்டத்தில் 124 நாட்களும் மில்லவான தோட்டத்தில் 110 நாட்களும் எனுமாறு பால்	விளைச்சலை அதிகரிக்கும் புதிய இறப்பர் பயிர்ச்செய்கை மூலம் இறப்பர் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

				வெட்டுவதற்கு முடியாது போன காரணத்தால் இறப்பு விளைச்சல் குறைவதற்கு தாக்கமளித்தி ருந்தது.	
04	விழுந்த தேங்காய்களுக்கு தொழிற்சாலையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வீதமானது 5 சதவீதமாக காணப்பட்ட போதிலும் கம்பனியின் 2021 ஆம் ஆண்டின் உள்ளபடியான தேங்காய் விளைச்சல் ஆனது 1,060,867 ஆக காணப்பட்டதுடன் விழுந்த தேங்காய்களின் எண்ணிக்கை 316,618 ஆக காணப்பட்டமையால் அது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட 25 சதவீத உயர்வாக காணப்பட்டது.	2021	தேங்காய் பறிக்கும் பணியை உரிய முறையில் முகாமை செய்வதன் மூலம் விழும் தேங்காய்களின் சதவீதத்தினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	தற்போது களத்தில் மரம் ஏறுவதன் மூலம் தேங்காய் பறிப்பதில் உள்ள குறைவு மற்றும் அதிக உயரமான தேங்காய் மரங்களுக்கு ஏறுவதற்கு தயக்கம் காட்டப்படுகின் றமை ஆகிய காரணங்களா ல் தேங்காய்கள் விழும் எண்ணிக்கை தொடர்ச்சியா க அதிகரித்துள் ளது. கொவிட் 19 தோற்று நோய் நிலைமையின் மத்தியில் நாடு அடிக்கடி மூடப்பட்டமை யால் ஒப்பந்ததாரர்க ள் தேங்காய் பறிப்பதற்கு வரவழைக்க முடியாது	தேங்காய் பறிக்கும் பணியை உரிய முறையில் முகாமை செய்வதன் மூலம் விழும் தேங்காய்களின் சதவீதத்தினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவி ல்லை.

இருந்தமையால் விழும் தேங்காய்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

05	நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிர்வாக சபை அங்கீகரித்த வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2024 யூன் 14 ஆம் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த துடன், வரைபு ஆண்டறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.	2021	வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன குறித்துரைத்த திகதியில் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.	2021 ஆம் ஆண்டில் கணக்காய்வு அறிக்கை கிடைத்ததும் உடனடியாக உடனடியாக தற்போது சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ள 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரிய வரைபு ஆண்டறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்த்து உள்ளோம். மேலும் 2024 ஆம் ஆண்டுக்கு உரிய பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப் பட்ட வருடாந்த நிதிக்கூற்றுக்க ளை உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னதாக கணக்காய்வா	2024 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையிலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

ளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற் கும் தற்போது நடவடிக்கைக ள் முன்னெடுக்கப் பட்டவாறு காணப்படுகின் றன.

- 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் இறுதிக் கணக்கு அறிக்கைகள் 2024 ஒக்தோபர் 10 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
- 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கொடுக்கல் வாங்கல் அறிக்கை தயாரிக்கப்பட்டவாறு உள்ளது.

3.12 மக நெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண (தனியார்) கம்பனி

	மொத்தச் சொத்துக்கள்	மொத்தப் பொறுப்புக்கள்	உரிமையாண்மை	வரிக்கு முன் இலாபம்/நட்டம்	அபிப்பிராயம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	
2021	13,411,591,607	10,949,241,250	300	634,734,765	மறுப்பு அபிப்பிராயம்
2022	-	-	-	-	-
2023	-	-	-	-	-

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1	கட்டுப்பாட்டு கணக்குகளை பராமரிக்காமல் சுமார் 6645 கணக்குகளை பொது பேரேட்டில் கம்பனி பராமரித்து வந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் நிறுவனம் கணக்குக் குறியீட்டை வழங்காமல் 496 பேரேட்டு கணக்குகளை பராமரித்து வந்ததைக் காண முடிந்தது.	2021	பொதுப் பேரேட்டில் கணக்குகளை உருவாக்கும் முன் முறையான அதிகாரம் மற்றும் ஒலிக் கட்டுப்பாடு செயல்படுத்தப்பட வேண்டும்.	உடன்பட்டுக் கொண்டனர். தற்போது கம்பனியில் பயன்படுத்தப்படும் கணக்கியல் மென்பொருள் கட்டுமானத் துறையின் தன்மைக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட அமைப்பு இல்லை.	2022 கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.
2	2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 498 மில்லியன் தொகையான நடை பெற்றுக் கொண்டிருக்கும் 04 சட்ட வழக்குகள் மற்றும் நிகழத்தக்க பொறுப்புகள் குறித்து SME களுக்கான SLFRS இன் 21.15 மற்றும் 21.16 ஆம்	2021	SME களுக்கான SLFRS இன் பந்தி இலக்கம் 21.15 மற்றும் 21.16 இன் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.	உடன்பட்டுக் கொண்டனர். எதிர்கால அறிக்கைகளில் தொடர்புடைய விவரங்களை வெளியிப்படுத்துவதற்கு நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.	2022 கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

	பிரிவின் பிரகாரம் கம்பனி எந்த வெளிப்பாடுத்தலினையும் செய்திருக்கவில்லை.				
3	SME களுக்கான SLFRS இன் பிரிவு 33 இன் பிரகாரம் நிதி கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	2021	SME களுக்கான SLFRS இன் பிரிவு 33 இன் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்	உடன்படவில்லை. தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள் குறிப்பு எண். 13.1 இல் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன, மேலும் நிதி நிலைமை கூற்றுடன் மொத்தங்கள் இணைக்கப்பட்டுள்ளன.	2022 கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.
4	ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் ஆரம்ப இருப்பு நிதி கூற்றுக்களின் பிரகாரம் ரூபா. 1,081 மில்லியன் ஆகும் மற்றும் நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா. 984 மில்லியன் ஆகும். எனவே, ரூபா. 96 மில்லியன் வேறுபாடொன்று காணப்பட்டது.	2021	நிதி கூற்றுக்களுக்கு சரியான தொகைகள் எடுக்கப்படல் வேண்டும் மற்றும் வேறுபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.	உடன்பட்டனர். ஆரம் மீதிகளை பிரதியெடுக்கும்போது எழுத்து பிழைகள் இருக்கலாம். எதிர்கால அறிக்கைகளில் சொத்து பதிவேட்டு பிழையை சரிசெய்வோம் என்று எதிர்பார்க்கிறோம்.	2022 கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.
5	கம்பனி, செயற்திட்ட ரீதியான நிர்மாண செலவினை செலவு ஏற்படும் நேரத்தில் அங்கீகரித்திருந்தது மற்றும் செயற்திட்டத்திற்கு சான்றளிக்கப்படாத போது மீண்டும் குறை வேலை நிர்மாணப் பணிக்கு மீண்டும் மாற்றல் செய்யப்பட்டது. அதன் பிரகாரம், செலவானது	2021	ஒப்பந்த செலவுகள் வருமானத்துடன் சேர்த்து செய்யப்பட்டதாக அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன் கட்டுமானம் நிறுவனத்திற்கு ஒரு சொத்தாக இல்லாததால், ஏற்பட்ட செலவு நிதிக் கூற்றுக்களின் கீழ் ஒரு தனி சொத்தாக	உடன்படவில்லை. நிறைவு கட்டத்தை அங்கீகரிக்காத வரையிலும் ஒரே நேரத்தில் செய்யப்படும் துணை ஒப்பந்த வேலைகளின் வருமானம் மற்றும் செலவுகள் அவை எழும் போதே பதிவு	2022 கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

	கம்பனியினால் ஒரு சொத்தாக கருதப்பட்டது. இதன் விளைவாக 2021 திசம்பர் 31 இல் உள்ளவாறு தற்போதைய சொத்துக்கள் மற்றும் இலாபம் ரூபா 853 மில்லியனால் மிகையாக குறிப்பிப்பட்டிருந்தது.		அங்கீகரிக்கப்படக்கூடாது.	செய்யப்படும்.	
6	கம்பனியின் நிதி கூற்றுக்களின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற வேண்டிய மீதி மற்றும் செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா. 5,786.94 மில்லியன் மற்றும் ரூபா. 6,857.93 மில்லியன் ஆகும். எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிதி கூற்றுக்களின் பிரகாரம் உரிய நிலுவைகள் முறையே ரூபா. 8,030.04 மில்லியன் மற்றும் ரூபா. 6,016.56 மில்லியன் ஆகும். வேறுபாடுகள் முறையே ரூபா. 2,243.10 மில்லியன் மற்றும் ரூபா.841.37 மில்லியன் தொகையாக அவதானிக்கப்பட்டதுடன், இணக்க கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2021	வேறுபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	உடன்பட்டனர். வழுக்களை சரிசெய்து, எதிர்கால அறிக்கைகளில் போதுமான வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளுவதற்கு எதிர்பார்க்கிறோம்.	2022 கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.
7	2023 மார்ச் 20 அன்று எடுக்கப்பட்ட CP/23/0394/608/033 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், கம்பனியினை கலைப்பதற்கு	2021	தொடர்ந்தியங்கும் நிலைமை நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.	உடன்பட்டனர். எதிர்கால அறிக்கைகளில் கலைப்பு / தொடர்ந்தியங்கும் நிலையினை வெளிப்படுத்த நாங்கள்	2022 கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

	நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டார். எனினும் SME களுக்கான SLFRS இன் பிரிவு 3.9 இன் பிரகாரம் நிதி கூற்றில் இது வெளியிடப்பட்டிருக்கவில்லை.			எதிர்பார்க்கிறோம்.	
8	2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 78 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியால் பங்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை.	2021	அரசாங்கத்தின் உரிமையை பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.	கருத்துரை பெறப்படவில்லை.	அவதானிப்பின்படியே தற்போதைய நிலைமை.
9	சேம்பர் ஆ/ப் கன்ஸ்ட்ரக்ஷன் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் நேஷனல் அசோசியேஷன் ஆ/ப் கான்ட்ராக்டர்களுடன் கூட்டு முயற்சியில் கூட்டு சேர வேண்டும் என்பதற்கு 2004 ஆகஸ்ட் 18 ஆம் திகதியிடப்பட்ட 04/0848/004/013-ஐ ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், மேற்படி அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் ஒரு கூட்டு முயற்சி பங்குடமையினை நிறுவுவதற்கு பதிலாக ஒரு வரையறுக்கப்பட்ட பொறுப்புடைய தனியார் கம்பனியொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதை	2021	அரசாங்கத்தின் உரிமையை பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.	கருத்துரை பெறப்படவில்லை.	அவதானிப்பின்படியே தற்போதைய நிலைமை.

	அவதானிக்க முடிந்தது.				
10	கம்பனியின் பெரும்பான்மையான உரிமைகள் திறைசேரிக்கு வழங்கப்படுவதுடன் மீதியானது வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்படும் என்பதனை உள்ளடக்கியதாக கம்பனியின் அமைப்பு அக விதியினை திருத்தம் செய்வதற்கு 2013 பெப்ரவரி 18 ஆம் திகதியிடப்பட்ட 13/0134/505/004 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும், கம்பனி அமைப்பு அக விதியினை திருத்தியிருக்கவில்லை.	2021	கம்பனியின் அமைப்பு அக விதியினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	இதனை நடைமுறைப்படுத்த வேண்டியது வரிசை அமைச்சின் பொறுப்பாகும். இது குறித்து, முன்னாள் தலைவர், அமைச்சிடம் தெரிவித்திருந்தும், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்பின்படியே தற்போதைய நிலைமை.
11	100,000 Km சாலைத் திட்டத்தின் வேலை கட்டளைகள் தொடர்பாக, 2021 ஆம் ஆண்டில் சாலை கட்டுமானத்திற்கான கம்பனியின் இலக்கு எண்ணிக்கை 1934 ஆகவும், நீளம் 3010.69 Km ஆகவும் இருந்தது. ஆனால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்ட சாலைகளின் எண்ணிக்கை 774 ஆகவும் மற்றும் நீளம் 1106.11 Km ஆகவும் இருந்தது. அதன் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த	2021	திட்டமிட்ட காலக்கெடுவுக்குள் நிர்மாணப் பணிகளை விரைவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	கோவிட்-19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் வெடிக்கவைக்கும் பொருட்கள் இல்லாத காரணத்தினால் கம்பனியினால் தேவையான முன்னேற்றத்தை அடைய முடியவில்லை.	தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

	முன்னேற்றம் 40 சதவீதமாக காணப்பட்டது. மேலும் நிறுவனம் எதிர்பார்த்த முன்னேற்றத்தில் இருந்து 50 சதவீத பௌதீக முன்னேற்றத்தைக் கூட அடையத் தவறியிருந்தது.				
12	சேவை வழங்குநர்களைத் தெரிவு செய்வதில் கம்பனி பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றியிருக்காததுடன் தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குநர்களுக்கு சாதகமான பல நிபந்தனைகளை உள்ளடக்கிய விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குநர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இதன் பிரகாரம், சேவை வழங்குனர்களை தெரிவு செய்வதில் நிறுவனம் வெளிப்படைத்தன்மையின்றி செயற்பட்டமை அவதானிக்கப்பட்டது.	2021	பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	துணை ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பெறுகை நடைமுறையினை கம்பனி பின்பற்றவில்லை. பதிவுசெய்யப்பட்ட துணை ஒப்பந்தக்காரர்களை மதிப்பிடுவதன் மூலம் துணை ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டன.	அவதானிப்பின்படியே தற்போதைய நிலைமை.
13	இலாபத்தின் ஒரு சதவீதம் பொருள் கனிய சிட்டைக்கு மேலதிகமாக வேலையின் துணை ஒப்பந்தத்தின் பெறுமதியில் சேர்க்கப்பட்டது , இது விலைமனுக்களினை கோரி சேவை வழங்குநர்களிடமிருந்து போட்டி விலையைப் பெற்றுக் கொள்ளுவதற்குப் பதிலாக வீதி அபிவிருத்தி அதிகார	2021	பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	பொருள் கனிய சிட்டையுடன் ஒரு நிலையான இலாப எல்லை சேர்க்கப்பட்டது. அனைத்து தரப்பினரும் பொருள் கனிய சிட்டையின் பெறுமதிகள் மற்றும் நிலையான இலாப எல்லை சதவீதங்கள் அறிவார்கள். எனவே,	அவதானிப்பின்படியே தற்போதைய நிலைமை.

	சபையினால் தயாரிக்கப்பட்டது.			நிறுவனம் போட்டி விலைமனு கோரலினை மேற்கொள்ளவில்லை.	
14	கம்பனி ஒப்பந்த உடன்படிக்கைகளில் ஈடுபடுவதற்கு பதிலாக துணை ஒப்பந்தக்காரர்களுடனும் மற்றும் சேவை வழங்குநர்களுடனும் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளதை அவதானிக்க முடிந்தது.	2021	பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	கம்பனி முறையான பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றவில்லை.	அவதானிப்பின்படியே தற்போதைய நிலைமை.
15	இதற்கு மேலதிகமாக, பெறுகை வழிகாட்டியின் துணை வெளியீடு 39 இன் பிரிவு 5.3.5 இன் பிரகாரம், ஒரு ஒப்பந்ததாரர் ரூபா. 150 மில்லியன் முதல் ரூபா. 300 மில்லியன் வரை ஒப்பந்தத்தை மேற்கொள்ள C3 வகுப்பு நியமத்தையும் ரூபா.50 மில்லியன் முதல் ரூபா. 150 மில்லியன் வரை ஒப்பந்தத்தை மேற்கொள்ள C4 வகுப்பு நியமத்தையும் கொண்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், ரூபா. 150 மில்லியனுக்கும் அதிகமான 2 சந்தர்ப்பங்களும், ரூபா. 50 மில்லியனுக்கும் அதிகமான 6 சந்தர்ப்பங்களும் மாதிரி கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன மற்றும் C7 வகுப்பு நியமத்தையும் கொண்ட ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தம்	2021	பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	உடன்படவில்லை. ஒவ்வொரு வகுப்பு நியமத்தினதும் நிதி ரீதியான வரம்பு 26.11.2020 ஆம் திகதியிடப்பட்ட 20/1952/319/018 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் திருத்தம் செய்யப்பட்டது. C4 வகுப்பு நியமத்திற்கான உச்ச நிதி ரீதியான வரம்பு ரூபா. 900 மில்லியன் ஆகும் மற்றும் C3 வகுப்பு நியமத்திற்கான உச்ச நிதி ரீதியான வரம்பு ரூபா. 1500 மில்லியன் ஆகும்.	தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

வழங்கப்பட்டது.

16	சேவை வழங்கல் ஒப்பந்தத்தின் பிரிவு எண். 3(எ) இல் செயல்திறன் பாதுகாப்பு பிணையானது மதிப்பிடப்பட்ட ஒப்பந்த பெறுமதியில் 10 சதவீதமாக இருக்க வேண்டும் என்று கூறிகின்றது, எவ்வாறாயினும், ரூபா. 125,730 மில்லியன் தொகையான 1753 எண்ணிக்கையான வேலைக்கான கட்டளைகளில் ரூபா. 1,113 மில்லியன் தொகையான 145 வேலைக்கான கட்டளைகளுக்கு மாத்திரம் கம்பனியினால் செயல்திறன் பாதுகாப்பு பிணை பெறப்பட்டதை அவதானிக்க முடிந்தது.	2021	பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.	கருத்துரை பெறப்படவில்லை	தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டி ருக்கவில்லை.
17	2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் 100,000 Km சாலை திட்டத்தின் நிர்மாண வேலைகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது கம்பனிக்கு ரூபா. 193,518 மில்லியன் தொகையான 2481 எண்ணிக்கையான வேலைக்கான கட்டளைகளை வழங்கியுள்ளது. 2481 கட்டளைகளில் ரூபா. 32,736 மில்லியன் தொகையான 351 வேலைக்கான கட்டளைகள் இரத்து செய்யப்பட்டன மற்றும் ரூபா. 29,130 மில்லியன் தொகையான 306	2021	அரசாங்கத்திற்கு போட்டி விலைகள் மற்றும் அனுபவம் வாய்ந்த ஒப்பந்தக்காரர்களின் சேவைகளின் அதிகபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்க ாக, திறந்த போட்டி ஏல செயல்முறைக்கு அமைவாக ஒப்பந்தத்தை வழங்க வேண்டும்.	இயற்கையானது.	அவதானிப்பின்படி யே தற்போதைய நிலைமை.

	கட்டளைகளின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. ரூபா. 5,920 மில்லியன் தொகையான 71 கட்டளைகளின் ஒப்பந்தப் வேலைகள் கம்பனியால் நேரடியாகச் செயல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இது மொத்த வேலைகளுக்கான கட்டளைகளில் 03 சதவீதம் மட்டுமே ஆகும். மீதமுள்ள 1,753 மொத்த கட்டளைகளில் ரூபா. 125,730 மில்லியன் பெறுமதியான 97 சதவீதத்திற்கு சமமானவை வெளி சேவை வழங்குநர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டன. எனினும், துணை ஒப்பந்தங்களை வழங்குவது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2008 ஆகஸ்ட் 01 ஆம் திகதியிடப்பட்ட சபைப் பத்திரத்திற்கு முரணானதாக காணப்பட்டது.				
18	HSR இற்கு 25 சதவவீத இலாப எல்லையினை சேர்ப்பதன் மூலம் தீர்மானிக்கப்படும் ஒப்பந்த பெறுமதி குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது கம்பனிக்கு வேலைக் கட்டளைகளினை வழங்கியது. கம்பனியின் இயக்குனர் சபை	2021	அரசாங்கத்திற்கு உயர்ந்த பலனைப் பெற்றுக்கொள்ளும் வண்ணம் அரசாங்கத்தின் நிதிகள் வினைத்திறனான மற்றும் விளைதிறனான முறையில் பயன்படுத்தப்படல் வேண்டும்.	கருத்துரை பெறப்படவில்லை	அவதானிப்பின்படியே தற்போதைய நிலைமை.

	தீர்மானத்தின் பிரகாரம், ஒப்பந்தமானது மொத்த தொகை முறையாக சேவை வழங்குநர்களுக்கு கொடைமனைவ செய்யப்பட்டது மற்றும் சேவை வழங்குநர்கள் வேலைக் கட்டளைகளால் குறிப்பிடப்பட்ட பெறுமதியில் 20 சதவீத இலாப எல்லையினை பெறுகிறார்கள் மற்றும் 05 சதவீதம் நிறுவனத்தால் பேணப்பட்டது. அதன்பிரகாரம், செயற்திட்ட நடவடிக்கைகளில் தலையிடாமல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கும் சேவை வழங்குநர்களுக்கும் இடையில் ஒரு இடைத்தரகராக செயல்படுவதன் மூலம் மட்டுமே மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இந்த கம்பனி ரூபா. 652 மில்லியன் தொகையினை உழைத்திருந்தது.				
19	கம்பனி 2020 ஆம் ஆண்டில் 100,000 Km சாலைத் திட்டத்தின் சாலை நிர்மாண செயல் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கு மாகாண, மாவட்ட மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களை நியமித்துள்ளதுடன் கம்பனி 2021 ஆம் ஆண்டில் ஒருங்கிணைப்பாளர்களுக்கான	2021	ஒருங்கிணைப்பாளர்களுக்கு அவர்களின் வேலைகளின் செயல் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்த பின்னரே பணம் செலுத்தப்படல் வேண்டும் மற்றும் தொடர்புடைய விபரங்களை கணக்காய்வுக்கு வழங்கப்படல் வேண்டும்.	உடன்படவில்லை. உள்ளூராட்சி பிரதிநிதிகளின் அறிவுறுத்தல்களின் பேரில் ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். கம்பனி முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையினை பின்பற்றியது மற்றும்	தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கொடுப்பனவுகளாக ரூபா. 39 மில்லியனைச் கொடுப்பனவு செய்துள்ளது. எவ்வாறாயினும், ஒருங்கிணைப்பாளர்களின் ஆட்சேர்ப்பு தொடர்பான விபரங்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களால் வழங்கப்பட்ட செயல் முன்னேற்ற அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, தகுதியான நபர்கள் முறையான மற்றும் வெளிப்படையான முறையில் பணியமர்த்தப்பட்டார்களா அல்லது வேலையின் செயல் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்து ஒருங்கிணைப்பாளர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டதா என்பதை கணக்காய்வினால் சரிபார்க்க முடியவில்லை.

அவர்களின் தகுதிகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

3.13 மகநெகும எழுல்சன் புறடக்சன் கம்பனி பிறைவேட் லிமிட்டட

	மொத்தச் சொத்துக்கள்	மொத்தப் பொறுப்புக்கள்	உரிமையாண்மை	வரிக்கு முன் இலாபம்/நட்டம்	அபிப்பிராயம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	
2021	240,820,147	182,177,970	58,642,177	7,117,410	முனைப்பழியுள்ள
2022	-	-	-	-	-
2023	-	-	-	-	-

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1	எஸ்எம்ஈகளுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் 13 ஆம் பிரிவு – சரக்கிருப்புக்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு முன்னர் ஒருமிக்ஸ் லங்காவின் கட்டுப்பாட்டில் இருந்த கம்பனிக்கு சொந்தமான ரூபா 43.94 மில்லியன் கிரயமான தார் இருப்பு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை. எனவே, இருப்பின் இருக்கும் தன்மை மற்றும் சரியான தன்மையை கணக்காய்வின் போது சரிபார்க்க முடியாதிருந்தது.	2021	எஸ்எம்ஈகளுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் 13 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும்.	விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.	2021 ஆம் ஆண்டுக்குப் பிறகு, கணக்கீட்டு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.
2	ECB இன்டர்நேஷனலின் செலுத்த வேண்டிய ரூபா 24,500,000 நீண்டகால நிலுவை மீதி 2021 திசெம்பர் 31	2021	கணக்காளர் செலுத்த வேண்டியதாக இனங்காண்பதற்கு முன்னர்	வர்த்தக உயர் நீதிமன்றத்தில் நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு கிடைக்கும் வரை செலுத்த	2021 ஆம் ஆண்டுக்குப் பிறகு, கணக்கீட்டு அறிக்கைகள்

	இல் உள்ளவாறு 08 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது. எனினும், இந்த மீதி தொடர்பான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.		முறையான ஆவணச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.	வேண்டிய நிலுவைத் தொகையை நிறுத்தி வைக்க கம்பனி நிர்வாகம் முடிவு செய்துள்ளது.	கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.
3	உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரித்துள்ள உத்தியோகத்தர் ஒருவர் உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான அல்லது ரூபா 50,000 மாதாந்த போக்குவரத்து படியை பெற்றுக்கொள்வதற்கான தெரிவை கொண்டுள்ளது. ஆனால், கம்பனி மீளாய்வாண்டில் கம்பனியின் பின்வரும் உத்தியோகத்தர்களுக்கான உரித்துள்ள வரம்புகளை மீறி 2021 ஆம் ஆண்டில் ரூபா 3,140,000 ஐ செலுத்தியிருந்தது.	2021	மேலதிகமாக செலுத்திய போக்குவரத்து படியை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் பொது முயற்சிகள் சுற்றறிக்கை அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டும்.	கருத்துரை கிடைக்கவில்லை.	தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.
4	2004 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய 04/0848/004/013-ஐ ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிர்மாணத் தொழில்துறை மற்றும் தேசிய ஒப்பந்ததாரர்கள் சங்கத்துடன் கூட்டு முயற்சியில் ஈடுபடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அமைச்சரவையின் அங்கீகாரத்தைப்	2021	அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	கருத்துரை கிடைக்கவில்லை.	தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.

	பெற்றுக்கொள்வதற்கு முன்னர், 2004 யூன் 09 ஆம் திகதிய 795/2004 ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சபை தீர்மானத்தின் பிரகாரம் மகநெகும எழுல்சன் (பிறைவேட்) கம்பனி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. எனினும், அமைச்சரவையின் அங்கீகாரம், திறைசேரியின் அங்கீகாரம் அல்லது வரிசை அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.				
5	கம்பனியின் அமைப்பு அகவிதியை திருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், கம்பனியின் பெரும்பாண்மை உரிமையைப் பெற்றுக்கொள்வது திறைசேரியில் வழங்கப்படும், மீதமுள்ளவை 2013 பெப்ரவரி 18 ஆம் திகதிய 13/0134/505/004 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்படும். கம்பனியானது அதற்கிணங்க அமைப்பு அகவிதியை திருத்தியிருக்கவில்லை.	2021	கம்பனியின் அமைப்பு அகவிதியை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	கருத்துரை கிடைக்கவில்லை.	தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.
6	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் 28(2) ஆம் பிரிவின் பிரகாரம் சபை கூட்டங்களில் தலைவரிற்கு	2021	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும்.	கருத்துரை கிடைக்கவில்லை.	தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.

	வாக்களிக்க உரித்துள்ள போதிலும் பங்குதாரர்கள் கூட்டத்தின் தலைவருக்கு கம்பனிகள் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் 10(7) இன் பிரகாரம் வாக்களிப்பதற்கு உரித்தில்லை. 1982 இன் சட்டத்திற்குப் பொருந்தக்கூடிய அமைப்பு அகவிதியின் பிரகாரம் தலைவருக்கு அளிக்கப்பட்ட வாக்களிப்பு வாக்கு 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் 10(7) இன் பிரகாரம் இரத்து செய்யப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை 2018 பெப்ரவரி 20 இல் நடைபெற்ற 2016 ஆம் ஆண்டின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட இரண்டு தீர்மானங்களுக்கு எதிராக வாக்களித்தது, கம்பனியின் தலைவர் தனது வாக்கெடுப்பைப் பயன்படுத்தி அந்த விடயங்களை அங்கீகரித்திருந்தார்.				
7	2023 மார்ச் 20 ஆம் திகதிய CP/23/0394/608/033 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்த கம்பனி உட்பட மூன்று கம்பனிகளை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து மற்றும்	2021	தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்பான பிரச்சனை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.	உரிய நடைமுறைகளைப் பின்பற்றி நிறுவனம் ஒரு கலைப்பாளரை நியமித்துள்ளது. 2023 ஆகஸ்ட் 29 அன்று நடந்த கூட்டத்தில் கலைப்புக்கான ஒப்புதலை சபை வழங்கியுள்ளது.	நிறுவனத்தின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன மற்றும் கலைப்பு செயல்முறை ஆரம்பிக்கப்பட வில்லை.

	நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளருக்கு உத்தரவை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. எனவே, கம்பனியின் தொடர்ந்தியங்கும் தன்மை சந்தேகத்திற்குரியதாகும் . மேலும் RDA இன் ஒத்திசைவின்றி கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.				
8	எஸ்எம்ஈகளுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் 33 ஆம் பிரிவு – தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்களின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் தொடர்புடைய தரப்பினர் உறவின் தன்மை தொடர்பான சரியான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	2021	எஸ்எம்ஈகளுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் 33 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும்.	உடன்பட்டனர். 2022 நிதிக் கூற்றுக்களிள் தேவைக்கேற்ப வெளிப்படுத்தப்படும்.	2021 ஆம் ஆண்டுக்குப் பிறகு, கணக்கீட்டு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.
9	2021 ஆம் ஆண்டுக்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியின் மீது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பங்குரிமை 50 சதவீதமாகவும் பங்கின் பெறுமதி ரூபா 100 ஆகவும் இருந்தமை குறிப்பிடப்பட்டது. எனினும், 2021 ஆம் ஆண்டுக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின்	2021	அரசாங்க உரிமைத்துவம் மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும், அத்துடன் நிதிக்கூற்றுக்களை சான்றுபடுத்துவதற்கு முன்னர் புள்ளிவிபரங்கள் இணக்கம் செய்யப்பட வேண்டும்.	கருத்துரை கிடைக்கவில்லை.	2021 ஆம் ஆண்டுக்குப் பிறகு, கணக்கீட்டு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.

	நிதிக்கூற்றுக்கள் கம்பனியின் மீதான கட்டுப்பாட்டு வட்டி 99 சதவீதமாகவும் பங்கின் பெறுமதி ரூபா 1,000,100 ஆகவும் இருந்தமை குறிப்பிடப்பட்டது. எனவே, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பங்குரிமை முதலீட்டின் பெறுமதிக்கு இடையில் ரூபா 1,000,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.				
10	கம்பனி ரூபா 78,086,970 தொகையை வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து (RDA) பெறவேண்டியதாக இனங்கண்டிருந்தது. எனினும், RDA இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 61,885,785 மாத்திரமே ஆகும். அதன் பிரகாரம் ரூபா 16,201,185 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.	2021	மீதிகளுக்கு இடையிலான வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	கம்பனி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குமிடையிலான கொடுக்கல் வாங்கலின்படி எமது பதிவேடுகளில் ரூபா 78,086,970 எனக் குறிப்பிட்டுள்ளோம். ஆர்.டி.ஏ புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளைப் பற்றி நாங்கள் கருத்து தெரிவிக்க முடியாது. எவ்வித சீராக்கங்களும் தேவையில்லை.	2021 ஆம் ஆண்டுக்குப் பிறகு, கணக்கீட்டு அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.
11	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 78 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு கம்பனியும் அதன் எந்தப் பங்கையும் ஒதுக்கிய திகதியிலிருந்து 2 மாதங்களுக்குள்ளும் கம்பனியிடம் அத்தகைய	2021	அரசாங்கத்தின் உரிமைத்துவத்தையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	கருத்துரை கிடைக்கவில்லை.	அவதானிப்பு போலவே.

	பங்கின் பரிமாற்றம் பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள், அனைத்து பங்குகளின் சான்றறுபடுத்தலை பூர்த்தி செய்து வழங்கத் தயாராக வேண்டும். எனினும், மேற்படி தேவைப்பாட்டின் பிரகாரம் கம்பனி வழங்கிய பங்குச் சான்றிதழ்கள் அறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.				
12	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 133 (i) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் சபை பங்குதாரர்களின் வருடாந்த பொதுக் கூட்டத்தை ஒவ்வொரு கலண்டர் ஆண்டிலும் ஒருமுறை கம்பனியின் ஐந்தொகை திகதிக்குப் பின்னர் 06 மாதங்களுக்குப் பிந்தாமலும், முன்னைய வருடாந்த பொதுக் கூட்டத்திற்குப் பின்னர் பதினைந்து மாதங்களுக்குப் பிந்தாமலும் நடாத்தப்படுவதற்கு அழைக்கப்பட வேண்டும், எனினும், 2016 முதல் வருடாந்த பொதுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	2021	கம்பனிச் சட்ட தேவைப்பாடுகளிற்கு இணங்க செயல்பட வேண்டும்.	கருத்துரை கிடைக்கவில்லை.	அவதானிப்பு போலவே.
13	கம்பனியின் மூலதனப் பங்களிப்பில் பெரும்பகுதி வீதி அபிவிருத்தி அதிகாரசபையால்	2021	அரசாங்க சொத்துக்கள் மற்றும் நிதிகளின் பயன்பாட்டிற்காக	கருத்துரை கிடைக்கவில்லை.	தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு

வழங்கப்பட்டதுடன் கம்பனியின் பிரதான கொள்வனவாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபையாகும். மேலும், கம்பனியின் செயற்பாடுகளால் பயன்படுத்தப்படும் நிலையான சொத்துக்களில் பெரும் சதவீதத்தை வீதி அபிவிருத்தி அதிகாரசபை கொண்டுள்ளது. எனினும், பங்குதாரர் என்ற வகையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை எந்தவொரு நிதி நன்மையையும் பெற்றிருக்கவில்லை.	RDA இற்கு நிதி நன்மைகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	சமர்ப்பிக்கப்பட வில்லை.

3.14 மகநெகும கென்சல்ரன்சி அன்ட் புறஜெக்ட் மனேஜ்மென்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட

	மொத்தச் சொத்துக்கள்	மொத்தப் பொறுப்புக்கள்	உரிமையாண்மை	வரிக்கு முன் இலாபம்/நட்டம்	அபிப்பிராயம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	
2021	561,612,868	122,790,218	438,822,650	22,639,710	முனைப்பழியுள்ள
2022	644,409,151	107,780,179	536,628,972	(4,310,463)	முனைப்பழியுள்ள
2023	552,129,467	21,435,583	530,693,884	(20,657,244)	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1	கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 24,307,200 ஆக இருந்தது, மேலும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 4,086,661 ஆகவிருந்தது. அதன்படி ரூபா 20,220,539 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.	2021 2022 -2023 வரைவு அறிக்கை	இலக்கங்கள் இணக்கஞ்செய்யப்பட வேண்டுமென்பதுடன் நிதிக்கூற்றுக்களை சான்றுறுதிப்படுத்த முன்னர் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட வேண்டும்.	இந்த மாற்றங்களுடன் தொடர்புடைய காரணங்கள் நிறுவனத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணக்கம் செய்யப்பட்டு வருகின்றன.	அவதானிப்பின்படி.
2	கம்பனியானது 2004 ஆம் ஆண்டில் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியாக	2021 2022 -2023 வரைவு அறிக்கை	அமைப்பின் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட	கிடைக்கப்பெறவில்லை.	அவதானிப்பின்படி.

	தாபிக்கபட்டு 2009 இல் 2007 இன் 7ஆம் இலக்க கம்பனி அதிகாரச்சட்டத்தின் கீழ் மீள் பதியப்பட்டது. இந்த கம்பனியை தாபிப்பதற்கான பிரதான நோக்கங்களுக்காக சாத்தியவளக் கற்கைகள் மற்றும் நிர்மாணச் செயற்திட்டங்களிற்கான ஆலோசனை சேவைகளை வழங்கும் அதே நேரம் வீதி அபிவிருத்திக்கான நிர்மானம் மற்றும் மீள் நிர்மான துறைக்காக செயற்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல் இருந்தன. அதனால் கம்பனியானது கம்பனியின் முடிவுறுத்தல் வரையிலும் பணி கலவையை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காகவும் நிர்மாணத்திற்காகவும் மாத்திரம் செய்யப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.		வேண்டும்.		
3	நிர்மாணத்துறையிலுள்ள நிதிப்பிரச்சனையால் போதிய வணிக சந்தர்ப்பங்கள் இன்மையால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான மூன்று கம்பனிகளை முடிவுறுத்துவதற்கும் மகநெகும நிர்மான மற்றும் முகாமைத்துவ (தனியார்) கம்பனியின் அனைத்து 47	-2023 வரைவு அறிக்கை	சிக்கனமற்ற செலவீனத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.	கடந்த ஆண்டு கலைப்பு செயல்முறை தொடங்கியதால், செயல்முறைக்கு உதவ குறைந்தபட்ச ஊழியர்களை நாங்கள் பராமரிக்க வேண்டியிருந்தது . எனவே, கலைப்பாளர் நியமிக்கப்படும்	2024 ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 11,986,057 வை நிறுவனம் வழங்கியிருந்தது.

உத்தியோகத்தர் தன்னார்வ ஓய்வூதிய திட்டத்தை (வீஆர்எஸ்) பயன்படுத்தி ஓய்வூதியம் பெற்றிருந்தனர். எனினும், 2023 ஆகஸ்ட் 11 இன் சபை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியின் முடிவுறுத்தலில் தானாக ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களுக்கு உதவி செய்யும் முகமாக அவர்களில் சிலரை மீள ஈடுபடுத்துவதற்கு இயக்குனர் சபை தீர்மானித்திருந்ததுடன் கம்பனி ஒப்பந்த அடிப்படையில் 25 உத்தியோகத்தர்களை மீளஈடுபடுத்தியிருந்தது. அதற்கு மேலதிகமாக, கம்பனியின் முடிவுறுத்தல் செய்முறை 2023 திசெம்பர் 31 வரையிலும் தொடங்கப்பட்டிருக்காததுடன் மீள் அமர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக 2023 செப்தெம்பர் இலிருந்து 2023 திசெம்பர் 31 வரையிலும் ரூபா. 7,792,993 செலுத்தப்பட்டதுடன் இது சிக்கனமற்ற செலவீனமாக இனங்காணப்பட்டது. மேலும், 25 உத்தியோகத்தர்களை மீள் அமர்த்துவதற்கான அனுமதி மற்றும் வேலைக்கமர்த்துவதற்குஉத்தியோகத்தர்களை தெரிவு வரை, இந்த ஊழியர்களை பராமரிக்கவும், ஊழியர்களை தக்க வைத்துக் கொள்ளவும் வேண்டும்.

மேலும் இந்த பணியாளர் ஆளனியை நாம் பராமரிக்க வேண்டியதுடன் குறைந்தபட்ச ஊழியர்களைத் தக்கவைத்துக்கொள்வதில் தனது விருப்புரிமையைப் பயன்படுத்த இயக்குநர்கள் குழுவால் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

	செய்வதற்கான அடிப்படை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.				
4	வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான கம்பனியின் தலைமை அலுவலகமுள்ள, மெதயாய மற்றும் மாகோ பொறிகள் இடங்களிற்கான வாடகை கட்டணத்தை கம்பனி செலுத்தியிருந்த போதும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் கம்பனிக்கும் இடையில் குத்தகை உடன்படிக்கையோ வாடகை உடன்படிக்கையோ கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	2021 2022 -2023 வரைபு	வாடகை சொத்துக்கள் தொடர்பில் ஆர்டீஏ உடன் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடுவதற்கு நாம் அயராத முயற்சிகளை மேற்கொண்டோம் என்பதையும், அதற்கான நடவடிக்கைகளை அவர்கள் எடுக்கவில்லை என்பதையும், அவர்களுக்கு அடிக்கடி நினைவூட்டி வருகின்றோம் என்பதையும் நாம் பதிவு செய்ய விரும்புகின்றோம்.	அவதானிப்பின்படி.
5	கம்பனி 2016 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் பொறுப்புக்களாக ரூபா 28,351,291 ஆன பங்கிலாப ஒதுக்கத்தை மேற்கொண்டிருந்தது. இருப்பினும், இந்த விவகாரம் தொடர்பான சபை தீர்மானம் மற்றும் AGM தீர்மானம் என்பன கணக்காய்விற்கு கிடைக்கவில்லை.	2022 -2023 வரைவு	இவ் ஏற்பாடுகள் தொடர்பான சபை தீர்மானம் மற்றும் AGM தீர்மானம் என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்	இது பங்கிலாபத்தொகைக்கான ஏற்பாடாக செய்யப்பட்டது. இருப்பினும், இந்த தொகையை செலுத்துவது குறித்து AGM இல் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. எனவே இதனை நடைமுறை பொறுப்புகளாக முன்னெடுத்துச் செல்ல	அவதானிப்பின்படி.

				வேண்டும்	
6	கம்பனி 10003 பங்குகளை வெளியிட்டது இருப்பினும், மூன்று பங்குதாரர்கள் 2023 ஆகஸ்ட் 31 வரையில் பங்குகளுக்கு பணம் செலுத்தியிருக்கவில்லை. இந்த ரூபா 300 பெறத்தக்க வகையில் சேர்க்கப்பட்டுள்ளது. இருப்பினும், கலைபபிற்கு முனனர் பங்குதாரர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட வேண்டும்.	2022	இலக்கங்கள் இணக்கஞ்செய்யப்ப ட வேண்டுமென்பதுட ன் நிதிக்கூற்றுக்களை சான்றுறுதிப்படுத்த முன்னர் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட வேண்டும்.	கூட்டிணைப்பு விதிகளின்படி, நிறுவனம் 03 பங்குகளை ஒதுக்கியுள்ளது மற்றும் முன்னர் பங்கு சான்றிதழ்கள் எதுவும் வழங்கப்படவில்லை. எனவே, நிறுவன செயலாளரினால் சபை ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் அவை 2017 இல் வழங்கப்பட்டுள்ளன.	அவதானிப்பின்படி.
7	2007இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 133 ஆம் பிரிவின் கம்பனியின் பிரகாரம் சபை பங்குதாரர்களுக்கான வருடாநதப் பொதுக் கூட்டத்தை கம்பனியின் ஐந்தொகையின் திகதிக்கு பின்னர் ஆறு மாதங்களுக்கு பிந்தாமலும் மற்றும் முன்னைய வருடாநதப் பொதுக் கூட்டத்திற்குப் பின்னர் பதினைந்து மாதங்களுக்குப் பிந்தாமலும் ஒவ்வொரு கலண்டர் வருடத்திற்கும் ஒரு முறை நடாத்த வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியானது 2019 இற்குப் பின்னர் எந்தவொரு பொதுக்கூட்டத்தையும் நடாத்தியிருக்கவில்லை.	2022 -2023 வரைவு	கம்பனியானது கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும்.	எவ்வித கருத்துக்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.	அவதானிப்பின்படி.

8	நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க எபாது முயற்கிகள் சுற்றறிக்கை மூலம் அரச உடமையாக்கப்பட்ட நிறுவகங்களின் இயக்குனர் சபையானது தேவையான நடவடிக்கை எடுத்து நட்டங்களை பதிவழிக்கலாம். கம்பனியானது தொடர்புபட்ட தரப்பினர்களிடமிருந்து பெற வேண்டிய ருபா 12,658,780 மற்றும் தொடர்புபட்ட தரப்பினருக்கு செலுத்தவெண்டிய ரூபா 13,809,996 தொகையினை பதிவழிப்பு செய்ததது. கம்பனியானது உரிய சபை அங்கீகாரத்தை மாத்திரம் சமர்ப்பித்திருந்தது.	-2023 வரைவு	சரியான பதிவழிக்கப்பட்ட பெறுமதியை மீள்பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.சுற்றறிக்கை செய்முறை பின்பற்றாமல் பதிவழிப்பு அங்கீகரிக்கப்பட மாட்டாது.	எவ்வித கருத்துக்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.	அவதானிப்பின்படி.
9	கம்பனி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் முழுமையாக உடமையாக்கப்பட்ட துணைக்கம்பனியாக உள்ள போதிலும் பதவியணியினர், சம்பள கட்டமைப்பு மற்றும் கம்பனியின் உத்தியோகத்தர்களிற்கு செலுத்தப்படும் ஏனைய படிகளுக்கான அங்கீகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை, அமைச்சின் செயலாளர் அல்லது ஏனைய ஏதேனும் நியதிச்சட்ட	2021	அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டம் (SOR) அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.	மகநெகும கென்சல்ரன்சி மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ சேவைகள் தனியார் நிறுவனத்தின் வணிகத்தை நடத்துவதற்கும் செலவு குறைந்த முறையில் செயல்படுவதற்கும் குறைந்தபட்ச ஊழியர்களை பராமரிக்கிறது.	அவதானிப்பின்படி.

சபைகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கம்பனி அதிகாரசபை மற்றும் அமைச்சின் கட்டுப்பாட்டு அதிகாரத்தை மீறி செயற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

3.15 வரையறுத்த கொழும்பு கொமேர்சல் உரக் கம்பனி – (2021-2023)

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்த பொறுப்புக்கள் ரூபா	தேறிய சொத்துக்கள் ரூபா	வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்)	அபிப்பிராயம்
2021	20,418,328,166	17,407,884,294	3,010,443,872	313,634,970	முனைப்பழியற்றது
2022	22,292,652,703	19,216,903,050	3,075,749,653	234,154,823	முனைப்பழியற்றது
2023	21,124,922,024	17,692,643,357	3,432,278,667	501,143,796	முனைப்பழியற்றது

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
01.	2021 ஆம் ஆண்டில், வெளிநாட்டு உர விநியோகஸ்தர்களுக்கு மக்கள் வங்கியிலிருந்து பணம் செலுத்தப்பட்டு, அந்தத் தொகை நீண்ட காலக் கடனாக மாற்றப்பட்டுள்ள போதிலும் அந்தக் கடனுக்கு வங்கியால் வசூலிக்கப்படும் வட்டித் தொகையான ரூபா 160,447,581 ஆன தொகை ஏனைய பெற வேண்டியவைகளின் கீழ் ஆகும். நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரியிலிருந்து கம்பனிக்கு பணத்தை மீளப்பெற்றுக் கொடுப்பதற்கு	2020/2021 2021/2022	பணத் தொகையை அறவிடுவதற்கான சாத்தியத்தை திறைசேரியால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.	திறைசேரியுடனான ஆலோசனையுடன் வட்டித் தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.	வட்டித் தொகை மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

	உடன்பாடு ஏற்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.				
02.	2021 ஒக்டோபர் 18 இல் 100,224 நானோ நைட்ரஜன் போத்தல்கள் நிறுவனத்திற்கு வழங்குநருக்கு ஒரு போத்தலுக்கு அ.டொ 12.45 வீதம் ரூபா 253,301,126 செலுத்தப் பட்டிருந்ததுடன் பின்னர் ஒரு போத்தலுகான விலை ஐ.அ.டொலர் 10 ஆக குறைக்கப்படுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. வழங்குநருக்கு கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 49,846,406 ஆன தொகையாகும் எவ்வாறாயினும், கணயக்காய்வுத் திகதியல் உள்ளவாறு கம்பனி அத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்காததுடன் அந்தத் தொகை இறுதிக் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.	2021/2022 2022/2023	வழங்குநருக்கு மேலதிகமாக செலுத்திய தொகையை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.	சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	சட்டமா அதிபர் திணைக்களத்தால் உரிய சட்டச் செயற்பாடுகள் நடைமுறையில் உள்ளன.
03.	2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி விவசாயிகளுக்கு பகிர்ந்தளித்தல் மேற்கொள்ளப்படாத ரூபா 3,672,270 பெறுமதியான 500 மில்லி மீற்றர் 1,809 போத்தல் நெனோ நைட்ரஜன் திரவப் பசளை இந்த கம்பனியின் களஞ்சியத்திலும் ரூபா 1,423,030 பெறுமதியான	2022/2023	உர இருப்புகள் அவை காலாவதியாவதற்கு முன்னர் விநியோகிக்கப்பட வேண்டும்.	இத் திகதிவரை அமைச்சிடமிருந்து விநியோகத் திட்டம் அல்லது அறிவுறுத்தல் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை	இந்த விடயம் அமைச்சு செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட போதிலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்

	701 போத்தல் பசளை வரையறுத்த லங்கா பசளை கம்பனியின் களஞ்சியத்திலும் காணப்பட்டதனால் அந்த அனைத்து பசளைகளும் 2023 செப்தெம்பர் மாதம் அளவில் காலாவதியாவதற்கு நிர்ணயிக்கப்பட்டது எனவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. திரவப் பசளை இறக்குமதியின் போது சேதமடைந்த ஒழுக்கு ஏற்பட்டிருந்த போத்தல்களின் எண்ணிக்கை 11 அக இருந்ததுடன் இறக்குமதியின் போது உருவாகியிருந்த பற்றாக்குறை 07 போத்தல்களாகும். அதன் பெறுமதி ரூபா 36,540 ஆகும்.				லை.
04.	வரையறுத்த கொழும்பு வர்த்தக உரக் கம்பனி (CCFC) 1994 யூலை 29 இல் தனியார்மயப்படுத்தப்பட்ட துடன் 1997 சனவரி 20 இல் அரசாங்கத்தால் மீளச் செயற்படுத்தப்பட்டது. 2023 செப்தெம்பர் 22 இல் உள்ளவாறான கணக்காய்வு திகதியில் 15 வித்தியாசமான நிறுவனங்ளிற்கு கடனடிப்படையில் உரம் வழங்குவதற்காக பெறவேண்டிய நிலுவையாகவிருக்கின்ற தொகை ரூபா 22,053,338 ஆக இருந்தது. கம்பனியானது அந்த கடன் மீதிகளை அறவிடுவதற்கு உரிய	2022/2023	கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	1994 இற்கு முன்னர் இருந்த இந்த கடன் மீதி உரிய ஆவணங்கள் எதனையும் வைத்திருக்கவில்லை. இதன் விளைவால் இந்த கடன் மீதியை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கும் சாத்தியம் இருக்கவில்லை.	கடன் மீதியை அறவிடப்பட் டிருக்கவில் லை.

	ஆவணங்களை வைத்திருக்காததுடன் இதன் விளைவால் கம்பனியானது சட்ட நடவடிக்கை எடுக்க தவறியிருந்தது.				
05.	2022 திசெம்பர் 21 ஆந் திகதிய PED 08/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியின் ஊழியர்களுக்கு சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்காக படிகளைச் செலுத்தும் போது அந்த கொடுப்பனவுகளுக்காக கருத்தில் கொள்ளப்படும் ஆண்டிற்கு முன்னைய ஆண்டு தொடர்பாக திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பங்கிலாபம் / வருமான வரி செலுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும் கம்பனியால் 2019/2020, 2020/2021 மற்றும் 2021/2022 ஆம் ஆண்டுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய பங்கிலாபத்தினை செலுத்தாது கம்பனியின் ஊழியர்களால் சேமிக்கப்பட்ட குறுகிய விடுமுறை, மருத்துவ விடுமுறை என்பவற்றிற்காக மொத்தப் பெறுமதி ரூபா 4,113,280 விடுமுறைப் படியும் நிறைவேற்றுத் தரத்திலுள்ள உத்தியோகத்தர்கள் சேமித்த மருத்துவ விடுமுறைக்காக மொத்தப் பெறுமதி ரூபா 1,708,981 படியும் செலுத்தப்பட்டது.	2020/2021 2022/2023	சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	உரிய பங்கிலாபம் மற்றும் வரிகளை செலுத்தவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்கியாழுக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

06.	மஹாவலி அதிகார சபையின் ஹம்பாந்தோட்டை குத்தகை காணியில் ஒரு களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்கு கம்பனியால் 2018/2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட தொடக்க செலவுகளின் மொத்தம் ரூபா 3,732,901 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையும் அதில் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவோ அல்லது ஏனைய வினைத்திறனான செயற்பாடுகளுக்காக பயன் படுத்தப்படவோ இல்லை. அதற்கிணங்க மேற்கூறிய செலவுகள் ஒரு விளைவற்ற செலவாக மாறியிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	2020/2021 2021/2022 2022/2023	வளங்களை வினைத்திறனான பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.	பல தடவைகளில் அரசாங்கத்திலுள்ள மாற்றங்கள் காரணமாக திட்டமிடப்பட்ட வேலைகள் பின்பற்ற இயலாதிருந்தது. ஆகவே எதிர்காலத்தில் அதிகமான உற்பத்தி நோக்கத்திற்காக இந்த காணியை நெறிப்படுத்தவதற்கு திட்டங்கள் செய்யப்பட்டிருந்தது.	குத்தகை காணி தொடர்பில் தீர்மானம் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
07.	வரையறுத்த கொழும்பு கொமேர்சல் பசளைக் கம்பனியின் அனுராதபுர மாவட்டத்தில் இருப்புக்களை பகிர்ந்தளிப்பவராக செயற்பட்ட கமத்தொழில் பயிர்ச் செய்கையாளர்களின் அமைப்பிற்கு கமநல சேவை நிலையங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக வழங்கப்பட்ட பசளைகளில் 2006 ஏப்ரல் 26 ஆந் திகதியிலிருந்து 2009 மே 25 வரையான காலப்பகுதியின் போது 7,508.45 மெற்ரிக் தொன்	2022/2023	கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	உடன்படவில்லை. இந்த நிகழ்வு 2009 இல் ஏற்பட்டதுடன் கம்பனியால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அநுராதபுரம் உயர் நீதி மன்றத்தில் வழக்கு நடைபெறுகின்றன.	கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சட்ட செயற்பாடுகள் தொடருகின்றன.

நிரணப் பசளைகளின் பற்றாக்குறைகள் அவதானிக்கப்பட்டதுடன் அந்த இருப்பு பற்றாக்குறையின் சந்தைப் பெறுமதியான ரூபா 848,003,961 நட்டத்தை இன்றுவரை அந்த அமைப்பிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	

3.16 வரையறுத்த லங்கா உரக் கம்பனி

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்த பொறுப்புகள் ரூபா	மூலதனம் ரூபா	வரிக்கு முன்னரான இலாபம் (நட்டம்) ரூபா	அபிப்பிராயம்
2021	32,098,651,854	25,752,673,375	6,345,978,479	162,590,416	முனைப்பழியுள்ள
2022	34,851,369,347	28,461,143,140	6,390,226,207	65,348,609	முனைப்பழியுள்ள
2023	31,438,815,909	25,019,403,746	6,419,412,163	112,960,670	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அபிப்பிராயம்	அறிக்கை ஆண்டு	கணக்காய்வாளர் பரிந்துரை	நிறுவனத்தால் எடுக்கப்பட்ட பாதுகாப்பு அளவீடுகள்	பரிந்துரையின் அமுலாக்கல் நிலை
01.	பசளை வழங்குநர்களுடைய கடன் கடிதம் முதிர்வடையும் பொது வங்கியானது ரூபா கடனிற்கு கம்பனியின் சார்பில் செலுத்தப்பட்ட தொகையை மாற்றும் பொது அந்த திகதியில் வெளியிடப்பட்ட மத்திய வங்கியினுடைய நாணய மாற்று வீதத்தை விட உயர்ந்த நாணய மாற்று வீத்தை பயன்படுத்தி கடன் கடிதங்fis வழங்கியிருந்தது. கம்பனியானர் குறுகிய கால கடன்கள் சார்பில் ரூபா 485,074,407 ஆன மேலதிக தொகையை செலுத்த வேண்டியிருந்தது.	2020/2021	மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்ட நாணய மாற்று வீதத்தை சீராக்கப்பட வேண்டும்.	வங்கியினுடைய திறைசேரி திணைக்களத்தால் வழங்கப்பட்ட நாணய மாற்று வீதத்தில் வெளிநாட்டு நாணயத்திற்கு குறுகிய காலக் கடன் மாற்றப்பட்டதுடன் கம்பனிக்கு வழங்கப்பட்ட அந்த வீதத்தின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டது.	மத்திய வங்கியால் அறிவிக்கப்பட்ட நாணய மாற்று வீதத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை

02.	கம்பனியானது ரூபா 19,264,125 பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்களுடன் இலங்கை மதிப்பீட்டுச் சபையுடன் (Sri Lanka Accreditation Board) ஆய்வுகூடம் பதிவு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட மாதிரி பரிசோதனைகளின் எண்ணிக்கை 103 ஆக இருந்ததுடன் தொடர்புபட்ட வருமானம் ரூபா 1,200,140 ஆக இருந்தது. இந்த ஆய்வுகூடத்திலிருந்து வருமான உருவாக்குவதற்கும் அதிவிருந்து பெறுவதற்கும் உபாய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவ ில்லை. ஆய்வுகூட வளங்கள் குறைவாக பயன்படுத்தப் பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.	2020/2021	கம்பனியினுடைய வளங்களிலிரந்து அதிகூடிய வழானத்தை பெறுவதற்கு உபாய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுலாக்கபட வேண்டும்.	C/S லங்கா உரக் கம்பனியினுடைய ஆய்வு கூடத்தின் ஆரம்ப செயற்பாடுகள் கம்பனியால் கொள்வனவு செய்யப்பட்ட உரங்கள் மற்றும் உரம் பொதியிடல் பொருட்கள் மற்றும் கலவை இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட உரங்கள் மீதான தரப் பரிசோதனை நடாத்த வேண்டியிருந்தது. ஆகக்கூடிய வருமானம் பெறும் நோக்கில் தகுதியுடைய உத்தியோகத்தர்கள் சேர்க்கப் பட்டுள்ளதுடன் இலங்கை மதிப்பீட்டுச் சபையிலிருந்து மதிப்பீட்டு சான்றிதழ் பெறப்பட்டுள்ளதுடன் வெளிவாரி மாதிரி பரீட்சிப்புகள் மேற்கொள்ளப் பட்டள்ளது.	இந்த ஆய்வுகூட உபகரணம் 2011/2012 இல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் திருத்தங்கள் செய்யாமல் பயன்படுத்தப்பட்டதுடன் உள்ளக மாதிரி பரீட்ச்சிப்புகள் நடாத்தப்பட்டுள்ளது. வெளிவாரி மாதிரி பரீட்சிப்புகள் நடாத்தப் பட்டிருக்கவில்லை இலங்கை மதிப்பீட்டுச் சபையிலிருந்து மதிப்பீட்டு சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்ல.
03.	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட	2022/2023	கடனை அறவிடுவதற்கு விரைவாக	10 வருடங்களுக்கு மேற்பட்ட	மக்கள் பெருந்தோட்ட சபை, பொருந்தோட்ட கூட்டுத்தாபனம்

கடன்பட்டோர் மீதி ரூபா 1,066,771,612 ஆக இருந்ததுடன் அந்த மீதி அதாவது 1-2 வருடம் வரை பழைய ரூபா 918,765,715 மீதியும், 2-3 வருடம் வரை பழைய ரூபா 120,500 ஏற்றுக்கொள்கின்றோம். 4 - 5 வருடம் பழைய ரூபா 807,650 மீதியும், 5 - 6 வருடம் வரை பழைய ரூபா 56,596,887 மீதியும், 9 - 10 வருடம் வரை பழைய 878,607 மீதியும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 86,502,049 மீதியும் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. 10 வருடங்களுக்கு மேற்பட்ட மீதியில் ரூபா 86,308,870 தொகையும் அரசாங்கத்தின் நிறுவனங்களில் இருந்து கிடைக்க வேண்டிய கடன்பட்டோர் மீதியாக இருந்ததுடன் அவற்றை தீர்த்து வைப்பதற்கும் மற்றும் சரியான தன்மையை உறுதிப்படுத்தி கொள்வதற்கும் கம்பனியால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

காலம் ரூபா 86,308,870 ஆன தொகை அறவிட வேண்டியிருந்தது. மக்கள் பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் ரூபா 37,993,346 உம் பொருந்தோட்ட கூட்டுத்தாபனம் ரூபா 35,931,679 உம் அம்பாறை விவசாய பிரதி பணிப்பாளர் ரூபா 12,543,845 ஆன தொகையும் அறவிட வேண்டியிருந்தது.

என்பன எவ்வித கொடுப்பனவுகளையும் செய்திருக்கவில்லை. கம்பனியானது அம்பாறை வியவாய பிரதி பணிப்பாளரிடமிருந்து பெறவெண்டிய நிலுவைகளை செலுத்தாமை தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்கத்திற்கு சமர்ப்பித்திருந்ததென அறிவித்திருந்தது.

04.	மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட கூட்டுப்பசளை 3,153 மெற்றிக் தொன் ரூபா 38,063,251 பெறுமதியில் அவற்றை கொள்வனவு செய்தல் அறிக்கையின் பிரகாரம் காணப்பட்ட நைதரசன் சதவீதம் வகைப்படுத்தி விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், அவற்றில் காணப்படுகின்ற நைதரசன் சதவீதம் களஞ்சியப்படுத்தல் மற்றும் காலநிலையின் பிரகாரம் மாற்றம் அடைந்ததன் அடிப்படையில் இருப்பின் பெறுமதியை கவனத்தில் கொள்ளாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	2022/2023	இருப்பின் பெறுமதியை சரியாக மதிப்பிட்டு கணக்கீடு செய்தல் வேண்டும்.	கூட்டுப் பசளை கொள்வனவு செய்யப்படுகின்ற சந்தர்ப்பம் வரையில் நைதரசன் சதவீதம் கம்பனியின் ஆய்வுகூடத்திலிருந்து பகுப்பாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் கொள ்வனவு செய்தல் மற்றும் விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலநிலை நிலைமையின் படி நைதரசன் சதவீதம் தொடர்ச்சியாக மாறுபடுவதற்கு உட்பட்டமையினால் மீண்டும் பகுப்பாய்வு செய்தல் நடைமுறை ரீதியில் மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் நுன்னுயிர் செயற்பாட்டு தன்மையின் அடிப்படையில் அதன் போசனை உள்ளடக்கம் தீர்மானிக்கப்படு கின்றமையால் அதன்	தற்போது மிகுதியாக இருக்கின்ற இருப்பு 2158.43 MT ஆக உள்ளது. மேலும் அமைச்சினுடைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் இது தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை பட்டியலிடப்பட்டுள்ளது.

				வேறுபாட்டின் பிரகாரம் பெறுமதி கணிப்பிடுதல் நடைமுறையில் இருக்கவில்லை.	
05.	கம்பனியின் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் அங்கீகரிக்கப்பட்ட பதவி எண்ணிக்கை 01 ஆக இருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு உள்ளபடியான எண்ணிக்கை 04 ஆகும். மிகை எண்ணிக்கையை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	2022/2023	அங்கீகாரிக்கப்பட்ட பதவியணியினரை பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன் தேவைகளை மீண்டும் மீளாய்வு செய்து பதவியணியினரை திருத்தி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	வரையறுத்த லங்கா உரக் கம்பனி மற்றும் வரையறுத்த கொழும்பு கொமர்சியல் கம்பனியின் இணைப்பு மேற்கொள்ளப் பட்டிருந்தது. முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடமி ருந்து புதிய ஊழியர்களை சேர்ப்பதற்கு அனுமதி பெறுவதற்கு நெறிப்படுத்தப் பட்டிருந்தது.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படவில்லை
06.	கம்பனிக்கு சொந்தமான 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையில் 56 மெற்றிக்தொன் காலாவதியான இரசாயன உர இருப்பு மற்றும் 26.7 மெற்றிக்தொன் உரத்தின் (Sweeping) அளவு காணப்பட்டதுடன் அதனை அகற்றுதல் தொடர்பாக	2022/2023	உரிய உரத்திற்காக சரியான சந்தைப்படுத்தல் திட்டமொன்றுடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	தற்போது இருப்பில் எஞ்சியுள்ள சேதனப் பசளை மற்றும் காலாவதியான இரசயன உரம், சேதனப் பசளை தொடர்பாக இரசாயன ஆய்வுகூடத்திற்கு தெரிவாக	உர இருப்புக்கள் விடுவிக்கப்பட்டிருந்தது.

	முகாமைத்துவம் எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.			அனுப்பி அதன் பகுப்பாய்வு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பசளை வகைகளை உற்பத்தி செய்வதற்கு உள்ள இயலுமை கவனத்திற் கொண்டு விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	
07.	இரசாயன உர இறக்குமதி தடைசெய்யப்பட்டதன் பின்னர் அரசாங்கத்தின் உரக் கொள்கையை அமுல்படுத்துவதற்கு கம்பனி சுற்றாடலுக்கு சாதகமான உரத்தைக் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 செம்டெம்பர் 15 ஆம் திகதிய கம்பனியின் உள்ளக சுற்றறிக்கை இலக்கம் 2021/GM/02 இன் மூலம் பிரதேச களஞ்சியத்திலிருந்து உர வழங்குநர்களை பதிவு செய்து அவர்களிடமிருந்து சேதன மற்றும் கூட்டுப்பசளை கொள்வனவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட உரங்களை மிகவும் குறைந்த அளவில் விற்பனை	2022/2023	உரிய உர இருப்பு தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இந்த பசளை தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளில் பரிந்துரைகள் பெறுவதற்கு குழு நியமிக்கப்பட்டிருந்தது. இந்த குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் சேதன உர இருப்பு விற்பனைகளிலிருந்து குறிப்பிடத்தக்க இலாபம் உழைத்தமையால் அரசாங்க பண்ணைகளிற்கு இலவசகட்டணத்தில் இந்த உர இருப்பு விடுவிக்கப்பட்டிருந்தது.	உரிய உர இருப்பு காட்சியறையில் களஞ்சியப் படுத்தப்பட்டிருந்தது.

	செய்யப்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 31 ஆம் திகதி வரையில் 902 மெற்றிக்தொன் அளவு விற்பனை செய்யப்படாமல் களஞ்சியத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.					
08.	சுற்றாடலுக்கு சாதகமான சேதனப் பசளை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இராணுவம், சிவில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் ஏனைய சிறிய அளவிலான உற்பத்தியாளர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற சேதனப் பசளை கம்பனியால் கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு வழங்குவதற்காக தேவையான 05 இலட்சம் வெற்று உறைகளின் தேவை ஒன்று தீர மானிக்கப்பட்டு அதில் 02 இலட்சம் உறைகள் அவசர கொள்வனவின் கீழ் 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்திருந்த வழங்குநர்களிடமிருந்து கேள்வி கோரி ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குநரிடமிருந்து அலகொன்று ரூபா 68.98 வீதம் 200,000 வெற்று உறைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மீண்டும் 2021.09.23	2022/2023	காணப்படுகின்ற உர உறைகளை பயன்படுத்துதல் தொடர்பாக மாற்று வழிகளைக் கவனத்திற் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	கூட்டுப்பசளை உறைகளின் மாதிரிகள் தொடர்பான பிரச்சினைகள் முகாமைத்துவக் குழு கூட்டத்தின் போது Bursting Test மூலம் உரிய உறைகளின் சக்தியினைப் பரீட்சிக்கின்ற மையினால் அந்த பரிசோதனைய ின் படி உர உறைகளில் சேதம் ஏற்படல் மற்றும் ஏனைய தாக்கங்கள் இன்றியதை உறுதிப்படுத்த ப்படுகின்றமை யால் நியமம் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள் ளது. தற்போது திறந்த சந்தையில் பயன்படுத்தப்ப டுகின்ற	உரப் பைகள் தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில் லை.

	ஆந் திகதி அவசர தேவையின் கீழ் 200,000 உறைகளின் அளவைக் கொள்வனவு செய்வதற்கு கட்டளை விநியோகிக்கப்பட்ட போதிலும் இரண்டாவது கட்டளைக்குரிய வழங்கல் உறைகளின் மாதிரி கம்பனியின் மாதிரிகளுக்கு இணங்காதிருந்தமையால் கொடுப்பனவு நிறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அவசர தேவையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,909,094 பெறுமதியான 58,596 வெற்று பசளை உறைகளின் அளவு கணக்காய்வுத் திகதியான 2024 சனவரி 30 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக குவித்து வைக்கப்பட்டிருந்தது. இந்த வெற்று பசளை உறைகள் COMPOST இற்காக அச்சிடப்பட்டு வைக்கப்பட்டதன் காரணமாக ஏனைய பசளை உறைகளின் பணிகளுக்காக பயன்படுத்துவதற்கான இயலுமை காணப்படாதிருந்தமையும் மேலும் அவதானிக்கப்பட்டது.			உறைகளுக்காக அதிக கேள்வி மற்றும் விலைகள் உள்ளமையால் தற்போது களஞ்சியங்களில் எஞ்சியுள்ள பொலித்தீன் மற்றும் ஒரு தடவை பயன்படுத்தப்படுகின்ற வெற்றி உறைகளுடன் பெறுகை செயற்பாடுகளின் படி WPP இருப்பாக விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த இருப்புக்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட செலவினைத் தீர்த்துக் கெள்ள முடியும்.	
09.	கம்பனியால் ரூபா 22,910,795 செலவினத்தைச் செய்து கணனி	2022/2023	ஒட்டுமொத்த கணக்கீட்டு செயற்பாடுகளையும் மேவுகை	தொழில் முயற்சி வழங்கல் மென்பொருள்	தொழில் முயற்சி வழங்கல் மென்பொருள் (ERP) முறைமையுடனான

முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுகின்ற போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பேரேட்டுக் கணக்குகள் கையினால் (Manual) மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக கணிசமான கிரயமொன்று செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட கணனி முறைமையின் மூலம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் இயலுமை தொடர்பாக கணக்காய்வின் போது பிரச்சினையான நிலைமை காணப்பட்டதுடன் மேற்கூறப்பட்ட கணனி முறைமை வினைத்திறனாக பயன்படுத்தாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

செய்யும் வகையில் முறைமை பயன்படுத்துவதற்குரிய முடியுமான வகையில் ஸ்தாபித்தல் வேண்டும்.

(ERP) இல் இறுதிக் கணக்குகள் தயாரித்தல், அறிக்கை அச்சிடல் மற்றும் அந்த முறைமையில் சரியான தன்மையைப் பரீட்சித்தல்

100% சதவீத நம்பிக்கையுடன் உள்ளது. சில வருடங்கள் எழுத்து மூல முறைமையில் (Manual) கணக்கு தயாரித்தலும் மேற்கொள்ளப் படுகின்றது. பெறப்பட்ட தகவல்கள்

100% வீதம் ERP முறைமையில் பெறப்படுகின்றது. அதன் பிரகாரம் குறைவாகக் பயன்படுத்தப்பட வில்லை. மென்பொருள் சகல பிரிவுகளையும் மேவுகை செய்யும் வகையிலும் சகல நிர்வாகம் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளையும் மேவுகை செய்யும்

பிரச்சனைகள் காரணமாக இறுதிக் கணக்குகள் முறைமைகள் மற்றும் எழுத்து மூல முறையை பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்றன.

வகையிலும் இந்த முறைமை ஊடாக மேற்கொள்ளப் படுகின்றது. அதன் பிரகாரம் இந்த முறைமையில் கீழே குறிப்பிடப்படுக ின்ற பிரகாரம் வகைப்படுத்த ப்பட்டு ஒன்றிணைந்த மென் பொருளாக அமுல்படுத்தப் படுகின்றது.

3.17 சென்ரல் எஞ்சினியரிங் சேர்விஸஸ் (பிறைவேட்) விமிட்டட்

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்த பொறுப்புக்கள் ரூபா	தேறிய சொத்துக்கள் ரூபா	வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்)	அபிப்பிராயம்
2021	13,033,915,213	11,969,933,029	1,063,982,182	254,921,963	முனைப்பழியுள்ளது
2022	13,609,021,745	12,382,825,985	1,226,195,760	254,537,724	முனைப்பழியுள்ளது
2023	14,213,834,474	12,846,100,974	1,367,733,500	302,698,222	முனைப்பழியுள்ளது

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கை ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகள்	நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கைத் திகதியில் உள்ளவாறான பரிந்துரைகளின் அமுல்ப்படுத்தல் நிலைமை
01	**பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**				
(அ)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் படி மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 2,397 மில்லியன் ஆனதுடன் அதில் ரூபா 401.63 மில்லியன் மற்றும் ரூபா 67.08 மில்லியன் தொகைகள் முறையே 03 ஆண்டுகள் தொடக்கம் 05 ஆண்டுகள் மற்றும் 05 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.	,2022 2023	நிலுவையாகவுள்ள மீதிகளை அறவிடுவதற்கு வினைத்திறனான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	இது தொடர்பில் தொடர்ச்சியாக தலைமை அலுவலகத்தினாலும் மற்றும் உரிய உத்தியோகத்திடமிருந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.	2024 யூன் 30 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றின் படி மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 2,786.35 மில்லியன் ஆனதுடன் அதில் ரூபா 380.31 மில்லியன் 03 ஆண்டுகள் தொடக்கம் 05 ஆண்டுகள் வரையிலும் மற்றும் ரூபா 67.08 மில்லியன் தொகைகள் 05 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ)	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நிறுத்திவைத்தல் பணம் ரூபா 2,962.35 மில்லியன் தொகையானதுடன் அதில் நிர்மாணித்து முடிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்குரிய ரூபா 659.28 மில்லியன் ஆகவிருப்பதுடன் அதில் ரூபா 127.78 மில்லியன் மற்றும் ரூபா 158.02 மில்லியன் முறையே 03 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கிடையில் மற்றும் 5 ஆண்டுகளிற்கு மேலாக உரிய பொறுப்பான உத்தியோகத்தர்களால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமையால் நிலுவையாகவிருந்தது.	,2022 2023	நிறுத்திவைத்தல் பண நிலுவைகளை தாமதமின்றி அறவிடுவதற்காகு வினைத்திறனான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	பிரதான அலுவலகம் மற்றும் உரிய கிளை அலுவலகங்கள் தொடர்பில் தொடர்ச்சியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	2024 யூன் 30 இல் உள்ளவாறு பெறவேண்டிய மொத்தத் தொகை ரூபா 915.01 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 283.68 மில்லியன் 3 தொடக்கம் 5 வருடங்களுக்கு நிலுவையாகவுள்ளதுடன் ரூபா 201.48 மில்லியன் 5 வருடங்களுக்கு மேலாக நிலுவையாகவுள்ளது.

02. தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களிற்கு இடையிலான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

கம்பனியானது அதனுடைய தாய்க் கம்பனியான மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு (CECB) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,545.96 மில்லியன் தொகையை செலுத்தியிருந்ததுடன் கம்பனியானது இந்தக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் முறையான நாளதுவரையாக்கப்பட்ட உடன்படிக்கைகளை பேணியிருக்காததுடன் இந்த மீதியினைத் தீர்ப்பனவு செய்வதற்கு கம்பனியானது வினைத்திறனான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. ஆகையால், இந்த மீதியானது 2017 இலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்துக்கொண்டு	2021, 2022 2023	தெளிவான உடன்படிக்கை இந்த கம்பனி மற்றும் பணியகத்திற்கிடையயிலான கொடுக்கல்வாங்கல்களிற்காக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் இதனை வெளிப்படுத்துவதற்கும் நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	நிறுவனத்தின் உள்ளக மீதிகளை சரியாக இனங்காண்பதற்கும் வகைப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுக்கின்றோம்.	மீதிகளானது இதுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

வருகின்றது.

.03 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான வழிகாட்டல்கள் தொடர்பான 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2(i) ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புச் செயன்முறை 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2021, 2022 2023	அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு திட்டம் உடனடியாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.	இதுவரை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

.04 இனங்காணப்பட்ட நட்டங்கள்

(அ)	செயற்திட்ட முகாமைத்துவத்தில் ஏற்பட்ட வினைத்திறமையின்மையால் ரூபா 105.75 மில்லியன் தொகை 62 செயற்திட்டங்களின் முடிவுறுத்தல் சேதங்களாக வேலைவழங்குனர்களால் பற்றுச்சீட்டுக்களிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. 09 செயற்திட்டங்கள் தொடர்பிலான ரூபா 36.81 மில்லியன் கழிக்கப்பட்ட தொகையினை அறவிடமுடிந்திருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 செயற்திட்டங்களிற்காக பிரயோகிக்கப்பட்ட காலநீடிப்பிற்கான அனுமதி கிடைக்கப்பெற்றிருக்கவில்லை என்பதுடன் 35	2022, 2023	முறையான செயற்திட்ட மேற்பார்வை மற்றும் முகாமைத்துவமானது தாமத சேதங்களை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டும்.	இந்தச் செயற்திட்டங்களிற்கன காலநீடிப்பிற்கான அனுமதியினைப் பெறுவதற்கும் பெறவேண்டிய அனைத்து நிதியங்களையும் அறவிடுவதற்கும் உத்தியோகத்தர்களுடன் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.	ரூபா 49.01 மில்லியன் தொகையான முடிவுறுத்தல் சேதங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

	செயற்திட்டங்களுடன் தொடர்புடைய ரூபா 49.01 மில்லியன் தொகையான முடிவுறுத்தல் சேதங்கள் அறவிடப்படாதிருந்தன.				
(ஆ)	2019 ஆம் ஆண்டில் நகர அபிவிருத்திக்குச் சொந்தமான இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 60 பேர்ச் பரப்பளவுள்ள காணியினை 30 வருட குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு எந்தவித முறையான உடன்படிக்கையுமில்லாமல் வாடகையாக ரூபா 15.43 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது.டன் அந்தக் காணியில் சப்ரகமுக தள அலுவலக கட்டிடத்தை கட்டியிருந்தது.	2021, 2022 2023	கம்பனியானது முழுமையான வாடகையை செலுத்தியிருந் தமையால் முடிந்தளவிற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையு டன் உடன்படிக்கை கள் கைச்சாத்திடப்ப ட வேண்டும்.	நகர அபிவிருத்தி அதிகாரசபைக் கு இந்தக் காணியின் உரிமையை முறையாக மாற்றிய பின்னர் உடன்படிக்கை களில் கைச்சாத்திடு வதற்கு உரிய ஏற்பாடுகள் எடுக்கப்படும் என நகர அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்திருந் தது.	இதுவரை எந்தவித உடன்படிக்கையு ம் கைச்சாத்திடப்பட் டிருக்கவில்லை.

.05 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

05	விடுதி இல்லங்களில் இருந்து பெறப்படும் மாதாந்த முகாமைத்துவக் கட்டணத்தில் 65 சதவீதத்தை உள்ளூராட்சி அமைப்புகளின் சார்பில் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு வழங்க வேண்டும் என்ற தீர்மானம் குறித்த தகவல் மற்றும் ஆவணங்கள் இதுவரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத நிலையில், ரூ. சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி 2021 திசெம்பர் 31 இல் ரூபா. 56.08 மில்லியன் செலுத்த வேண்டும்.	2021	குறித்த அவதானிப்புகளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்	இவ் விடயம் இயக்குநர் குழுவிடம் தெரிவிக்கப்பட்டு தேவையான ஒப்புதல் பெறப்படும்.	அவதானிப்பு மாறா நிலையில் காணப்படுகின்றது.
06	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 150 (1) ஆம் பிரிவின் படி காலப் பகுதியினுள் கம்பனியினால் வருடாந்த நிதிக் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது 2024 ஏப்ரல் 26 ஆம் திகதியில் ஆகும். 133 ஆம் பிரிவின் படி லங்கா ரெஸ்ட் ஹவுஸ் கம்பனியானது கணக்காய்வு தினம் வரையிலும் வருடாந்த பொதுக்குழுக் கூட்டத்தினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2021	அதிகார சட்டத்தின் 150 (1) பிரிவுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	கருத்துரை தெரிவிக்கப்படவ ில்லை.	2022, 2023 ஆம் ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில் லை.

07	2021 மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் 08 பேரினையும் ஏனைய பதவியணி 15 பேரினையும் மட்டுமே கொண்டிருந்தது. கம்பனியின் வருடாந்த செயற்பாட்டு வருமானமான ரூபா. 30.29 மில்லியனை விட நிர்வாக செலவுகளாக ரூபா. 36.08 மில்லியனை மேற்கொண்ட காரணத்தால் மீளாய்வாண்டில் கம்பனி ரூபா. 02 மில்லியன் நட்டமடைந்திருந்தது. இதற்கமைய 32 விடுதிகளின் நிர்வாக நடவடிக்கைகளை மட்டும் மேற்கொள்ளுவதற்கு தனியாக கம்பனி ஒன்றினை உருவாக்குதல் பொருளாதார ரீதியில் எந்தளவு பயனுள்ளது என்பது சர்ச்சைக்குரியதாகும்.	2021	கம்பனியினைக் கலைத்து சொத்துக்களை நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் கையகப்படுத்துதல் வேண்டும்.	கருத்துரை தெரிவிக்கப்படவில்லை.	அவதானிப்பு மாறா நிலையில் காணப்படுகின்றது.
08	கம்பனியின் நிதி நடவடிக்கைகள், நிர்வாக மற்றும் மனித வள நடவடிக்கைகள், செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பெறுகை மற்றும் விலைக் கேள்வி நடவடிக்கைகள் தொடர்பில் நிறுவன கட்டமைப்பினை தயாரிக்கப்பட்டிருக்காது டன் கம்பனியினால் அதன் களம் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல் எந்த நிறுவன	2021	நகர அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் அமைச்சின் இணக்கப்பாட்டுடன் இது தொடர்பில் முறையான கட்டமைப்பொன்று உருவாக்கப்படல் வேண்டும்.	மனித வள முகாமைத்துவத்திற்கு உரிய விடயங்கள் உள்ளடக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் 2024 ஆம் ஆண்டின் ஆரம்பம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.	அவதானிப்பு மாறா நிலையில் காணப்படுகின்றது.

	கட்டமைப்பிற்கு அல்லது கொள்கைக்கு அமைய என்பதற்கான தீர்மானம் இதுவரையில் எட்டப்பட்டிருக்கவில்லை.				
09	கம்பனியினால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய 2021 ஆம் ஆண்டில் 32 விடுதிகளில் 25 விடுதிகள் செயல்படுத்தப்பட்டதுடன் 07 விடுதிகள் செயலற்று காணப்பட்ட காரணத்தால் கம்பனிக்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	2021	செயலற்ற விடுதிகளைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.	இணங்குகின்றேன். செயலற்று காணப்பட்ட இந்த 07 விடுதிகளில் வெலிகம விடுதி தற்போது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.	அவதானிப்பு மாறா நிலையில் காணப்படுகின்றது.
10	2021 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் - 19 தொற்றுநோய் காரணமாக விடுதிகளின் வியாபார நடவடிக்கைகள் நலிவுற்று காணப்பட்டதனால் கம்பனியின் வருடாந்த வருமானம் வீழ்ச்சி அடைந்திருந்தது. அதனால் குறித்த விடுதி உரித்துடைய உள்ளூராட்சி நிறுவனத்திற்கு, விடுதியின் வாடகை வருமானத்தில் செலுத்தப்படும் 65 சதவீதத்தில் 50 சதவீத நிவாரணம் கம்பனியினால் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்திடம் இருந்து கோரப்பட்டு இருந்தது. அதற்கு ஒரு சில உள்ளூராட்சி நிறுவனங்கள் இணக்கப்பாட்டினைத் தெரிவித்து இருந்தது	2021	குறித்த இணக்கப்பாட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இது தொடர்பில் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.	அவதானிப்பு மாறா நிலையில் காணப்படுகின்றது.

	எனினும் ஒரு சில நிறுவனங்கள் அனுமதி வழங்கியிருக்கவில்லை. அதற்கு அமைய கம்பனியினால் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் இணக்கப்பாடின்றி குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கம்பனியினால் செலுத்தப்பட வேண்டிய 65 சதவீத பெறுமதி தொடர்பில் ஒருதலைப்பட்சமாக 50 சதவீத சலுகையினைப் பெற்றுக் கொண்டிருந்தது.				
11	குறித்த திகதியில் குத்தகைதாரினால் விடுதி வாடகையை கம்பனிக்கு செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் மாதமொன்றிற்கு 1.5 சதவீத மிகைவிதிப்பு அறவிடப்படும் எனக் கம்பனி மற்றும் குத்தகைதாரர் இடையேயான உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அந்த மிகை விதிப்பு விதிக்கப்படுவது மாதாந்த வாடகைக்கா இல்லையேல் கிடைக்க வேண்டிய வாடகை மீதிகளுக்கா என்பது உடன்படிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	2021	உடன்படிக்கைகளில் காணப்படும் தெளிவின்மை மற்றும் சர்ச்சைக்குரிய நிலைமைகளை இனம் கண்டு அவற்றை உடனடியாகத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	தற்போது மிகைவிதிப்பு விதிக்கப்படுவது மாதாந்த வாடகையின் மீதாகும்.	இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.40 ஜீ எஸ் எம் பீ தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனி

	மொத்தச் சொத்துக்கள் (ரூபா)	மொத்தப் பொறுப்புக்கள் (ரூபா)	ஊரிமை (ரூபா)	வரிக்கு முன்னர் இலாபம் (ரூபா)	அபிப்பிராயம்
2021	478,105,056	191,035,664	287,069,392	28,753,025	முனைப்பழியுள்ள
2022	546,652,265	193,297,671	353,354,594	97,081,603	முனைப்பழியுள்ள
2023	553,581,574	150,611,124	402,970,450	159,733,997	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1)	கந்தளாய் மணல் அகழ்வுச் செயற்திட்டத்தின் கீழ் அகழ்வு செய்யப்பட்டு மணல் களஞ்சியம் ஒன்றிற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்த 46,306 கியுப் எண்ணிக்கையான மணல் தொகையில் 41,773 கியுப் மணல் விற்பளை செய்யப்பட்டு மீதியான மணல் விற்பனை செய்யப்படாமல் சுமார் 10 மாத காலம் முதல் சிறிய அளவில் வண்டல் மண் கலந்திருந்ததுடன், மீதியான 4,533 கியுப் மணலை விற்பனை செய்வதற்காக டென்டர் அழைக்கப்பட்டிருந்தது. இந்த இடத்தில் 1,000 இற்கு குறைவான மணல் கியுப் எண்ணிக்கையொன்று காணப்படுகின்றதென டென்டர்தாரர்களினால் தெரிவிக்கப்பட்டிருந்தது	2021	முறையான நடவடிக்கையொன்று கடைபிடிக்கப்பட்டு குறைவு தொடரபாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.	கந்தளாய் மணல் அகழ்வு செயற்திட்டம் தொடர்பாக குழுவொன்றின் மூலம் விஷேட விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தது.	குறைவு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

	டன் அவற்றில் 875 இற்கான எண்ணிக்கையொன்று டென்டர் காரர்களுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 3,658 கியுப்களுக்கான மணல் குறைவொன்று காணப்பட்டதுடன், அந்த மணல் இருப்பின் கிரயம் ரூபா 12,107,980 தொகையாகும்.				
2)	2022 ஆண்டின் போது மாதுருஓய அண்டி செயற்படுத்தப்பட்டிருந்த அரலகம்வில, போகஅத்த, நிதன்வல மணல் செயற்திட்டங்களின் மூலம் முறையே ரூபா 1,345,485 தொகை, ரூபா 3,975,095 தொகை மற்றும் ரூபா 97,541 தொகை மற்றும் மூதூர் மணல் செயற்திட்டத்தின் மூலம் ரூபா 3,216,621 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.	2022	செயற்திட்டத்தினால் நட்டமடைதல் ஏற்படல் ஏனைய செயற்திட்டங்களுக்கு பிரதிகூலமான தாக்கத்தை ஏற்படுத்துவதனால் இலாபகரமான செயற்பாடுகளுக்கு முன்னெடுத்தல் முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நட்டத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
3)	கந்தளாய் பிரதேச செயலக வட்டாரத்தில் சூரியப்புர கிராம உத்தியோகப் பிரிவில் மகவெளி ஆற்றின் பாதுகாப்பு அணைக்கட்டுக்கு அச்சுருத்தலாக மண் அகழ்தல் மற்றும் ஆற்றோரத்தை பாதுகாத்தல் செயற்திட்டத்தின் கீழ் வைப்புச் செய்யப்பட்டுள்ள 103,128 கியூப் மணல் படிவினை	2023	செயற்திட்டம் முறையான திட்டமிடலுடன் எதிர்பார்த்த குறிக்கோளினை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், வெள்ள நிலைமைகளில் அணைக்கட்டுக்கு ஏற்படக்கூடிய சேதங்கள் தொடர்பாக	நிறுவனம் மணல் அகழ்வு வேண்டப்பட்ட மணல் எண்ணிக்கையில் 53.6 சதவீதம் மாத்திரம் அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன். அரிப்புத் தடையை நிர்மாணித்தில் 75 சதவீதம் பூர்த்தி	வெள்ள நிலைமையில் அணைக்கட்டிற்கு ஏற்படக் கூடிய சேதம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

அகற்றுவதற்கு 2019 ஆண்டில் இலங்கை மகாவெலி அதிகார சபையினால் கம்பனிக்கு உரித்தாக்கியிருந்த போதிலும், 2022 ஜூலை 10 திகதி முதல் மீளாய்வாண்டு இறுதி வரை எதுவித மணல் அகழ்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளாமல் ரூபா 4,773,910 இற்கான சம்பளங்கள், படிகள், வீட்டு வாடகை, அலுவலகச் செலவுகள், போக்குவரத்துச் செலவுகள் ஆகிய செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதேபோல், இந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 168,254,363 இற்கான மதிப்பீடொன்றின் கீழ் மகவெளி ஆற்றில் 03 அரிப்புத் தடைகள் நிர்மாணிப்பதற்காக கம்பனி திட்டமிட்டிருந்த போதிலும், ஒரு அரிப்புத் தடை மாத்திரம் நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், மீதியான 02 அரிப்புத் தடைகளை நிர்மாணித்தலின் முன்னேற்றம் முறையே 75 சதவீதம் மற்றும் 54 சதவீதம் ஆகும். இந்த அரிப்புத் தடைகளை நிர்மாணித்தல் உடன்படிக்கைக் காலம் தற்போது காலம் மிகைத்திருந்ததுடன், 02 அரிப்புத் தடைகளின்	தேவையான நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும்.	செய்யப்பட்டுள்ளது.

	வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையால் வெள்ள நிலைமைகளின் போது மகவெளி கங்கையின் அணைக்கட்டிற்கு சேதம் விளைவிக்கக்கூடும் என அவதானிக்கப்பட்டது.				
4)	இரத்தினபுரி மாவட்டத்தில் பலாங்கொடை பிரதேச செயலாளர் வட்டாரத்தில் ரஜவக காப்பில் காணப்படுகின்ற கெல்சயிட் படிவினை அகழ்வு செய்து பெறுமதி கூட்டி ஏற்றுமதி செய்தல், உள்நாட்டில் பயன்படுத்தும் குறிக்கோளுடன் செயற்திட்டமொன்று பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞான பட்டப் பின்படிப்பு நிறுவனத்துடன் சேர்ந்து மேற்கொள்வதற்கு 2020 ஆண்டு முதல் திட்டமிடப்பட்டிருந்தது. விஞ்ஞான பட்டப் பின் படிப்பு நிறுவனத்திற்கு உசாத்துணை சேவைக் கட்டணம் செலுத்துதல், போக்குவரத்துச் செலவு, இணைந்த படி, பரிசோதனைக் கட்டணம் ஆகியவற்றிற்காக மீளாய்வாண்டு இறுதியளவில் கம்பனி ரூபா 3,304,612 இற்கான செலவொன்று மேற்கொண்டிருந்ததுட	2023	செயற்திட்டம் கைவிடப்படல் தொடர்பாக மற்றும் மேற்கொள்ளப்பட்ட விளைவற்ற செலவுகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும். முறையான மேற்பார்வையொன்று இன்றி செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.	செயற்திட்டத்தின் விளைவற்ற செலவுகள் தொடர்பாக கண்டறிவதற்கு குழுவொன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது.	செயற்திட்டம் கைவிடப்படல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

ன், இந்த
செயற்திட்டம்
கைவிடப்பட்டிருந்தது.

3.41 வரையறுக்கப்பட்ட இலங்கை கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்த பொறுப்புக்கள் ரூபா	தேறிய சொத்துக்கள் ரூபா	வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்)	அபிப்பிராயம்
2021	-	-	-	-	-
2022	-	-	-	-	-
2023	-	-	-	-	-

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
01.	**நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை** 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கைநூலில் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் வரையறுக்கப்பட்ட கட்டிட கூட்டுத்தாபனத்தால் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 04	2022	சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	2018 இன் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக 2023 ஒப்டோபர் 27 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் செயலிழந்த கணனி முறைமை தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணை ஒன்று மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையொன்று 2024 மார்ச் 04 ஆந் திகதி வரை கிடைத்திருக்க வில்லை.	2019 முதல் 2023 ஆம் ஆண்டு வரை நிதிக்கூற்றுக்கள் 2024 ஒக்டோபர் 30 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்பட வில்லை.

வருடங்களும் 08 மாத தாமதமாகி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது .

கம்பனியால் பயன்படுத்தப்பட்ட கணனி சேவர் இயந்திரம் 2019 ஆம் ஆண்டின் போது வைரஸ் தொற்றின் காரணமாக செயலிழந்திருந்ததுடன் அந்த சந்தர்ப்பத்தின் போது தரவு மீள்சேமிப்பு (Backups) களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்ளப்படாமையின் காரணமாக கணக்குகள் தயாரிப்பதற்கு தேவையான தகவல்கள் இல்லாதிருந்ததாக காண்பித்து 2019 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2022 ஏப்ரல் 19 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவின் கட்டளையின் அடிப்படையில் இது தொடர்பாக 2022 ஏப்ரல் 28 ஆந் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான தற்போதைய நிலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

02.	**பொருட்களைக் கொள்வனவு செய்தல்**				
(அ)	வரைவு மாதாந்த கணக்கறிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் எஸ்பெஸ்டோஸ், இரும்பு, டைல்ஸ், சீமெந்து, மணல், ஏனைய பொருட்களாக மொத்த கொள்வனவுகள் ரூபா 941 மில்லியன் ஆகும். இந்த பெறுகை நடவடிக்கைகளின் போது 2006 சனவரி 25 ஆம் திகதிய இலக்கம் 06 என்ற தேசிய பெறுகைகள் முகவராண்மை சுற்றறிக்கையின் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக் குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	2022	கம்பனிக்கான கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது 2006 சனவரி 25 ஆம் திகதிய அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பொருள் கொள்வனவு விற்பனை செய்கின்ற நிறுவனமாக இருந்தமையால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நிறுவனத்தின் செயற்பாட்டு நிலைமைக்கு இணங்கும் வகையில் 2022/2023 ஆண்டுகளுக்குரிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.	இதுவரை பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் குழு நியமிக்கப் பட்டிருக்கவில்லை.
(ஆ)	பெறுகைள் வழிகாட்டிக் கோவையின் 2.8.1(அ) இன் பிரகாரம் திணைக்கள பெறுகைக் குழு விடயங்களின் கீழ் கொண்டுவரப்படுகின்ற சகல பெறுகைகளுக்காகவும் தொழில் நுட்ப மதிப்பீட்டுக்குழு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் கம்பனியின் பெறுகை தீர்மானங்களை எடுப்பதற்காக பெறுகைக் குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. வழிகாட்டிக் கோவையின் 2.8.4 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் தலைவரால்	2022	நிறுவனத்திற்கான கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது 2006 சனவரி 25 ஆம் திகதிய அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்	பொது முகாமையாளரால் 2022.06.07 ஆம் திகதி மற்றும் 2022.09.16 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் பெறுகைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.	இதுவரை பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்படவில்லை.

	நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் மூலம் பெறுகைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப மதிப்பீடு வழங்க வேண்டியிருந்த போதிலும் விடயங்களின் கொள்வனவுக்காக தேவையான விடயங்கள் தொடர்பாக விஷேட நிபுணர்களின் மதிப்பீடு பெறப்பட்டிருக்கவில்லை.				
3.	**பொருட்களின் விற்பனை**				
(அ)	2022 ஆம் ஆண்டிற்காக கம்பனியால் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட கணக்கு அறிக்கையின் பிரகாரம் கம்பனியின் விற்பனைப் பெறுமதி ரூபா 3,324 மில்லியன் ஆகும். இந்த விற்பனைப் பெறுமதியில் விற்பனைகள் அதிகரிக்கும் நோக்குடன் ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதி / பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தைப் பழுதுபார்த்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்காக பிழையாக விநியோகிக்கப்பட்ட ரூபா 557.02 மில்லியன் பெறுமதியான 98 பல்டியல்களும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பிழையாக	2022	பிழையாக மேலதிகமாகக் காண்பிக்கப்பட்ட விற்பனையை சரியாக கணக்குகளில் சீராக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்ததுடன் இது தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு விரைவாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	நிறுவன மட்டத்தில் பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	விநியோகிக்கப்பட்ட ரூபா 79.19 மில்லியன் பெறுமதியான 22 விற்பனை பட்டியல்களும் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த விற்பனைகளுக்காக விற்பனை கட்டளையிடப்பட்ட பொருட்களுக்கிடையே நேரடியாக உரிய வேலைத் தளங்களுக்கு வழங்கப்பட்ட பொருட்கள் தொடர்பாக பொருட்கள் கையேற்கப்பட்டமை மற்றும் மாதிரிகளுக்கு இணங்கியிருந்தமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.				
(ஆ)	கம்பனியால் விற்பனைக்காக பொருட்கள் கொள்வனவு செய்யும் போது பெறுகை நடைமுறைகளை பின்பற்றி வெளிப்படையாக அந்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக ஆகக்குறைந்த விலைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தமையால் கிரயம் அதிகரித்ததன் காரணமாக பொருட்களின் விற்பனை விலை எண்ணிக்கையும்	2022	பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி ஆகக்குறைந்த விலைகளில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கும், போட்டி சந்தையில் போட்டியாளர் விற்பனை விலை எண்ணிக்கையின் கீழ் ஆகக்கூடிய நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தல்	பதிவு வழங்குநர் ஊடாக நிறுவனத்திற்கு நலன் வாய்ந்த வகையில் சந்தைவிலை ஒப்பீட்டு முறைமையை மேற்கொண்டு ஆகக்குறைந்த விலையின் கீழ் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	கம்பனிக்கு போட்டியாளர் நலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சில உற்பத்தியாளர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படாமல் வழங்குநர்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டுள்ளது.

		உயர்வடைந்து சென்றமை கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது. அதனால் சந்தையில் மற்றும் அதற்கு சமமான பொருட்களின் விலைகளுடன் போட்டியிடுவதற்கு கம்பனி தவறியிருந்ததன் அடிப்படையில் கம்பனியின் விற்பனை வருமானம் நாள்தோறும் வீழ்ச்சிக்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.				வேண்டும்.
4.	**நீண்ட கால மற்றும் குறுகிய கால கடன்கள்**					
(அ)	தொழிற்படு மூலதன தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கில் கம்பனியால் ரூபா 150 மில்லியன் குறுகிய கால கடன் 2017 மார்ச் 02 ஆம் திகதி முதல் 2018 ஏப்ரல் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 03 சந்தர்ப்பங்களின் போது மக்கள் வங்கியில் இருந்து பெறப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை இலக்கம் 07 இன் பிரகாரம் பெறப்பட்ட கடன், எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்கு ஈடுபடுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், இந்த கடன் தொகையை பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில்	2021 2022	ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் கடன் பணத்தை பயன்படுத்தி கடனை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக முகாமைத்துவம் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.	2022.01.28 ஆந் திகதி முதல் 2024.06.24 ஆம் திகதி வரை ரூபா 500,000 வீதம் தவணையாக ரூபா 14.5 மில்லியன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	2024 யூன் மாதம் வரையில் ரூபா 14.5 மில்லியன் அளவில் செலுத்தப்பட்டுள்ள துடன் தற்போது நிறுவனம் முகங்கொடுத்துள்ள நிதிக் கஷ்டத்தினைக் கவனத்திற் கொண்டு 2024 யூலை மாதம் முதல் கொடுப்பனவுகள் தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளது.

	அல்லாமல் கம்பனியின் சம்பளம் செலுத்துதல், மிகை ஊதிய படி செலுத்துதல் போன்ற நிர்வாக செலவினங்களை உள்ளடக்கிய ஏனைய செலவினங்களுக்காக இந்த கடன் பணம் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் இந்த கடன் தொகை குறித்துரைத்த பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு கம்பனி தவறியிருந்தமையால் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கடன் பணம் மற்றும் அட்டுறு வட்டியுடன் மொத்த நிலுவைப் பணம் ரூபா 220.37 மில்லியன் ஆக இருந்ததுடன், அதற்காக செலுத்த வேண்டிய தண்டப் பணம் ரூபா 17.12 மில்லியன் ஆக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.				
(ஆ)	நிதி நெருக்கடியை வெறறிகொண்டு நிர்மாண கைத்தொழிலில் வலுவான தரப்பினராவதற்கு கம்பனிக்கு இயலுமான வகையில் திறைசேரி பிணையின் அடிப்படையில் 2018 மார்ச் 28 ஆம் திகதிய அமப/18/0504/736/007 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தில் இலங்கை வங்கியினால் ரூபா 500 மில்லியன்	2021 2022	கடன் பணத்தை பெற்ற நோக்கங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இவ்வாறான திட்டமொன்று தயாரித்தல் மற்றும் அதனை அமுல்படுத்துதலின் செயற்படு நிலையிலுள்ள பிரச்சினையான நிலைமையின் காரணமாக வங்கிக்கு அவ்வாறான திட்டமொன்று சமர்ப்பிக்க முடியாதிருந்தது.	இதுவரை கடனை மீளத்தீர்த்து வைப்பதற்கு கம்பனி தவறியிருந்தது.

தொகை 2018 ஒக்டோபர் 23 ஆம் திகதி கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் அத்திகதி வரையில் இலங்கை வங்கிக்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 199.05 மில்லியன் தொகை குறைக்கப்பட்டு மிகுதி தொகையான ரூபா 301.38 மில்லியன் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் 35 சதவீதமான தொகை அதாவது ரூபா 105.98 மில்லியன் கடன் பணத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்கு முரணாக செலவிடப்பட்ட ஊழியர் சம்பளம் செலுத்துதல், ஊழியர் சேமலாப / நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் செலுத்துதல், கடன் வட்டி செலுத்துதல், மிகை ஊதியப் படி செலுத்துதல், மேலதிகப் பற்று செலுத்துதல், நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் என்பவற்றிக்காக செலவிடப்பட்டிருந்தன. இந்த ரூபா 500 மில்லியன் கடன் தொகையையும் இணங்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கு கம்பனி தவறியிருந்ததுடன், 2023 மே 26 இல் உள்ளவாறு நிலுவை கடன் வட்டி தொகை ரூபா 264.43 மில்லியன்

ஆக இருந்தது.

5. **வரி பிரமாணங்களுடன் இணங்காமை**

(அ)	கம்பனியின் டைல் செயற்திட்டத்தின் கீழ் 2021 செப்டம்பர் மாதம் முதல் 2023 யூன் 30 வரை ரூபா 2,924.73 மில்லியன் விற்பனை வருமானம் ஒன்று பெறப்பட்டிருந்த போதிலும், 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 129.59 மில்லியன் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.	2022	பெறுமதி சேர் வரி சட்டத்தின் பிரகாரம் அறவிடப்பட்ட வரி தொகை உடனடியாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.	2021 ஆம் ஆண்டு முதல் விற்பனைப் பெறுமதியில் கணக்கீட்டு தரவு முறைமையில் உள்ளடக்கப்படுவதுடன் தற்போது இதுவரையில் 2021 ஆம் ஆண்டில் முதல் 03 காலாண்டின் விற்பனைப் பெறுமதிகள் தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.	விற்பனை வருமானம் பெறப்பட்டிருந்த போதிலும் வட் வரி மீதி செலுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	2023 யூன் 15 ஆம் திகதிய நாபா/வரி/நிலுவை செலுத்துதல் 2021 என்ற கொழும்பு மாநகர சபையின் பிரதி நகர பொருளாளரின் (வருமானம்) கடிதத்தின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நிலுவை ஆதனவரிப் பணம் ரூபா 23.34 மில்லியன் 2023 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வரையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.	2021 2022	செலுத்த வேண்டிய ஆதன வரி தொடர்பான விபரங்கள் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களில் இருந்து விசாரணை செய்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	அதன் போது 2007 முதல் 2021 வரையான நிலுவை ஆதனவரியை செலுத்துதல் தொடர்பான திட்டமொன்று சமர்ப்பிக்குமாறு வெளியிடப்பட்டிருந்த போதும் தற்போது நிதிக் கஷ்டங்களின் காரணத்தைக் கொண்டு இவ்வாறான திட்டமொன்று சமர்ப்பிப்பதற்கு முடியாதுள்ளது.	2007-2021 நிலுவை ஆதனவரியாக ரூபா 23.34 மில்லியன் அட்டுறுவாக காணப்படுகின்றது.

6. முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ)	2021 ஒக்டோபர் 26 ஆம் திகதிய இலக்கம் அமப21/1779/302/002/ -1 அமைச்சரவைத் தீர்மானத்தின் படி பிரதமர் / ஐந்தாவது நிறைவேற்று சனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தை பழுதுபார்த்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தேவையான கட்டிடப்பொருட்கள், உபகரணங்கள் மற்றும் வழங்கமுடியுமான சகல விடயங்களையும் வழங்குதல் மற்றும் சிவில் பொறியியல் வடிவமைப்பாளர் மற்றும் உள்ளக நிர்மாண வடிவமைப்பு தொடரபான ஆலோசனை ரீதியான சேவைகள் கேள்வி கோரல் இன்றி அரசாங்க நிறுவனம் ஒன்றான கூட்டுத்தாபனத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான பிரகாரம் நிறுவனத்துடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் கம்பனியால் தேவையான பொருட்கள் மற்றும் போதியளவில் எண்ணிக்கைகள் உள்ளடக்கிய மதிப்பீடு மற்றும் பொருள் வழங்கும் நிபந்தனை, பணம் செலுத்துதல் போன்ற விடயங்களை	2021 2022	அமைச்சரவைத் தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கும் பெறுகை வழிகாட்டிக் கோவையின பின்பற்றுவதற்கும், கொள்வனவாளர்களுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	கொவிட் சந்தர்ப்பத்தின் போது இந்தக் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் இந்த பரிந்துரையில் குறிப்பிடப்பட்ட முறையில் நடவடிக்கை எடுத்தல் கஷ்டமாக இருந்தது.	அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	உள்ளடக்கி உடன்படிக்கையில் பிரதமர் அலுவலகத்துடன் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.				
(ஆ)	மேலும் ஆலோசனை ரீதியான சேவைகளை வழங்கும் கம்பனியின் பணிகளில் உள்ளடக்கப்படாதிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புகளுக்குத் தேவையான சிவில் பொறியியல் ரீதியான இல்ல ஆய்வு மற்றும் உள்ளக வடிவமைப்பு தொடர்பான ஆலோசனை ரீதியான சேவைகளை வழங்குவதற்காக கூறுவிலை கோரல், தெரிவு செய்தல் போன்றவைகளுக்காக எந்தவொரு பெறுகை நடைமுறைகளும் பின்பற்றப்படாமல் எந்தவொரு உடன்படிக்கையும் இன்றி கம்பனியால் ரூபா 10 மில்லியன் தொகை உள்ளக வடிவமைப்பு கலைஞருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் 2023 யூலை 30 ஆம் திகதி வரையில் உரிய பட்டியலின் பெறுமதி ரூபா 3.07 மில்லியன் பிரதமர் அலுவலகத்தால் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.	2021 2022	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை பின்பற்றுவதற்கும் வாடிக்கையாளர்களுடன் ஆரம்பத்திலேயே உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	கொவிட் சந்தர்ப்பத்தின் போது இந்தக் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் இந்த பரிந்துரையில் குறிப்பிடப்பட்ட முறையில் நடவடிக்கை எடுத்தல் கஷ்டமாக இருந்தது.	பெறுகை வழிகாட்டியின் பிரகாரம் நடடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ)	மேற்கூறப்பட்ட வகையில் தெரிவு உள்ளக வடிவமைப்பு கலைஞரின் வாய்மூல ஆலோசனையின் அடிப்படையில் அவரால் பெயர் குறிப்பிடப்பட்ட 16 வழங்குநர்களிடமிருந்து இந்த செயற்திட்டத்திற்குத் தேவையான பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு பெறுகை நடைமுறைகள் பின்பற்றாமல் மேற்கொள்ளப்பட்ட கட்டிட கூட்டுத்தாபனத்தின் கொள்வனவு கட்டளையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்து. பின்னர் உத்தியோகபூர்வ இல்லங்களின் செயற்திட்டத்திற்கு பொருட்கள் விநியோகித்து அவை கம்பனியின் பெயரில் பட்டியல் இடப்பட்டிருந்தது. பிரதமர் அலுவலகத்தால் மீளளிப்புச் செய்யப்படுகின்ற செலவினங்களை உள்ளடக்கிய உறுதிச்சீட்டிடுக்ககளில் கனிசமான அளவு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்த துடன் இது தொடர்பாக 2023 ஆகஸ்ட் 07 ஆம் திகதி எழுத்து மூலம் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அறிக்கைத்	2021 2022	கொள்வனவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையை பின்பற்றுவதற் கும் கொடுப்பனவு களை சரியாக உறுதிப்படுத் திக் கொள்வதற்க ாகவும் கொடுப்பனவு உறுதிச்சீட்டு க்களில் தேவையான உபகரண துணை ஆவணங்கள் யாவும் இணைக்கப்ப டல் வேண்டும்.	இந்த கொடுப்பனவு உறுதிச்சீட்டிற்குரிய தேவையான உபயோக ஆவணங்கள் 2023 ஆம் ஆண்டு முதல் சரியான ஆவணங்களுடன் இணைக்கப்பட்டுள் ளது.	இந்த செயற்திட்டத்திற் காக பெறுகைகள் வழிகாட்டி பின்பற்றப்படாதி ருந்ததுடன் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களும் சரியாக சமர்ப்பிக்கப்பட வில்லை.

	திகதி வரையிலும் அந்த உறுதிச்சீட்டிற்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.				
(ஈ)	2023 யூலை 30 ஆம் திகதி வரையில் பிரதமர் அலுவலகத்தால் தீர்த்துவைக்கப்பட்ட தொகை ரூபா 559.59 மில்லியன் ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் மேலும் அறவிட வேண்டிய தொகை ரூபா 90.23 மில்லியன் ஆகும்.	2021 2022	இந்த சகல பணத்தையும் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	கொள்வனவு கட்டளை மற்றும் கடன் ஆவணங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகளைக் குறிப்பிட்டு அறிக்கையொன்று 2024.10.23 ஆந் திகதி அமைச்சிற்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.	தற்போது அமைச்சரவை அலுவலகத்தில் இருந்து அறவிடப்படாத தொகை ரூபா 84.63 மில்லியன் ஆகும்.
7.	**செயலாற்றல்**				
	1970 இன் 33 ஆம் இலக்க இலங்கை அரச வணிக கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1971 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனம் 1992 ஆம் ஆண்டின் போது 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழும், 2010 ஆம் ஆண்டின் போது 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழும் மீண்டும் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் தூர நோக்காக ‘‘நியமத்துக்கு இணங்க உயர் தரத்தினை உடைய கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை போட்டி விலையின் கீழ் நாடளாவிய ரீதியில் வழங்குதலுக்கு முன்னுரிமை அளித்தல்	2022	கம்பனியின் நோக்கம் மற்றும் பணிக்கூற்றின் பிரகாரம் செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் செயற்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.	1977 இன் பின்னர் திறந்த பொருளாதார கொள்கை ஏற்பட்டதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. எனினும் இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற கட்டிடம் மற்றும் நிர்மாணப் பொருட்கள், இயந்திர உபகரணங்கள், உபகணங்கள், கருவிகள் மற்றும் ஏனைய துணைப் பாகங்கள் இலங்கை முழுவதும் விற்பனை செய்தல் மற்றும் விநியோகித்தல் போன்ற சகல நடவடிகைகளும் நிறுவனத்தின் மூலம்	கம்பனி ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் தொலைநோக்கின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்து நியாயமான வகையில் இலாபத்தை உழைத்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

மற்றும் அரச நிறுவனமாக சமூப் பொறுப்புக்களை நிறைவேற்றி இலங்கை மக்களுக்கு ஆகக்கூடிய நம்பிக்கையினைக் கட்டியெழுப்புதல்" ஆகும். எனினும் தற்போது வரையில் பிரதான அலுவலக சூழலில் பேணிச்செல்லப்படுகின்ற நவீனமயப்படுத்தப்பட்ட கண்காட்சிக் கூடத்திலும், கிளை அலுவலகங்களின் மூலமும் தனியார் கட்டிடப் பொருட்கள் உபகரணங்கள் வழங்குபவர்களிடமிருந்து கொள்வனவு செய்த கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் இலாப எல்லையுடன் விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுதலைக் காணக்கூடியதாக உள்ளது. இதன் பிரகாரம் கம்பனி ஸ்தாபிக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் கம்பனியின் தூர நோக்கு மேவுகை செய்யாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்த 2013 முதல் 2018 வரையான 06 வருட காலத்தின் போது தேறிய நட்டம் ரூபா 15 மில்லியன் முதல் ரூபா 167 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

நிறைவேற்றப்படுகின்றதை அறியத் தருகின்றோம். இந்த சட்டம் எதிர்காலத்தின் போது நிறுவனத்திற்கு பொருத்தமான வகையில் மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் தற்போது பொருளாதாரத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் போட்டிச் சந்தையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நுழைவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

8.	**நோக்கங்களுக்கு முரணான கொடுக்கல் வாங்கல்கள்** மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டத்திற்காக கட்டிப் பொருள் கூட்டுத்தாபனத்திலிருந்து பொருட்கள் விநியோகித்தல். 2015 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான 07 வருட காலப் பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலம் அமுல்படுத்தப்பட்ட சூரிய பொக்குன தேபொக்காவ வீடமைப்பு திட்டத்தின் வீட்டு உரிமையாளர்களுக்குத் தேவையான கட்டிடப் பொருட்கள் கடன் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திலிருந்து விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த கட்டிப் பொருட்கள் கூட்டுத்தாபனத்திற்குரிய அம்பலாந்தோட்ட, தங்காலை, லுணுகம்பெஹகர, திஸ்ஸ, வீரதெட்டிய, எம்பிலிபிட்டி, சூரியவெவ போன்ற கிளைக் களஞ்சியங்களிலிருந்து ரூபா 34.69 மில்லியன் பெறுமதியான கட்டிடப் பொருட்கள் எந்தவொரு வரையறையும் இன்றி விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2023 யூன் 30 ஆந் திகதி வரை இந்தக் கடன் மீதி தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்	2022	கம்பனியின் வியாபார நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய முடியுமான வகையில் கம்பனியின் முகாமைத்துவம் செயற்படுதல் வேண்டும்.	மாதிரி கிராம நிகழ்ச்சி திட்டத்தில் பொருட்கள் வழங்கியவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் கடமை ஆற்றிய உத்தியோகத்தர்கள் மாதிரிக் கிராமங்களில் வாரத்தில் 02 நாட்கள் நிதி சேகரித்தல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.	நிலுவைப் பணம் இதுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

லை.

9.	**இனங்காணப்பட்ட நட்டம்**					
(அ)	தேசிய போட்டியாளர் கேள்வி கோராமல் இறக்குமதியாளர்களின் கூறு விலையினை கோரி பாக்கிஸ்தான் நிறுவனம் ஒன்று இலங்கையின் கம்பனியான DMW Ventures (Pvt) Ltd உடன் மெற்றிக் தொன் 1 அமெரிக்க டொலர் 79.50 வீதம் சீமெந்து மெற்றிக் தொன் 5600 தொகை கிலோ கிராம் 50 வீதம் "BMC" பெயர் அச்சிட்டப்பட்ட கடதாசி உறைகளில் வழங்குவதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2022 மார்ச் 14 ஆந் திகதி அதற்கான பணம் வைப்பாக ரூபா 05 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், நாட்டில் காணப்படுகின்ற அந்நிய செலவாணி நெருக்கடியின் இடையில் நாணய கடிதம் திறத்தல் மக்கள் வங்கி நிராகரித்தன் காரணமாக சீமெந்து இறக்குமதி செய்ய முடியாது இருந்ததுடன் அது தொடர்பாக முன்னர் உறுதிப்படுத்தல் இன்றி செலுத்தப்பட்ட ரூபா 05 மில்லியனை மீண்டும் அறவிட முடியாதிருந்தது.	2022	ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	உரிய செயற்திட்டத்திற்காக வழங்கல் மேற்கொள்ளாமையின் அடிப்படையில் இந்த பணம் மீள அறவிடுவதற்காக DMW Ventures (Pvt) Ltd நிறுவனத்திற்கு எழுத்து மூலம் கோரப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆரம்ப விசாரணை ஒன்று மேற்கொண்டு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.	வழங்குநரின் பதில் கடிதம் ஊடாக நிறுவனத்தின் மூலம் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை அமுல்படுத்தாதிருந்த மையால் இந்த வைப்பை மீண்டும் வழங்குதல் நிராகரிக்கப்பட்டுள்ளது.

10.	**சொத்துக்கள் முகாமைத்துவம்**				
(அ)	03 றூட் 35.6 பேச் அளவான அநுராதபுர காணியொன்றை வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்த போதும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி உரிமையினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	2021 2022	உரிய ஆதனம் தொடர்பாக உரித்துறுதிய பெற்றுக்கொள்வதற்கும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கும் கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	காணி மற்றும் கட்டிடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக கலந்துரையாடலொன்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (நிருவாகம்) உடன் 2024.04.30 ஆந் திகதி நடாத்தப்பட்டுள்ளது.	அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றி நிறுவனத்திற்குரிய ஆதனங்களின் உரித்தைக் கையேற்பதற்காக இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	இலக்கம் 549/A, பொருப்பன, மொரட்டுவை காணியின் கையளித்தலைப் பெற்றுக்கொள்வதற்காக 2019 ஆகஸ்ட் 21 ஆம் திகதிய இலக்கம் அமப/19/2192/122/076 என்ற அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் காணியின் உரித்து கம்பனிக்கு பெற்றுக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட போதும், கம்பனியால் காணியின் உரித்துறுதியை தயாரித்துக் கொள்வதற்கு இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2021 2022	உரித்துறுதிய தயாரித்து பதிவு செய்து கொள்வதற்கு தொடர்புடைய நிறுவனத்துடன் கம்பனி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளருடன் (நிருவாகம்) 2024.04.30 ஆந் திகதி நடைபெற்ற கலந்துரையாடலின் போது உரித்துறுதி எழுதும் நடவடிக்கைகள் மேல் மாகாணக் காணி ஆணையாளர் ஊடாக மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	இதுவரையிலும் உரித்துறுதி தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.
(இ)	புதிய மதிப்பீட்டு அறிக்கையினை பெற்றுக்கொள்ளாமல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய விலையின் கீழ்	2021 2022	சொத்துக்களை மதிப்பீடு செய்து அதன் பிரகாம் வாடகை	பழைய கூறுவிலைகளை நாளதுவரையாக்கி உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்காக	இதுவரையும் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

	மீளாய்வாண்டின் போதும் சீமெந்து களஞ்சியம் இலக்கம் 06 களஞ்சியம் மற்றும் சங்கராஜ இலக்கம் 11 களஞ்சியம் வாடகைக்கு விடப்பட்டிருந்தது.		அளவினை நாளது வரையாக்கி களஞ்சியங்கள் வாடகைக்கு வழங்கப்படல் வேண்டும்.	புதிய கூறு விலைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீட்டுத் திணக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.	
(ஈ)	2015 ஏப்ரல் முதல் ஒரு சதுர அடி ரூபா 45 வீதம் 1480 சதுர அடி அளவான இலக்கம் 541 ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் கம்பனி வளவில் கம்பனிக்கு சொந்தமான களஞ்சியமொன்று ரூபா 66,600 மாதாந்த வாடகையில் வியாபாரி ஒருவருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கை காலம் 2017 ஏப்ரல் 09 ஆம் திகதி வரையாக இருந்ததுடன் புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் ஆரம்ப உடன்படிக்கையின் பிரகாரம் காணப்பட்ட வாடகைத் தொகைக்கே 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் வழங்கப்பட்டிருந்தது.	2021 2022	புதிய மதிப்பீட்டின் பிரகாரம் களஞ்சியங்களை வாடகைக்கு வழங்குவதற்கும் நிலுவை பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இந்த களஞ்சியத்தை வாடகைக்கு வழங்குவதற்காக உடன்படிக்கை செய்து புதிய மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீட்டு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.	இதுவரையும் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
11.	**நிதி முகாமைத்துவம்**				
	கம்பனியால் 12 வங்கிக் கணக்குகள் பேணிச் செல்லப்படுவதுடன் அதில் இரண்டு செயலிழந்த நிலையில் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டிற்காக சரியாக ஆரம்ப மற்றும் இறுதி	2021 2022	மிகவும் சரியாக கணிப்பீடு செய்யப்பட்ட ஆரம்ப மீதியை அடிப்படையாகக் கொண்டு காசேடு மற்றும்	2023 ஆம் ஆண்டிற்காக காசேடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய வங்கி இணங்கக்கூற்று தயாரிக்கப்படவில்லை. 2024 ஆம் ஆண்டில் சகல	இதுவரையும் சரியான முறையில் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

	மீதிகளை குறிப்பிட்டு காசேடு பேணிச் செல்லப்பட்டிருக்காதது டன். வங்கி கூற்றும் தயாரிக்கப்பட்டிருக்கவி ல்லை. அந்த வங்கி கணக்கு மீதி உறுதிப்படுத்தலின் பிரகாரம் 03 வங்கிக் கணக்குகளில் வரவு மீதி ரூபா 25.78 மில்லியன் ஆக இருந்ததுடன், 07 கணக்குகளில் செலவு மீதி ரூபா 303.04 மில்லியன் ஆகும். மதன் காரணமாக கம்பனி போதியளவான பிரகாரம் நிதி தொடர்பான நிர்வாகத்தை அமுல்படுத்தாதிருந்தம ம அவதானிக்கப்பட்டது.		வங்கி இணக்கக் கூற்று மாதாந்தம் தாயரிப்பதற் கு நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்து வம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந் ததுடன் அது நிதி முகாமைத்து வம் தொடர்பாக அவர்களின் பொறுப்பாகவு ம் உள்ளது.	நடைமுறைக் கணக்குகளுக்காக வும் காசேடு தயாரிக்கப்பட்டுள் ளதுடன் வங்கி இணக்கக்கூற்று தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.	
12.	**மனித வள முகாமைத்துவம்** வணிகப் பிரிவில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களிடம ிருந்து அலுவலகத்தில் (மேசை இலாச்சி) கம்பனியின் வழங்குனர்களில் மூவரின் தலைப்புக்கள் மற்றும் முத்திரை வைக்கப்பட்டதன் காரணமாக 2022 ஒக்டோபர் 27 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியின் முன்னாள் பொது முகாமையாளரின் வேலை நீக்கஞ்செய்யப்பட்டு வர்த்தக பிரிவு முத்திரை வைக்கப்பட்டிருந்தது.	2022	தேவையான நடவடிக்கைக ளை எடுப்பதற்கு முகாமைத்து வம் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	கம்பனி வழங்குநர்களின் கடிதத் தலைப்பு மற்றும் முத்திரை கண்டுபிடிக்கப்பட்ட தன் காரணமாக சேவை நிறுத்தப்பட்டிருந்த இந்த உத்தியோகத்தர்க ள் தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் நடாத்தி அந்த விசாரணையின் பின்னர் முறையான ஒழுக்காற்று பரிசோதனை மேற்கொள்ளப்படுக ின்றது.	இதுவரையும் பரிசோதனை பூர்த்திசெய்து இறுதித் தீர்மானத்திற்கு வந்திருக்கவில் லை.

இது தொடர்பாக 2022 நவம்பர் 28 ஆந் திகதியில் கொழும்பு குற்றப் புலனாய்வு பணியகத்தின் இலக்கம் IR/629/06/22 என்ற முறைப்பாடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது . எனினும், இது வரையிலும் பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு அறிக்கை சமர்பிக்கப்படவில்லை.

அவ்வாறே பொது முகாமையாளர் 2020 நவம்பர் 02 ஆந் திகதி அந்த பதவிக்கு நியமிக்கும் போது நேர்முக பரீட்சைக்காக சமர்ப்பிக்கப்பட்ட சகல சான்றிதழ் போலியானது என உள்ளக கணக்காய்வாளரின் 2023 சனவரி 27 ஆம் திகதிய அறிக்கையில் தலைவர்/பணிப்பாளர் சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இது வரையும் அது தொடர்பான விசாரணைகள் நடாத்தி தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.42 நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனி

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்த பொறுப்புக்கள் ரூபா	தேறிய சொத்துக்கள் ரூபா	வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்)	அபிப்பிராயம்
2021	3,657,997,096	1,315,426,122	2,342,570,974	451,854,296	முனைப்பழியுள்ள்
2022	10,972,479,358	826,328,569	10,146,150,789	7,839,601,455	முனைப்பழியுள்ள்
2023	12,745,901,727	546,533,813	12,199,367,913	2,105,068,141	முனைப்பழியுள்ள்

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
01	2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெற வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 80 மில்லியன் பெறுமதியானது 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலும் கம்பனியின் இறக்குமதி வரி விலக்கு வழங்கப்பட்ட காலப்பகுதிக்கு உரியதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து மீளளிப்பு செய்யப்பட வேண்டிய ரூபா 91 மில்லியன் பெறுமதி சேர் வரி மற்றும் கம்பனியின் அன்றாட கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய	2021	செலுத்த வேண்டிய வரி மற்றும் பெற வேண்டிய வரி தனித்தனியாக காட்டப்பட வேண்டும்.	2024 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள், கம்பனியின் சாதாரண நடவடிக்கைக்களின் மீது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திட மிருந்து பெறப்பட வேண்டிய பெறுமதி கூட்டு வரியை தனியாகப் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்படும்.	அவதானிப்பு மாறா நிலையில் காணப்படுகின்றது.

	ரூபா 11 மில்லியனான பெறுமதி சேர் வரிப் பெறுமதி ஒன்றுக்கொன்று ஈடு செய்வதன் மூலம் உருவாகியது ஆகும். அதற்கமைய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கம்பனியின் பொறுப்புகள் ரூபா 11 மில்லியனாலும் மீளளிப்பு செய்யப்பட வேண்டியதாக காணப்பட்ட வரிச் சொத்தும் அந்த பெறுமதியால் குறைவடைந்திருந்தது.				
02	2021 நவம்பர் 17 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டு கையேட்டின் 7.7 ஆம் பந்தியின் படி தாய்க் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் துணைக் கம்பனியின் நடவடிக்கைகளின் கண்காணிப்பு மற்றும் மீளாய்வுக்காக வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் வியூகமொன்றை தயாரிக்க வேண்டிய போதிலும், நகர முதலீட்டு மற்றும் அபிவிருத்தி (தனியார்) கம்பனியின் செயற்பாடுகள், நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகள் தொடர்பில் இந்த	2023	கையேட்டின் பந்தி 7.7 இன் படி துணைக் கம்பனிகளின் செயற்பாடுக ளை மேற்பார்வைய ிட ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.	கம்பனியினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பணியாளர்கள் கம்பனி இயக்குநர்கள் குழுவின் அங்காரத்துடன் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள னர்	அவதானிப்பு மாறா நிலையில் காணப்படுகின்றது.

	அறிக்கையின் திகதி வரையிலும் அவ்வாறானதொரு வியூகம் வகுக்கப்பட்டிருக்கவில்லை.				
03	கம்பனி ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய நோக்கங்களின் பிராகரம் இதனை தனியானதொரு நிறுவனமாக ஆரம்பித்தல் நடைமுறைக்கு சாத்தியமான போதிலும், கம்பனியின் தற்போதைய நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி சபையின் உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்படுகின்றமையால் தனியானதொரு கம்பனியொன்றாக பேணிச் செல்லல் எவ்வளவு தூரம் ஆக்கபூர்வமானது என்பது கணக்காய்விற்கு பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது.	2023	இக் கம்பனி நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஒரு பிரிவாகச் செயற்பட வேண்டும்,	கம்பனியினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகையைத் தீர்ப்பனவு செய்த பின்னர், அமைப்பு அக விதியின் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களின்படி முதலீட்டு நடவடிக்கைகளில் கவனம் செலுத்த உயர் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்படும்.	அவதானிப்பு மாறா நிலையில் காணப்படுகின்றது
04	கம்பனியின் அமைப்பு அகவிதிக்கமைய எந்தவொரு பிரதேசத்திலும், எந்தவொரு அபிவிருத்தி செயற்திட்டத்தையும் செயற்படுத்தல், கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கம்பனியின் நோக்கமான	2023	அமைப்பு அக விதியின் படி பல்வகைப்படுத்தல் உத்திகள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.	பிற திட்ட நடவடிக்கைகளில் முதலீடு செய்ய போதுமான நிதி வலிமையைக் கருத்தில் கொண்ட பின், உயர் முகாமைத்துவம் எதிர்காலத்தில் செயல்படுத்துவதில் கவனம்	அவதானிப்பு மாறா நிலையில் காணப்படுகின்றது

	போதிலும், இந்த பரந்த நோக்கத்தினை நிறைவேற்றுதல் தொடர்பில் கம்பனி நடவடிக்கை எடுக்கும் என்பது கம்பனியின் 2021-2024 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் அவதானிக்கப்படவில்லை. அதற்கு பதிலாக குத்தகை அடிப்படையில் வழங்கிய கட்டிடத்தில் வருடாந்த வாடகை மற்றும் சேவை வருமானங்கள் சேர்க்கப்பட்டமையும் கட்டிடத்தினை பராமரித்தலும் மாத்திரம் ஆகும்.			செலுத்தும்.	
05	செயல்திறன் இலக்குகள் நிதி இலக்கு மற்றும் கொள்வ்வு திட்டம் உட்பட 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்படவில்லை.	2021 2022 2023	வருடாந்த செயல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்	2021-2024 காலப்பகுதிக்கான செயல் திட்டத்தை உள்ளடக்கிய தந்திரோபாய திட்டத்தை கம்பனி கொண்டுள்ளதோடு அது விரிவாக முன்வைக்கப்படவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.	அவதானிப்பு மாறா நிலையில் காணப்படுகின்றது
06	கம்பனியின் அதிகாரிகள் அமைச்சரவையின் அனுமதியின்றி தொடர்புடைய அமைச்சு அல்லது வேறு எந்த நிறுவனத்திலும் பணிபுரிய விடுவிக்கப்படக்கூடாது	2021	இது சுற்றறிக்கையின் படி மேற்கொள்ளப்பட வேண்டும்.	கருத்துரைகள் எதுவும் பெறப்படவில்லை.	தற்போது இந்த ஊழியர்கள் கம்பனியின் பதவியில் இல்லை, ஆனால் அந்த நேரத்தில் ஏற்பட்ட செலவுகளை கம்பனி திருப்பிச்

	, ஆனால் 2017 ஆம் ஆண்டில் இயக்குநர்கள் குழு அனுமதியுடன் 02 அளவு அளவீட்டு அலுவலர்கள் மற்றும் 2019 இல் 09 உதவி திட்டமிடல் அதிகாரிகள் ஆகியவற்றின் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு விடுவிக்கப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்ட திகதியான 2022 ஆகஸ்ட 30 திகதி வரை பணியமர்த்தப்பட்டனர். மீளாய்வாண்டில் ரூ.7,553,369 நகர அபிவிருத்தி அதிகாரசபையால் சம்பளமாக திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.			செலுத்தவில்லை.
07	மீளாய்வாண்டின் இறுதித் திகதியின் படி, கம்பனியின் ”செட்சிறிபாய கட்டிடம் – II இன் கட்டிடத்தைப் பயன்படுத்தும் அரச நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய வாடகை வருமானம், வர்த்தகக் கடன்பட்டோர் மீதி ரூ.142.71 மில்லியனாகவும், அதில் ரூ.41.62 மில்லியன் 03 மாதங்களுக்கும் மேலாக நிலுவையில் இருந்தது.	2022	பெற வேண்டிய கடன்பட்டோர் மீதிகள் உடனடியாக வசூலிக்கப்பட வேண்டும்.	கருத்துரைகள் எதுவும் பெறப்படவில்லை.	காணப்படுகின்ற மீதிகள் பின்னர் கிடைத்தாலும் புதிய மீதிகள் உருவாக்கப்படும். மேலும் கம்பனியின் கணக்கு முறையின் குறைபாடுகள் காரணமாக, இத்தகைய நீண்ட கால மீதிகள் காட்டப்படுகின்றன .

3.43 காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கம்பனி

	மொத்த சொத்துக்கள்	மொத்த பொறுப்புக்கள்	உரிமை மூலதனம்	வரிக்கு முன் இலாபம் (நட்டம்)	அபிப்பிராயம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	
2021	453,272,633	483,971,095	(30,698,462)	332,980	முனைப்பழியுள்ள
2022	423,599,291	440,913,811	(17,314,520)	11,462,577	முனைப்பழியுள்ள
2023	506,770,221	456,156,051	50,614,170	7,561,406	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1	கம்பனிக்கு சொந்தமான ரூபா 301.28 மில்லியன் பெறுமதியான கடல் மணல் பொதியிடல் கட்டடம் ரூபா 326.30 மில்லியன் தொகையில் அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு தாய்க் கம்பனியின் மூலம் 2021 ஆம் ஆண்டின் போது கையேற்கப்பட்டிருந்தது. எனினும் கட்டடத்தின் கிரயம் நீர் தேங்கி நிக்கும் தடாகத்தை உள்ளடக்கி ரூபா 331.02 மில்லியன் ஆக கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிரு	2023 2022	கட்டிடத்தின் பெறுமதி கிரயம் மாத்திரம் மதிப்பீட்டுப் பெறுமதியில் குறைக்கப்பட வேண்டும்.	நடைமுறை வேலைக் கணக்கில் காணப்பட்ட கட்டிடத்தின் மதிப்பீட்டு அறிக்கைக்குரிய பெறுமதி நீக்கப்பட்டுள்ளதுடன் நீர் தேக்கி வைக்கும் தடாகத்தையும் உள்ளடக்கிய மொத்தக் கொடுக்கல் வாங்கல்களும் மேற் கொள்ளப்பட்ட பின்னர் மிகுதி பெறுமதியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இந்த செயற்திட்டத்திற்குரிய சகல சொத்துக்களையும் கையளிக்கும் நடவடிக்கைகள் மற்றம் உரிய சீராக்கங்கள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

	நந்ததுடன் கட்டடத்தின் பெறுமதி மாத்திரம் மதிப்பீட்டு பெறுமதியில் குறைக்க வேண்டியிருந்த போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட மொத்த பெறுமதியின் மதிப்பீட்டு பெறுமதிக்கு எதிராக பதிவழிக்கப்பட்டிரு ந்தது. அதன் பிரகாரம் ரூபா 25.03 மில்லியனால் கம்பனியின் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் குறை கணிப்பீடு செய்யப்பட்டிருந்த து.				
2	2019 ஆம் ஆண்டின் இறுதி வரையில் கிங்குரக்கொட தொழிற்சாலையில் மற்றும் அம்பாறை தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள துடன் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் தொழிற்சாலையில் உபகரணங்கள் எதுவும் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல்	2023 2022	கம்பனிக்குரிய சொத்துக்களை ஆகக்கூடியளவி ல் செயற்திறனாக வும், வினைத்திறனாக வும் பயன்படுத்துதல் வேண்டும்.	ஹிங்கிரக்கொட தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது கணிசமான சட்டம் (செயற்பாட்டு நட்டம்) இடம்பெற்றமையின ால் இந்த தொழிற் சாலையை மூடுவதற்கு தீர்மானிக்கப் பட்டதுடன் தொழிற்சாலையின் உபகரணங்களை பாதுகாப்பதற்காக பாதுகாப்பாளர்	தற்போது தொழிற்சாலையி ல் உற்பத்தி நிறுத்தப் பட்டுள்ளது. நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டு ள்ள காணி யின் உரித்தை கம்பனிக்கு சொந்தமில்லாதி ருந்த மையால் வாடகைக்கு வழங்குவதற்கு முடியாதுள்ளது. இயந்திர உபகரணங்களை ள வாடகைக்கு பெற்றுக்

	குறைவாகப் பயன்படுத்தப் பட்டிருந்தது. தொழிற்சாலையின் வாடகை செலுத்துதல் அல்லது வியாபார நடவடிக்கைகளுக் காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த மை குறிப்பிடப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது அதற்காக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்க வில்லை.			மாத்திரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தா ர். இதில் ஸ்தாபிக்கப்பட்ட இயந்திரம் ஏனைய நிலைய மொன்றைத் தெரிவு செய்த பின்னர் அகற்று வதற்குப் பொருத்தமாக இருந்தமையினால் அந்த இயந்திரம் இந்த நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது .	கொள்வதற்கு இணக்கம் தெரிவித்தவர்க ளுக்கு நிர்மணத் துறை பின்னடைவின் காரணமாக அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள் ளது.
3	30 வருட காலம் முதல் ஹிங்குரக்கொட, திருகோணமலை மற்றும் அப்பாறை போன்ற பிரதேசங்களில் நடாத்திச் செல்லப்படுகின்ற சீமெந்து சார்ந்த உற்பத்தி நிலையங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள் ள கூட்டுமொத்தமாக 2.1979 ஹெக்ரேயர் அளவான அரசாங்கத்திற்கும் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு ம் உரிய காணிகளின் வாடகை உரித்து அல்லது உரித்து உறுதியைப் பெற்றுக் கொள்வதற்கு கம்பனி அல்லது	2023	காணிகளின் வாடகை உரித்து அல்லது உரித்துறுதி பெற்றுக் கொள்வதற்கோ கம்பனி அல்லது தாய் நிறுவனம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இந்தக் காணிகளின் உரித்து 30 வருடங்க ளுக்கு மேற்பட்ட காலமாக கம்பனியினால் உரிமை கோராப்பட்டதுடன் சீமெந்து உற்பத்தி தவிர ஏனைய பணிகளுக்காக எதிர்காலத்தில் ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள து.	காணிகளின் வாடகை உரித்து இதுவரையிலும் பெற்றுக்கொள்ள ப்பட்டிருக்கவில் லை.

				தாய் நிறுவனமான இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது.		
4	**கடல் மணல் பொதியிடல் செயற்திட்டம்**					
(i)	செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் எந்த ஒரு செயற்திட்ட மதிப்பீடோ அல்லது சாத்தியவள ஆய்வோ இன்றி மற்றும் ஆரம்ப கிரய மதிப்பீடும் தயாரிக்கப்படாமல் கம்பனியின் தாய் கூட்டுத்தாபனத்தின் வியாபார திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவின் பிரகாரம் இந்த செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்ட துடன் அதற்காக தாய் கூட்டுத்தாபனத்தால் ரூபா 200 மில்லியன் கடன் தொகை ஒன்று 02 வருட சலுகைக் காலத்தின் கீழ் 12 சதவீத வட்டி விகிதத்தின் கீழ் 10 வருடங்களில்	2023 2022 2021	சாத்தியவள ஆய்வு மேற்கொண்டு உரிய முகாமைத்துவத் துடன் செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும்.	2018 ஆம் ஆண்டில் அரசாங்கத்தால் ஆற்று மணல் அகழ்வை வரையறுக்கும் கொள்கை ரீதியான தீர்மானம், முன்னர் காணப்பட்ட மணலுக்கான கேள்வியினையும் கவனத்திற் கொண்டு கடல் மணலை மேம்படுத்தும் நோக்கில் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் காணியை கையேற்றல் தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதும் திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டம் அமுல்படுத்தப் படாமையின் காரணமாக அவ்வாறு கூட்டுத்தாபனத்திற் குச் சொந்தமான இந்த காணியை கம்பனிக்கு கையேற்பதற்கு	இந்த செயற்திட்டம் தற்போது அமுல்படுத்தப்ப டா திருந்ததுடன் அதற்காக தாய் கூட்டுத்தாபனத்த ால் துணைக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 200 மில்லியன் கடன் தொகையில் ரூபா 141.233,022 தொகை கூட்டுத்தாபனத்தி ற்கு கிடைக்க வேண்டிய தாக காணப்பட்டது. மேலும் இந்த செயற்திட்டத் தற்காக ஈடுபடுத்தப்பட்ட காணி மற்றும் கட்டிடம் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வாடகை உடன்ப டிக்கையின்றி மற்றும் அறவிட வேண்டிய பெறுமதி அறவிடப்படாமல் பயன்படுத்துவத

தீர்த்து வைப்பதற்கு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்திற்காக கம்பனியால் வழங்கப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 382.50 மில்லியன் ஆக இருந்ததுடன் செயற்திட்டத்தை நடாத்திச் செல்கின்ற தாய் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணி தொடர்பாக எந்த ஒரு உடன்படிக்கையிலும் கைச்சாதிடுவதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தை ஆரம்பித்து 02 வருடங்கள் அளவிலான குறுகிய காலத்திற்கு இடையே அதாவது 2020 ஆம் ஆண்டின் போது தாய் கூட்டுத்தாபனத்தால் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தை நடாத்திச் செல்லுதல் நட்டமாக இருந்ததாக குறிப்பிட்டு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் செயற்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது முடியாதிருந்தது. இந்த செயற்திட்டம் நடாத்திச் செல்வதன் மூலம் கம்பனி கணிசமான நட்டத்தை பெறும் நிலைமைக்கு உட்பட்டமையினால் இந்த செயற்திட்டத்தில் சில பகுதிகள் (கடல் மணல் கழுவி சுத்திகரித்தல் தவிர) நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இந்த செயற்திட்டத்திற்காக பயன் படுத்தப்பட்ட காணி கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியாக இருந்தமையால் அதல் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்துடன் அரசாங்கத் தின் அதிக உரிமைத் தன்மையை உள்ள கம்பனிக்கு வாடகைக்கு வழங்கும் எதிர்பார்ப்பில் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. ற்கு வழங்கப்பட் டிருந்தது.

	டன் தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் 2020 பெப்ரவரி 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட காணி மற்றும் கட்டிடம் 50 வருட நீண்ட கால வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு தீர்மானித்து கட்டிடம் 2021 யூன் 14 ஆந் திகதி அந்த கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.				
)ii(	றையான பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தயாரிக்கப்பட்ட சட்டகத்தை உடைய கட்டமைப்பு இரும்பு சட்டகத்திற்காகவும், உரிய கட்டிடங்களை நிர்மானிப்பதற்காக கம்பனியால் செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா 211.93 மில்லியன் ஆக இருந்ததுடன் இந்த இரும்பு கட்டிட கட்டமைப்புகளை கொள்வனவு செய்ததால் ஏற்பட்ட மோசடிகள் தொடர்பாக பரிசோதனைகள் நடாத்துவதற்கு	2023 2022 2021	சட்ட ரீதியான நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் இதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினர் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.	இந்த கொள்வனவுகளின் போது அறிக்கையிடப்பட்ட மோசடிகள் தொடர்பாக பரிசோதனை தேசிய பெறுகைகள் ஆணைக்குழுவிற்கும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினாலும் விசாரணை செய்யப்படுகின்றது.	தேசிய பெறுகைகள் ஆணைக்குழு மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் விசாரணை செய்யப்படுவதுடன் பொறுப்புவாய்ந்த தரப்பினர் இதுவரையி லும் இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை.

	கம்பனியால் தேசிய பெறுகைகள் ஆணைக்குழு மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அந்த முறைப்பாடுகள் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் விசாரணையில் காணப்பட்டது.				
11.	அரசாங்க பெறுகை வழிகாட்டி மற்றும் கையேட்டின் வழிகாட்டுதல்கள் 4.2.2 மற்றும் 4.2.3 ஆகியவற்றின் பிரகாரம் ஒரு பெறுகை நிறுவனமானது எதிர்பார்க்கப்படும் பெறுகை செயற்பாடுகள் மற்றும் நேர அட்டவணைக்கு பெறுகைத் திட்டத்தை	**2023**	ஒவ்வொரு பெறுகை நடவடிக்கையின் படிகளையும் விவரிக்கும் காலவரிசைப்படி பெறுகை அட்டவணையை கம்பனி தயாரிக்க வேண்டும்.	50 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய பெறுகைகளுக்கான (பிரதானம் டிபிசி) பெறுகைத் திட்டமும் நேர அட்டவணையும் தொடர்புடைய அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஷொப்பிங்	பெறுகை வழிகாட்டுதல்களின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்கான பெறுகை திட்டம் மற்றும் பெறுகை அட்டவணையை கம்பனி தயாரிக்கவி

		தயாரிக்க வேண்டும். காலவரிசைப்படி, ஒவ்வொரு தனிப்பட்ட பெறுகை நடவடிக்கையின் தொடக்கத்திலிருந்து அது முடிவடையும் வரையிலான படிகளை விவரிக்க வேண்டும். எவ்வாறாயினும், மேற்கூறிய வழிகாட்டுதல்களிற்கு ஏற்ப கம்பனியானது மொத்தத் தொகையான ரூபா 659.12 மில்லியன் உடைய 129 பெறுகை செயற்பாடுகளுக்கான பெறுகை திட்டம் மற்றும் பெறுகை நேர அட்டவணையை தயாரிக்கவில்லை.		அளவிலான பெறுகைகளுக்கான பெறுகைத் திட்டத்தை நிறுவனம் தயாரிக்கவில்லை.	ல்லை.
12.	06 அக்டோபர் 2022 திகதியிடப்பட்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை இல. 06/2022 இன் பந்தி IV இன் பிரகாரம், அரசுக்கு சொந்தமான முயற்சிகளில் பணியாற்றும் 60 வயதுக்கு மேலுள்ள ஊழியர்கள் 31 டிசம்பர் 2022 க்குள் ஓய்வு பெறுவார்கள். எவ்வாறாயினும், பெறுகைப் பணிப்பாளர் உள்ளடங்கலான முக்கிய பதவிகளிலுள்ள ஒன்பது அதிகாரிகளின் சேவைகளை அவர்களின் வயது 60 வயதைத் தாண்டியும் கம்பனி தொடர்ந்துள்ளது, மற்றும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் முறையே மொத்தமாக ரூபா 35.8	**2023**	கம்பனியானது மனித வள முகாமைத்துவத்திற்கான வாரிசுத் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும்.	இப்பிரச்னைக்கு தீர்வு காண, கம்பனி இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.	கம்பனி மனித வள முகாமைத்துவத்திற்கான வாரிசுத் திட்டத்தை இன்னும் தயாரிக்கவில்லை மற்றும் தொடர்புடைய ஊழியர்களை இன்னும் வேலைக்கு அமர்த்தவில்லை. .

	மில்லியன் மற்றும் ரூபா 29.97 மில்லியன் ஐ செலுத்தியுள்ளது.				
13.	தொடர்புடைய அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்ட தவிசாளர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சபையினால் நியமிக்கப்பட்டார் மேலும் அவர் 2022 ஆம் ஆண்டில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக சபையினால் நியமிக்கப்பட்டார். 16 நவம்பர் 2021 திகதியிட்ட அரசுக்கு சொந்தமான முயற்சிகளுக்கான கூட்டிணைக்கப்பட்ட ஆளுகைக்கான வழிகாட்டிகளின் வழிகாட்டுதல் 2.2.2 இன் பிரகாரம், இயக்குநர்கள் சபையின் தலைவரான தவிசாளர் மற்றும் வழிகாட்டுதல் 2.5.1 இன் பிரகாரம், பிரதம நிறைவேற்று அதிகாரியின் பொறுப்பு, மூலோபாய, தந்திரோபாய மற்றும் செயல்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதாகும். இந்த இரண்டு பதவிகளையும் ஒரே நபர் வைத்திருப்பது நல்லாளுகை நடைமுறைகளுக்கு எதிரானதாகும்.	**2021** **2022** **2023**	சபையின் சமநிலையைப் பேணுவதற்கும் நலன்களின் முரண்பாட்டைத் தவிர்ப்பதற்கும் தவிசாளர் மற்றும் சீஈஓ ஆகிய இரண்டு சக்திவாய்ந்த முரண்பட்ட வகிபாகங்களைப் பிரிக்க பரிந்துரைக்கப்படுகிறது.	13 ஆகஸ்ட் 2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர்கள் சபையால் இந்த முடிவு எடுக்கப்பட்டு மற்றும் 01 ஜனவரி 2025 முதல் ஒரு சீஈஓ நியமிக்கப்பட்டுள்ளார்.	இரண்டு கம்பனிகளுக்கும் புதிய தவிசாளர் நியமிக்கப்பட்டதுடன், சீஈஓ இதுவரை நியமிக்கப்படவில்லை.
14.	16 நவம்பர் 2021 திகதியிட்ட பிஈடி 01/2021 அரசுக்கு சொந்தமான	**2022** **2023**	கணக்காய்வுக் குழுவானது வழமையான அடிப்படையில்	குறைந்தபட்சத் தேவையை பூர்த்தி செய்யாவிட்டாலும், 2023 ஆம்	கம்பனி 2024 இல் 2 கணக்காய்வுக் மற்றும்

	முயற்சிகளுக்கான கூட்டிணைக்கப்பட்ட ஆளுகைக்கான வழிகாட்டிகளின் வழிகாட்டுதல் 4.2 இன் பிரகாரம், கணக்காய்வுக் குழு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடி அதன் பரிந்துரைகளை இயக்குநர்கள் சபைக்கு தெரிவிக்க வேண்டும். இருப்பினும், கம்பனியானது 16 நவம்பர் 2021 மற்றும் 01/2021 திகதியிட்ட அரசு முயற்சிகளுக்கான கூட்டிணைக்கப்பட்ட குறிப்பாணையில் முறையே 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் 3 மற்றும் 2 கூட்டங்களை மட்டுமே நடத்தியது. மேலும், 2023 ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் கணக்காய்வு குழுவால் மதிப்பாய்வு செய்யப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.		கூடி, கம்பனியின் நிதி செயல்பாடு மற்றும் பிற தொடர்புடைய விடயங்களை மேற்பார்வையிடும்.	ஆண்டில் கணக்காய்வுத் திட்டத்தை உள்ளடக்குவதில் கவனம் செலுத்தியது அடையப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறைந்தபட்சம் நான்கு கணக்காய்வுக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கான தேவை 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படும்.	முகாமைத்துவக்குழு கூட்டங்களை நடத்தியது.
15.	2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட எல்பீஜீ விற்பனை வருமானம் ரூபா 108.64 பில்லியன், ஆனால் உண்மையான வருமானம் ரூபா 87.37 பில்லியன், இதன் விளைவாக ரூபா 21.27 பில்லியன் பற்றாக்குறை காணப்பட்டது. வருமான இலக்கை தவறவிட்டாலும், கம்பனியானது 2023 ஆம் ஆண்டில் ரூபா 338.98 மில்லியன் ஐ	**2023**	பாதீட்டுக் கணக்குகள் நிதிக் கட்டுப்பாட்டின் கருவியாகப் பயன்படுத்தப்பட வேண்டும் மற்றும் தேவையற்ற செலவுகள் கம்பனியால் தவிர்க்கப்பட வேண்டும்.	2023 இல் ஏற்பட்ட நாணயமாற்று விகித நெருக்கடி புதிய எல்பிஜி சிலிண்டர்களை இறக்குமதி செய்யும் திறனில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இது சந்தை விரிவாக்கம் மற்றும் வாடிக்கையாளர் கையகப்படுத்துதல் ஆகியவற்றிற்கு அவசியமானவை.	2024 ஆம் ஆண்டிற்கு ரூபா 139 மில்லியன் சந்தைப்படுத்தல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூபா 135 மில்லியன் செப்டம்பர் 2024க்குள் செலவிடப்பட்டது.

விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் செலவுகளில் செலவிட்டுள்ளது. 2022 உடன் ஒப்பிடும் போது 304% அதிகமாகும். 8 யூலை 2022 திகதியிடப்பட்ட அதி விஷேட வர்த்தமானி இல 2287/37 மூலம் 2003 ஆண்டின் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை சட்டம் பிரிவு 18 இல் செய்யப்பட்ட திருத்தத்தின் பிரகாரம், திரவ பெட்ரோலிய வாயு ஒரு அத்தியாவசியப் பண்டமாகக் குறிப்பிடப்படுகிறது மற்றும் கம்பனி எல்பீஜீ பிரிவில் 85% சந்தைப் பங்கைக் கொண்டுள்ளது. எனவே, எல்பிஜி எரிவாயுவை சந்தைப்படுத்துவதற்கு அதிக விளம்பரச் செலவுகளை பகுத்தறிவுடன் செலவிட வேண்டியதன் அவசியத்தை நாங்கள் அவதானிக்கவில்லை. மேலும், கடந்த 5 ஆண்டுகளாக கம்பனியின் சந்தைப் பங்கு சராசரியாக 80% ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இறக்குமதியின் மீதான கட்டுப்பாடுகள் தற்போதுள்ள தேவையை பூர்த்தி செய்யும் திறனை மட்டுப்படுத்தியது மட்டுமல்லாமல் புதிய தயாரிப்புகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தும் திறனையும் கட்டுப்படுத்துகிறது. சந்தை ஊடுருவல் சவால்கள்: புதிய எல்பீஜீ உள்நாட்டு சிலிண்டர்கள் கிடைக்காததால், புதிய சந்தைகளை ஊடுருவி எங்கள் வாடிக்கையாளர் தளத்தை விரிவுபடுத்தும் திறன் கடுமையாக தடைபட்டது. இந்த நிலைமை விளம்பரச் செலவினங்களைக் குறைப்பதற்கான எங்கள் முடிவை நேரடியாகப் பாதித்தது. இது வாடிக்கையாளரின் அதிருப்தி மற்றும் சாத்தியமான நற்பெயருக்கு சேதம் விளைவிக்கும் என்பதால், பற்றாக்குறையாக இருக்கும் தயாரிப்புகளை விளம்பரப்படுத்துவதற்கு எதிர்விளைவாகக் கருதப்பட்டது. வளங்களின் மறுஒதுக்கீடு: ஆரம்பத்தில்

விளம்பரத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியானது முக்கிய வணிகச் செயல்பாடுகளை நிலைநிறுத்துவதற்காக திருப்பிவிடப்பட்டது, கம்பனி கரைப்பான் மற்றும் அதன் தற்போதைய கடமைகளை நிறைவேற்றும் திறனை உறுதிசெய்தது. இந்த மூலோபாய மறுஒதுக்கீடு மிகவும் நிலையற்ற பொருளாதார சூழலில் கம்பனியின் நிதி ஆரோக்கியத்தை பராமரிக்க இன்றியமையாததாக இருந்தது.

3.57 வரையறுக்கப்பட்ட டிஸ்ரன்ஸ் லேர்னிங் சென்டர்

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்த பொறுப்புக்கள் ரூபா	உரிமை மூலதனம் ரூபா	வரிக்கு முன் இலனபம் (நட்டம்) ரூபா	அபிப்பிராயம்
2021	128,977,651	9,045,217	119,932,434	(3,863,535)	முனைப்பழியற்ற
2022	143,529,611	15,974,078	127,555,533	(2,197,283)	முனைப்பழியற்ற
2023	146,776,961	10,068,757	136,708,204	8,699,112	முனைப்பழியற்ற

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1.	2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த பயிற்சி வேலை திட்டங்கள் மற்றும் ஏனைய செயல் நடவடிக்கைகளின் மூலம் ரூபா 58,111,029 ஆன வருமானங்கள் ஈட்டிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 24,067,890 அவ்வாறெனில் நூற்றுக்கு 41 மாத்திரம் ஈட்டப்பட்டிருந்தது. அவ்வாறே புதிய வேலை திட்டங்கள் பிரதேச பயிற்சிகள் மற்றும் உள்ளக பயிற்சி வேலை திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டி இருந்த போதிலும் அவை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2022	பாதீடானது, ஒரு முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக கவனத்தில் கொண்டு அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	தனியார் பிரிவு மற்றும் ஏனைய அரசு அல்லாத நிறுவனங்களை இலக்காகக் கொண்ட விற்பனை உபாய வழிகளின் மீது கவனத்தை மேற்கொள்ளுதல் மற்றும் தொலைக்கல்வி முறைமையின் ஊடாக பயிற்சி கிரயத்தை இழிவு மட்டத்துக்கு கொண்டு வருவதற்கு திட்டங்கள் மேற்கொள்ளுதல் இடம் பெற்றுள்ளதாக.	2024 ஆம் வருடத்தில் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 25,377,469 மாத்திரமாகும். அதில் நூற்றுக்கு 34 வசதிகளை விநியோகித்தலுக்காக பெற்றுக் கொண்ட வருமானம் ஆகும்.

2.	05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக இருந்த ரூபா 4,136,528 தொகையான பெறவேண்டிய வரி தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை .	2023	அறவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.	இறுதிக் கணக்குகளில் நட்டக்கழிவிற்காக சீராக்கங்களை மதிப்பிடுவதற்கு அறவிடப்படக்கூடிய தொகை 2023 நவம்பர் மற்றும் திசெம்பரில் உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகளுடன் பலமுறை கலந்துரையாடியிருந்தது.	தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.
3.	அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள் 2006 இன் 8.9.1 இன் பிரகாரம் முறையான ஏற்பு கடிதம் இல்லாமல் அல்லது ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு உணவு வழங்கல் சேவை வழங்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது உணவு வழங்கல் சேவைக்காக கம்பனிக்கு ரூபா 1,751,230 தொகையை செலுத்தியிருந்தது.	2021 / 2023	அரசாங்க பெறுகை வழிகாட்டல்களுடன் இணங்க வேண்டியதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	2025ஆம் வருடத்தின் பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக.	அரச பெறுகைகள் வழிகாட்டலுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.
4.	2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2023	வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	2020 மற்றும் 2021 வருடங்களின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

3.58 வ/ப கந்தளாய் சீனித் தொழிற்சாலை

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்தப் பொறுப்புகள் ரூபா	உரிமை மூலதனம் ரூபா	வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்) ரூபா	கணக்காய்வு அபிப்பிராயம்
2021	-	-	-	-	-
2022	-	-	-	-	-
2023	-	-	-	-	-

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
(அ)	2003 யூன் 02 ஆந் திகதிய பீஈஉ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு நிறைவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2020 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலுமான 4 ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு	2020-2023 கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை	சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	1994 ஆம் ஆண்டு முதல் இதுவரையிலும் ஒட்டுமொத்த தொகை வரிசை அமைச்சினால் வழங்கப்படுவதுடன், வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான பதிவுகள் காசுப் புத்தகங்களில் பேணிச் செல்லப்படுகின்றது. தொழிற்சாலைக்குரிய 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு துரிதமாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். 2022, 2023 ஆம்	2020-2023 வரையான 4 ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை

	ஆண்டறிக்கைகள் இந்த அறிக்கையின் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.			ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டவாறு உள்ளது.	
(ஆ)	1957 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் வருடாந்தம் 16,320 மெற்றிக் தொன் சீனி, 9,000 மெற்றிக் தொன் மொலேசஸ் மற்றும் வடிகட்டிய எரி திரவம் 3.9 மில்லியன் லீட்டர் உற்பத்தி இயலளவினை கொண்டிருந்தது. தொழிற்சாலையின் நிர்வாகத்தின் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் நிலவிய உச்ச செயற்திறனின்மை மற்றும் முறைகேடுகள் தொடர்பிலான விடயங்களின் அடிப்படையில் 1994 ஆம் ஆண்டின் போது 1,133 எண்ணிக்கையான அனைத்து ஊழியர்களுக்கும் பணிக்கொடை கொடுப்பனவொன்று மேற்கொள்ளப்பட்டு சேவை முடிவுறுத்தப்பட்டிருந்த துடன், அது முதல் எதுவித உற்பத்தி நடவடிக்கையும் இல்லாது தொழிற்சாலை மூடப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா	2020-2023 கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை	தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் துரிதமாக முகாமை செய்யப்பட வேண்டும்.	இந்த நிறுவனங்களை மீள்கட்டமைக்கும் பணிகள் நிதி அமைச்சின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டது.	2024 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் தொழிற்சாலையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் படவில்லை.

	3,179,245 தொகையான தேறிய சொத்துக்களின் மறைப் பெறுமதியொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டின் போது தொழிற்சாலையின் உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு இரு தனியார் கம்பனிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கை நிறைவடையும் திகதி வரையிலும் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாதிருந்தமையால் இந்த நிச்சயமற்ற நிலைமை காணப்பட்டது.				
(இ)	கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்கு 1957 ஆம் ஆண்டின் போது 11212 ஆம் இலக்கமுடைய வர்த்தமானியின் மூலம் 21233 ஏக்கர்கள் 2 ரூட்கள், 30 பேர்ச் (8,596 ஹெக்டேயர்கள்) பரப்பளவான காணி விவசாய மற்றும் காணிகள் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த 4 வலய காணிகளுக்காக 4,887 ஹெக்டேயர்களும், பண்ணை, சீனித் தொழிற்சாலை மற்றும் வீடமைப்பு தொகுதி,	2020-2023 கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை	தமது அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை வரிசை அமைச்சினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.	கந்தளாய் சீனி தொழிற்சாலைக்கு சொந்தமான காணிகள் காணி ஆணையாளர் நாயகத்தினால் கையாளப்பட்டு வருகின்றது.	நிதி அமைச்சின் கீழுள்ள இந்த தொழிற்சாலையின் காணிகளை சுவீகரிப்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப் படவில்லை.

	இளைஞர் படையணி, அகதிகள், காடு, கால்வாய்கள் மற்றும் வீதிகள் மற்றும் இராணுவ முகாம்களுக்கும், எஞ்சிய 3,709 ஹெக்டேயர்கள் ஒதுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. தற்போது அந்த நிலப்பரப்பில் சுமார் 500 எக்கர்கள் படியாக தனியார் நிறுவனமொன்றுக்கு மற்றும் அரச நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.				
(ஈ)	1999 ஆம் ஆண்டு முதல் தொழிற்சாலையில் எதுவித செயற்பாட்டு நடவடிக்கைகளும் இடம்பெறாததுட்ன, சொத்துக்களை பாதுகாத்தல் மற்றும் ஏனைய பணிகளுக்காக மாத்திரம் பொது முகாமையாளர் உள்ளடங்களாக முன்னர் நட்டஈடு வழங்கப்பட்ட விலகிச் சென்ற 33 உழியர்கள், அதாவது 3 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், 15 மேற்பார்வையாளர்கள், 4 சாரதிகள், 3 களஞ்சிய பொறுப்பாளர்கள், 6 எழுதுவினைஞர்கள்	2020-2023 கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை	அரச வளங்களை திறமையாகவும், செயற்திறனாகவும் பயன்படுத்துவதற்கு பொறுப்பான தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.	1994 மார்ச் 31, முதல் எந்த செயல்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட வில்லை, மேலும் 230 ஊழியர்கள் ஏற்கனவே உள்ள சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவும் நிர்வாக நோக்கங்களுக்காகவும் தக்கவைக்கப்பட்டுள்ளனர். அதில் சில ஊழியர்கள் இறந்துவிட்டனர் மற்றும் சில ஊழியர்கள் பதவி விலகிச் சென்றுள்ளனர். தற்போது, 33 ஊழியர்கள் எஞ்சியுள்ளனர். மீதமுள்ள	எந்தவொரு தொழிற்பாடும் இடம்பெறாத இந்த நிறுவனத்தினால் 33 ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்படுவதுடன், விளைவற்று காணப்படும் அரச வளங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படவில்லை.

மற்றும் 2 தொழில்நுட்ப உதவியாளர்கள் தற்போது சேவையாற்றியவாறு உள்ளதுடன், 2020, 2021, 2022 மற்றம் 2023 ஆம் ஆண்டுகளில் சம்பளம் மற்றும் படிகள், மேலதிக நேர படிகள் ஊழியர் நலன்புரி நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றுக்கு முறையே ரூபா 14,822,246, ரூபா 15,000,761, ரூபா 16,838,619 மற்றும் ரூபா 16,569,952 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க பொது திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது .

3.59 இலங்கை காலநிலை நிதியம் (தனியார்) கம்பனி

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்தப் பொறுப்புகள் ரூபா	உரிமை மூலதனம் ரூபா	வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்) ரூபா	கணக்காய்வு அபிப்பிராயம்
2021	13,887,731.42	3,037,164.61	10,850,566.81	196,388,57	முனைப்பழியுள்ள்
2022	16,297,269.65	2,916,630.43	13,380,638.62	2,530,071.81	முனைப்பழியுள்ள்
2023	-	-	-	-	-

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1.	பொது முயற்சிகள் திணைக்க ளத்தின் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற சுற்றறிக்கையின் செயற்பாட்டு கைநூலின் 2 ஆம் பந்தியின் கம்பனியால் செயற்பாட்டு முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவி ல்லை.	2021	சுற்றறிக்கையின் செயற்பாட்டு கைநூலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இது தொட்பாக கண்டறிந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	கம்பனியில் இருக்கின்ற வரையறுக்கப்பட்ட பதவியணியினரின் இயலுமான வகையில் செயற்பாட்டு முறைமை மற்றும் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள் ளது. கம்பனியின் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2027-2028 காலப் பகுதியின் போது பொது முயற்சி வளத் திட்டமிடல் (ERP) தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள து.
2.	பொது முயற்சிகள் திணைக்க ளத்தின் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற சுற்றறிக்கையின் செயற்பாட்டு கைநூலின்	2021	சுற்றறிக்கையின் செயற்பாட்டு கைநூலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	செயலாற்றல் குறிகளை தயாரித்து கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளதுடன்	2024 ஆம் ஆண்டு முதல் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது இது தொடர்பாக மீளாய்வு மேற்கொள்ளப்படும்

	பந்தி இலக்கம் 7.3 இன் பிரகாரம் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் ஆரம்ப செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதீட்டுடன் (KPI) கால ரீதியில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.			எதிர்காலத்தில் மீளாய்விற்கு சமர்ப்பிக்கப்படும்.	.
3.	பொது முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற சுற்றறிக்கை வழிகாட்டியின் இலக்கம் 6.6 இன் பிரகாரம் வரைவு வருடாந்த அறிக்கை மற்றும் இறுதிக் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் 2021 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 20 மாதங்கள் தாமதமாகி அதாவது 2023 ஒக்டோபர் 30 ஆம் திகதி திகதியும், 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 12 மாதங்கள் தாமதமாகி 2024 மார்ச் 05 ஆம் திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	2022	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	எதிர்காலத்தில் வருடாந்த அறிக்கை தாமதமின்றி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2020 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	2023 ஆம் ஆண்டின் வரைவு வருடாந்த அறிக்கை மற்றும் இறுதிக் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் உரிய அறிக்கையை குறித்துரைத்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

4.	2022 ஆம் ஆண்டிற்குரிய ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு பணம் செலுத்துதல் தாமதமடைந்ததன் அடிப்படையில் ரூபா 169,225 மிகைக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த மிகைக் கட்டண தொகை 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2022	சட்டத்தின் மூலம் பரிந்துரை செய்யப்பட்ட நியதிச் சட்ட தேவைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	2022 ஆம் ஆண்டிற்குரிய ஊழியர் சேமலாப நிதியத்திற்காக ரூபா 169,225 மிகைக் கட்டணம் கம்பனிக்கு விதிக்கப்படவில்லை .	ஊழியர் சேமலாப நிதியத்திற்காக விதிக்கப்பட்டுள்ள மிகைக் கட்டணம் 2022 இன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கின்ற சந்தர்ப்பத்தின் போது கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை.

3.60 வரையறுத்த லெகோ செயற்திட்டங்கள் (தனியார்) கம்பனி

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்தப் பொறுப்புகள் ரூபா	உரிமை மூலதனம் ரூபா	வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்) ரூபா	கணக்காய்வு அபிப்பிராயம்
2021	7,861,493	8,823,109	(961,616)	(328,912)	முனைப்பழியற்ற
2022	32,202,575	25,685,688	6,516,887	7,478,503	முனைப்பழியற்ற
2023	26,305,183	21,802,544	4,502,639	(2,014,248)	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1	ரூபா 5.2 மில்லியன் மதிப்புள்ள நிலையான சொத்துக்கள் இருப்பதை சரிபார்க்க நிறுவனத்தால் நிலையான சொத்து சரிபார்ப்பு மேற்கொள்ளப்படவில்லை. மேலும், இந்த சொத்துக்கள் அனைத்தும் 2013 முதல் செயல்படாமல் உள்ளன.	2021, 2022, 2023	பௌதீக இருப்பை உறுதிப்படுத்த ஆண்டுதோறும் சரக்கு கணக்கெடுப்பு நடத்த ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.	2024 ஆம் ஆண்டின் இறுதி சொத்துக்களை சரிபார்க்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சரிபார்ப்பு குழுக்கள் நியமிக்கப்படவில்லை.	சொத்து சரிபார்ப்பு முடிந்தவுடன், அதற்கான அறிக்கைகள் தணிக்கைக்கு அனுப்பப்படும்.
2	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் ரூபா 9.3 மில்லியனாக இருந்தது. கம்பனியானது இலங்கை மின்சார சபை (CEB) மற்றும் வரையறுத்த லங்கா மின்சார (தனியார்) கம்பனி என்பவற்றிடமிருந்து பெறவேண்டியவையாக முறையே ரூபா 1.5	2022, 2023	நீண்ட காலம் நிலுவையாக இருக்கின்ற பெறவேண்டியவைகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	அந்த பெறவேண்டியவை அறவீடுகளின் மாற்றங்களின் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.	ஏடுகளிலிருந்து அந்த மீதிகளை பதிவழிப்பதற்கு உரிய அனுமதிகளை பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

	மில்லியன் மற்றும் ரூபா 0.3 மில்லியன் இனங்கண்டிருந்த போதிலுத் அந்த பதிவுகள் அவர்களுடைய நீதிக் கூற்றுக்களில் செலுத்த வேண்டியவையாக பதியப்பட்டிருக்கவில்லை.				
3	மின்சார கம்பங்கள் உற்பத்தி செய்வதே வரையறுத்த லெகோ செயற்திட்டங்கள் (தனியார்) கம்பனியின் பிரதான வியாபாரமென்றாக இருந்தது. 2013 இலிருந்து கம்பனியானது தரப் பரிசோதனையில் தவறியமையால் மின் கம்பங்களின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. அதன்பின்னர் கம்பனியானது மீளாய்வாண்டு இறுதிவரை கம்பங்களின் தரத்தை முன்னேற்றுவதன் மூலம் மின்கம்பங்களின் உற்பத்தியை மீள தொடங்கவோ அல்லது ஏதாவது வேறு பொருத்தமான வியாபாரங்களை இனங் காணப்பட்டோ இருக்கவில்லை. மேலும், கம்பனியானது, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18.5 மில்லியன் திரண்ட நட்டத்தை பதிவுசெய்திருந்தது.	2021, 2022, 2023	தரத்தை முன்னேற்றுதல் அல்லது ஏதாவது ஏனைய பொருத்தமான வியாபாரங்களை இனங்காணுதல் மூலம் கம்பங்களின் உற்பத்தியை மீள தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வெண்டும்.	பல செயற்திட்டங்கள் மீது சாத்தியவளக் கற்கைகள் நடாத்தப்பட்டிருந்தன.	அதிக பொருத்தமான செயற்திட்டங்களை செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தது.

3.61 வரையறுத்த அன்ரி லெகோ மீற்றரிங் (தனியார்) கம்பனி

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்தப் பொறுப்புகள் ரூபா	உரிமை மூலதனம் ரூபா	வரிக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்) ரூபா	கணக்காய்வு அபிப்பிராயம்
2021	1,241,273,362	722,169,972	519,103,390	61,251,801	முனைப்பழியற்ற
2022	1,238,941,583	811,031,354	427,910,229	(106,184,727)	முனைப்பழியுள்ளது
2023	1,736,966,432	993,370,037	743,596,395	325,256,881	முனைப்பழியற்ற

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1.	உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அறிக்கை பிரகாரம், கம்பனியானது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 23.4 மில்லியன் தொகையான முன்னைய ஆண்டு வரி மற்றும் தண்டப்பணம் செலுத்த வேண்டியதாக உள்ளது. எவ்வாறாயினும், கம்பனியானது பொறுப்பினை அங்கீகரித்திருக்கவில்லை. இதன் விளைவால், பொறுப்பு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குறைத்துக் காட்டப்பட்டதுடன் நிறுத்திவைத்த இலாபங்கள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.	**2022**	உள்நாட்டு இறைவரி திணைக்களத்துடன் உடன்படாமையை தெளிவாக்குவதற்கும் தேவையான சீராக்கல்களை செய்வதற்கோ அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.	கணக்காளர் ரூபா 23.4 மில்லியன் தொகையான சேகரிக்க வேண்டியவ ரி தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் கம்பனி வரி ஆலோசனையாளருடன் கலந்துரைாடியிருந்தது. கம்பனி வரி ஆலோசகையாளர் CIT தொடர்பில் மேன்முறையீடு அனுப்பியிருந்ததுடன் கம்பன் அந்த கொடுப்பனவுகளை சரியாக செய்திருந்தும் நிலுவையாக இருக்கின்ற ஏயுவு தொடர்பில்	1. ள்நாட்டு இறைவரித் திணைக்களம் முன்வைத்திருந்த மேன்முறையீட்ட கருத்திற் கொண்டிருந்ததுடன் ஏற்கனவே குறியீடு 1820 காலப்பதுிக்காக குறிப்பிடப்பட்ட VAT நிலையை திருத்தியிருந்தது. 2. ண்டப்பணம் உள்ளடங்கிய ரூபா 15,134,322.00 திருத்தப்பட்டது. 3. 024 ஆண்டு இறுதிக்கு முன்னர் தகராறில் இருந்த அந்த வரித் தொகை மீதிகளை சரிசெய்வதற்கு

				புறம்பாக IRD இற்கு அறிவித்திருந்தது.	ஒத்துழைக்கும்.
2.	கம்பனியின் கடமைகள் வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனிக்கு (LECO) அனுப்பப்பட்டிருக்காத ரூபா 28.6 மில்லியன் தொகையான 7,000 எண்ணிக்கையான தொலைத்தொடர்பு மாதிரிகளிற்கான பொருட்கள் அனுப்புதல் குறிப்புகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் என்பவற்றினை தயாரிப்பதாக இருந்தது. மேலும், LECO ஆனது மேற்குறிப்பிட்ட தொலைத்தொடர்பு மாதிரிகளிற்காக கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல் மற்றும் ஏனைய ஆவணங்கள் மீது ரூபா 20.3 மில்லியன் கொடுப்பனவை செய்திருந்தது.	**2022**	மோசடி மற்றும் நிறுவன வளங்களின் தவறான பயன்பாட்டினை தவிர்ப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்த வேண்டும்.	களஞ்சியத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கு நபருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல் மற்றும் கம்பனியின் இருக்கின் பொருள் அனுப்புதல் மற்றும் பட்டியலிடல் நடைமுறை என்பன கடுமையாக பின்பற்றுவதற்கும் ஏதாவது காரணங்களிற்காக நடைமுறையை விலகியிருக்கவில்லை.	பொருட்கள் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் முடிவடைந்த உற்பத்தி பொருட்களை சேகரிப்பதற்காக ALMC தொழிற்சாலை வளவிற்கு வருகை தந்திருந்த CEB மற்றும் LECO இரண்டின் அதிகாரம் அளிக்கப்பட்டவராலேயே பொருட்கள் வழங்கப்பட்டன. தற்போது பொருட்கள் அனுப்புதல் நடைமுறை முறைப்படி பின்பற்றப்பட்டுள்ளது.
	சகல நிறுவனங்களினதும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மீது ஐக்கிய நாடுகளின் "2030 நிகழ்ச்சி" நிரல் பிரகாரம், அதன் நோக்கெல்லையின் கீழ் இலக்குகள் மற்றும் செயற்பாடுகளின் அமுலாக்கலில் பங்களிப்பு செய்ய வேண்டும்.	**2022**	கம்பனி நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மீது ஐக்கிய நாடுகளின் "2030 நிகழ்ச்சி" நிரலுடன் இனங்கியொழுக வேண்டும்.	நாங்கள் 3 SDGs உடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தோம். SDG 5- இன சமத்தவம் மற்றும் மனித சக்தி மற்றும் மகளீர் மற்றும் பெண்கள் SDG 7- மலிவான மற்றும் சுத்தமான சக்தி	"2030 கொள்கை தாள்" உடன் இணங்கவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

எவ்வாறாயினும், கம்பனியானது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அடைய வேண்டிய இலக்குகள் மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக பொருத்தமான குறிகாட்டிகள் என்பவற்றினை இனங்காணப்பட்டிருக்க வில்லை	SDG 12 - நிலைபேறான அபிவிருத்தி மற்றும் உற்பத்தி தன்மையை உறுதிப்படுத்தல்

3.62 கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ கம்பனி

	முழு சொத்துக்கள்	முழு பொறுப்புக்கள்	உரிமை மூலதனம்	வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்)	அபிப்பிராயம்
2021	-	-	-	-	முனைப்பழியுள்ள்
2022	1,346,533,985	741,556,996	604,976,989	104,976,979	முனைப்பழியுள்ள்
2023	1,831,719,203	1,056,677,872	775,041,331	170,064,342	முனைப்பழியுள்ள்

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
01	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் அமைப்பு அகவிதி தொடர்பான 13(ஆ) பிரிவின் பிரகாரம் கம்பனியின் பங்குடமையாளர்களின் உரிமை மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக ஏற்பாடுகள் வழங்கப்படுதல் வேண்டும். கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் கம்பனியின் அமைப்பு அகவிதியின் இலக்கம் 02 இன் பிரகாரம் கம்பனி திறைசேரியின் செயலாளருக்கும் மற்றும்	2022 2023	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் அமைப்பு அகவிதி தொடர்பான 13(ஆ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	முகாமைத்துவ உடன்படிக்கை மற்றும் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவுடனான உடன்படிக்கை தற்பொழுது கையொப்பமிடப்பட்டுள்ளதனால் பிரதான உடன்படிக்கையின் தேவைப்பாட்டினை நீக்கி கம்பனியின் அமைப்பு புறவிதியை மாற்றுவதற்கு இணங்கி கொள்ளப்பட்டது.	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் அமைப்பு புறவிதிகளுக்குரிய 13(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

	இலங்கைத் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவுக்கு மிடையே பிரதான உடன்படிக்கை (Master Agreement) ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய போதிலும் கம்பனியால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.				
02	2022 சனவரி 14 ஆந் திகதிய PED 01/2015 (ii) ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் i. 2023 மார்ச் 16 ஆந் திகதிய பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கையின் தீர்மான இலக்கம் 13 இற்கு இணங்க சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்படுகின்ற அனைத்து படிகளுக்குமாக அரசாங்க சுற்றறிக்கை தொடர்புபடுத்தப்பட வேண்டும். என காட்டப்பட்டிருந்தும் உயர் முகாமைத்துவ மட்டத்தின் (HMI) உத்தியோகத்தர்	2022 2023	2022 சனவரி 14 ஆந் திகதி PED 01/2015(ii) பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	2024 யூன் 19 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக கூட்டத்தின் அங்கீகாரத்தின் அடிபபடையிலும் அவ்வாறான ஊழியர்களினால் மேற்கொண்ட செயற்பாடுகளின் அடிப்படையிலும் எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படிகள் செலுத்தப்பட்டன.	2022 சனவரி 14 ஆந் திகதிய PED 01/2015 (ii) ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

	களுக்கு எரிபொருள் படியாக மாதாந்தம் எண்ணை லீற்றர் அளவு செலுத்தப்பட வேண்டிய போதிலும் கம்பனியால் அதற்கு முரணாக 2023 ஆம் ஆண்டில் 19 உத்தியோகத்தர் களுக்கு ரூபா 4,441,459 தொகை செலுத்தப்பட்டது . ii.உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமையல்லாத 20 உத்தியோகத்தர் களுக்கு 2023 ஆம் ஆண்டில் வாகனப் படியாக ரூபா 4,231,577 செலுத்தப்பட்டது .				
03	2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்கத்தின் தொழில்முயற்சிக ளுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 5.3 ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் வரிக்குப் பின்னைய இலாபத்தில் ஆகக் குறைந்தது 30 சதவீதம் பங்கிலாபமாக திறைசேரிக்கு	2022 2023	2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்க தொழில முயற்சிகளுக்கான செயற்பாட்டுக்கை யேட்டின் 5.3 பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	திறைசேரிகட்கு செலுத்த வேண்டிய பங்கிலாபம், எதிர்கால தொழில் முயற்சிகளை விரிவுபடுத:துவதற் காக ஈடுபடுத்துவதற்கு பணிப்பாளர் சபை நிர்ணயித்துள்ளது டன் இதுதொடர்பான அங்கீகாரம் அரசாங்க	2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்க தொழில முயற்சிகளுக்கான செயற்பாட்டுக்கை யேட்டின் 5.3 பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

	அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் கம்பனியின் முழு மூலதனமும் திறைசேரிக்குச் சொந்தமானது என்பதனால் மேற்கூறிய 30 சதவீத பங்கிலாபத்திற்கு மேலதிகமாக மிகுதிப் பங்கிலாபமும் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.			தொழில் முய்றசிகள் திணைக்களத்திடம் வேண்டப்பட்டுள்ளது.
04	அரசாங்க தொழில்முயற்சிகளுக்கான செயற்பாட்டு கையேட்டின் 6.7 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் ரூபா 393,621,112 தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சிய பொருட்களின் வருடாந்த மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2024 மே 27 ஆந் திகதி வரை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிரு	2022 2023	அரசாங்கத்தின் தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 6.7 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	கொள்வனவு செய்த பொருட்கள் 02 ஆண்டுகனேும் பூர்த்திசெய்யாததன் காரணமாக பொருள் மெய்மையாய்வு செய்யப்படவில்லை.	அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கையேட்டின் 6.7 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

	க்கவில்லை.				
05	கொழும்பு தாமரைக் கோபுரம் தொடர்பான பௌதீக பரீட்சிப்பின் போது கோபுரத்தினை பார்வையிடும் மாடியின் சுவர்களின் நிறப் பூச்சுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் பெயர்கள் மற்றும் பல்வேறு உருவங்கள் வரையப்பட்டிருந்தன. அந்த பாதிப்புக்களைக் குறைப்பதற்காக ரூபா 1,084,050 செலவு செய்து காட்சிக் கூடத்தில் மின்சார வெளிச்சமூட்டி தொங்கவிடும் பிளாஸ்ரிக் பலகைகள் பொருத்தப்பட்டிருந்தும் அவையும் பார்வையாளர்களால் சேதப்படுத்தப்பட்டிருந்தது. கோபுரத்திற்குள் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு அதன் செயற்பாட்டிற்காக ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அச்சேதத்தினை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான ஆக்ககுறைந்த	2022 2023	தேவையான ஆகக் குறைந்த பாதுகாப்பு உத்தியோகத்ரத்களை ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	பிளாஸ்ரிக் UV Light Board பொருத்துவதற்கு இணங்கியிருத்தல்.	தேவையான ஆகக்குறைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கவில்லை.

பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.63 லங்கா லேலண்ட் (தனியார்) கம்பனி

	மொத்தச் சொத்துக்கள்	மொத்தப் பொறுப்புக்கள்	உரிமை	வரிக்கு முந்திய இலாபம்)நட்டம்)	அபிப்பிராயம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2021	1,340,406,496	1,641,175	1,338,765,321	(60,738,483)	முனைப்பழியுள்ள
2022	1,276,226,059	5,829,381	1,270,396,678	(51,364,173)	மறுப்பு
2023	1,629,473,504	5,695,782	1,623,777,722	355,812,551	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1.	கம்பனியின் நிர்வாக சபையினால் கம்பனியின் நோக்கங்களை அடைவதற்காக கடந்த சில வருடங்களாக எந்தவொரு செயற்பாடொன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் கடந்த 06 வருட காலப்பகுதியில் பெறப்பட்ட நிலையான வைப்புத்தொகை வட்டி வருமானம் மற்றும் பங்குகளுக்காக பெறப்பட்ட பங்கிலாப வருமானம் ஆகியவற்றிலிருந்து ரூபா 31,621,843 நிர்வாகச் செலவுகளாக மேற்கொள்ளப்பட்டி	2021/2022 2022/2023 2023/2024	நிர்வாகச் செலவுகள், நோக்கங்களை அடைவதற்கு ஒரே நேரத்தில் செய்யப்பட வேண்டும்.	ஏற்றுக் கொள்கின்றேன். புதிய நிர்வாகத்தின் கீழ், * தெருக்கள் தகுதி (Road worthiness) * கைத்தொழில் ஆய்வுகூடம் (Industrial Laboratory) * சூரிய பெனல் (Solar Panels) ஆகிய 3 புதிய செயற்திட்டங்கள் அறிமகப்படுத்தப் பட்டுசெயல்படுத் தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் முதல் இரண்டு செயற்திட்டங்களுக் கான	எவ்வித செயற்பாடொன்றும் மேற்கொள்ளப் படவில்லை.

				சாத்தியக்கூறு ஆய்வொன்ற நடாத்தப்பட்டு வருகின்றது. அதன்படி, அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலம் நிறுவனத்தின் எதிர்காலத்தில் நிறுவனத்தின் நிர்வாகச் செலவுகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.	
2.	கம்பனியின் சேவையை விட்டு வெளியேறிய ஊழியர்களுக்காக ஒதக்கப்பட்டிருந்த ரூபா 1,514,896 ஆன பணிக்கொடை கொடுப்பனவுகளுக்கான அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	2023/2024	கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.	ஏற்றுக் கொள்கின்றேன். இது தொடர்பான எவ்வித துணை ஆவணமொன்றும் இதற்கு முன்னர் இருந்த கட்டுப்பாட்டு அதிகார சபையிடமிருந்து பெறப்படாததுடன் இதற்கான வழக்கு நடவடிக்கையொன்றும் உள்ளது. வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் நிர்வாகத்தின் முடிவுகளின் அடிப்படையில் பொருத்தமான சீராக்கங்கள் எதிர்காலத்தில் செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.	அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.

3.	2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 132 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கையுடன் கம்பனிப் பதிவாளருக்கு அனுப்ப வேண்டிய பணிப்பாளர்களின் அறிக்கை மற்றும் பணிப்பாளர் மற்றும் கம்பனியின் செயலாளர் கையொப்பமிட்ட சான்றிதழ் 2018 ஆம் ஆண்டு முதல் கம்பனிப் பதிவாளருக்கு அனுப்பப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2023/2024	கம்பனிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்..	இதுவரை கம்பனியின் பணிப்பாளர் சபையின் மாற்றங்கள் கம்பனிப் பதிவாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படாமைக்கான காரணம் கம்பனியின் முன்னாள் பணிப்பாளர் பொதுத் திறைசேரியின் பிரதிநிதி முறையாக தனது இராஜினாமாவை சமர்ப்பிக்காமையே ஆகும்.	அறிக்கை இதுவரை அனுப்பப்பட வில்லை.

3.64 லக்திவ பொறியியல் தனியார் கம்பனி

	மொத்தச் சொத்துக்கள்	மொத்தப் பொறுப்புக்கள்	உரிமை	வரிக்கு முந்திய இலாபம்)நட்டம்)	அபிப்பிராயம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
2021	104,493,622	40,977,344	63,516,279	(9,880,554)	முனைப்பழியுள்ள
2022	111,716,728	64,279,403	47,437,325	(20,197,033)	முனைப்பழியுள்ள
2023	138,731,172	65,199,846	73,531,325	28,039,032	முனைப்பழியுள்ள

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1.	1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 23 (அ) பிரிவின் பிரகாரம் வாகனங்களின் சேவை மேற்கொள்ளப்படும் நிறுவனங்களினால் அதற்குரிய அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும், கம்பனியால் இது வரையில் அந்த அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளப்படவில்	2021	சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	பதில் அளிக்கப்பட வில்லை.	உரிய சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படவில் லை.

லை.

2.	நிறுவனத்திற்குச் சொந்தமான 07 வாகனங்களுக்காக மீளாய்வாண்டில் திருத்தச் செலவுகள் ரூபா 1,390,393 ஆக இருந்தது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 371 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. ஆனால் திருத்தம் செய்யப்பட்ட 02 வாகனங்கள் தற்போது இயங்கக் கூடிய நிலைமையில் இல்லாதிருப்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.	2021	திருத்தச் செலவுகள் நிர்வகிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	பதில் அளிக்கப்பட வில்லை.	திருத்தம் செய்யப்பட்ட 2 பேருந்துகள் தற்போது இயங்கக் கூடிய நிலைமையில் இல்லாதிருப்பதுடன் ,2 முச்சக்கர வண்டிகளும், இயங்க முடியாத நிலைமையில் காணப்பட்டன.
3.	டென்டர் நிபந்தனையின் பிரகாரம் டென்டர் உரித்துடையவருக்கான பொருட்கள் அகற்றப்படுவதற்கு முன்னர் ரூபா 5 லட்சம் தொகையொன்று நிறுவனத்தின் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், டென்டர்களைப் பெற்றுக்கொண்ட 17 டென்டர்தாரர்கள்	2021	டென்டர் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	பதில் அளிக்கப்பட வில்லை.	டென்டர் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

	ரூபா 8,500,000 ஐ வைப்புச் செய்திருக்கவில்லை.				
4.	கம்பனிக்குச் சொந்தமான பழைய இரும்பு அலுமினியம் மற்றும் பிற பொருட்களை விற்பனை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் கம்பனி பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் விற்கப்பட்டிருந்த பழைய பொருட்களின் அளவு இனங்காணப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 11,535,238 பெறுமதியான பழைய இரும்பு மற்றும் அலுமினியம் விற்கப்பட்டாலும் விற்கப்பட்ட அளவின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.	2021	முறையான முறைமையொன்றின் பிரகாரம் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.	பதில் அளிக்கப்பட வில்லை.	விற்கப்பட்டிருந்த இரும்பின் அளவு இனங்காணப்பட்டு பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
5.	மீளாய்வாண்டில் ரூபா 571,216,224 பெறுமதியான பேருந்துகள் மேலதிக உதிரிப்பாகங்கள்	2021	பெறுகை வழிகாட்டி கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட	பதில் அளிக்கப்பட வில்லை.	தேசிய போட்டி விலை மனுக்கோரல் இன்றி விலை நிர்ணய முறைமையின்

	திருத்த வேலைகள் கராஜ் மற்றும் சேவை நிலையங்கள் போன்றவற்றக்காக 2006 பெறுகை வழிகாட்டி கோவையின் 3.2 பிரிவின் பிரகாரம் தேசிய போட்டி விலை மனுக்கோரல் இன்றி தனிப்பட்ட கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யபட்டிருந்தது		வேண்டும்.		கீழ் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது.
6.	2022 திசெம்பர் 31 இல் வாகன சேவைப் பிரிவின் உதிரி பாகங்களின் பெறுமதி ரூபா 1,867,245 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் , அந்த உதிரி பாகங்கள் பின்கார்ட் பத்திரங்களில் ஆவணப்படுத்தப்பட்டமை மற்றும் வருடாந்த இருப்பு உறுதிப்படுத்தப்படாத காரணத்தினால் அப்பெறுமதி கணக்காய்வின்போது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது..	2022	கம்பனிக்கு பெறப்படுகின்ற அனைத்து உதிரி பாகங்களின் இருப்பு பதிவேடுகளில் பதியப்பட்டு கணக்கில் சேர்க்கப்பட்டு வருடாந்தம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.	உங்களால் அடையாளம் காணப்பட்ட 17 உருப்படிகள் ஒவ்வொரு இடங்களிலிருந்து சேவை நிலையத்திற்கு பெறப்பட்டவை என்பதுடன் அவை பணத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டவை அல்ல என்பதால் அந்த உருப்படிகளுக்கு பணப் பெறுமதி யொன்று இருக்கவில்லை. எனவே, நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	பின்கார்ட்களில் உள்ளடக்கப்பட்டு கணக்கீட செய்யப்பட்டிருக்கவில்லை.
7.	ஒரு பேருந்தின் முழுமையான பழுதுபார்ப்பிற்காக ஒரு பக்கத்திற்கு	2022	நிதி சிக்கல்கள் தொடர்பான தந்திரோபாயங்க	வாடிக்கையாளர்க நிறுவனத்தில் நிலவிய நிதி நெருக்கடியால், சரியான	கம்பனியில் நிலவிய நிதி நெருக்கடி காரணமாக

	8 நாட்கள் வீதம் 6 பக்கங்களுக்கு 48 நாட்கள் என மதிப்பிடப்பட்ட கால அவகாசமொன்று கண்டறியப்பட்ட போதிலும், கணக்காய்வினால் நடாத்தப்பட்ட மாதிரி பரிசோதனையின் போது அக்கால எல்லை மீறப்பட்டு ஒரு பேருந்திற்காக 76 முதல் 210 நாட்கள் வரையிலான காலமொன்று எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.		ளின் பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.	நேரத்தில் உதிரி பாகங்களை கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தமையால் மதிப்பிடப்பட்ட காலத்தை விட அதிகமான காலமொன்று பேருந்துகளை பழுதுபார்ப்பதற்காக எடுக்கப்பட்டிருந்தது.	பழுதுபார்த்தல் பணிகள் தாமதமாகின.
8.	கம்பனியின் பழுதுபார்த்தல் பிரிவின் பணிகளை கொணடு நடாத்துவதற்கு தொழில்நுட்ப அறிவுள்ள பயிற்சி பெற்ற பணியாளர்கள் இன்றியமையாததாக இருந்த போதிலும், தற்போதுள்ள மனித வளம் முறையாக நிர்வகிக்கப்பட்டு பயன்படுத்தப்படல் மற்றும் தேவைகேற்ப பயிற்சி பெற்ற பணியாளர்களை ஆட்சேர்ப்பதற்கான	2022	நிறுவனத்தின் அத்தியாவசிய பணிகளுக்கு தேவையான வகையில் பயிற்சி பெற்ற பணியாளர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.	நிறுவனத்திற்கு நிரந்தர பணியாளர்களை பணியமர்த்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்படாதது, உரிய இலக்குகளை அடைவதற்காக, ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு உரிய பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	பேருந்தின் உடல் வேலை , பெயின்டிங் மற்றம் ஏனைய பணிகளுக்காக ஒப்பந்தக் குழுக்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்தது.

	நடவடிக்கைகளை எடுப்பதில் நிர்வாகம் கவனம் செலுத்தவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டில் பேருந்து பழுதுபார்த்தல் பிரிவின் பணிகளை கொணடு நடாத்துவதற்கு 15 ஒப்பந்தக் குழுக்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 29,150,085 செலுத்தப்பட்டிருந்தது.				
9.	2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களுகுள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படாததுடன் இறுதியாக 2013 ஆம் ஆண்டிற்கான அறிக்கை 2016 யூலை 21 ஆம் திகதி	2022	சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்..	ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்காக கையளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	ஆண்டறிக்கை தயாரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

	சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.				
10.	கம்பனியின் சேவை நிலையம் 2021 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு இது வரை இயங்கி வருவதுடன், அதற்குத் தேவையான தகுதி வாய்ந்த ஊழியர் குழுவொன்று இல்லாத காரணத்தால் வாகனங்கள் வெளயாரி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு பழுது பார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மீளாய்வாண்டிலும் வாகனங்கள் பழுதுபார்ப்பிற்காக வெளியார் நிறுவனங்களுக்கு ரூபா 15,012,342 செலுத்தப்பட்டிருந்தது. சேவை நிலையத்தின் கிரயம் ரூபா 20,858,703 ஆக இருந்த போது வருமானம் ரூபா 17,906,855 ஆக இருந்தமையால் சேவை நிலையத்தை நடாத்திச் செல்வதில் மீளாய்வாண்டில் கம்பனிக்கு ரூபா 2,951,848 ஆன நட்டம் ஒன்று ஏற்படுவதற்கு	2022, 2023	சேவை நிலையத்தின் வருமானத்தை அதிகரித்து மற்றும் கிரய முகாமைத்துவத்தின் மூலம் இலாபமீட்டும் பிரிவொன்றாக மாற்றப்பட வேண்டும்.	வாகனங்கள் சேவை நிலையத்தின் பணிகளை முறையாக மேற்கொள்வதற்கு முறையான பயிற்சி பெற்ற தொழிநுட்ப வல்லுநர்களை ஆட்சேர்ப்பதற்காக பல சந்தர்ப்பங்களில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்கான அங்கீகாரம நிறுவனத்திற்கு வழங்கப்பட வில்லை.	சேவை நிலையத்தின் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

நேரிட்டது.

11.	கம்பனியின் 28 பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 121 ஆக இருந்ததுடன் உயர் முகாமைத்துவ நிலைக்கு உரித்தான முகாமையாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் போன்ற பதவிகள், ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்ட 2018 ஆம் வருடம் முதல் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் கணக்காளர் பதவி 2021 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக காணப்பட்டது.	2021, 2023	பணி ஒப்படைகளுக்குத் தேவையான வகையில் மனித வளம் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.	உரிய பதவிகளுக்கான ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரம் எதுவும் நிறுவனத்திற்கு வழங்கப்படாத காரணத்தினால் இந் நிலைமை ஏற்பட்டுள்ளது.	ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்படடி ராததுடன் கம்பனியின் பதவிகளில் இன்னும் வெற்றிடங்கள் காணப்பட்டன.
12.	சேவை நிலைய பணிகளை மேற்கொள்வதற்க ாக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 11,407,706 பெறுமதியான உபகரணங்கள் குறை பயன்பாடுடையதா க காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 1,684,975 பெறுமதியான 3டீ வீல் எலயின்மன்ட்	2021, 2023	இயந்திர உபகரணங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	இந்த உபகரணத்திற்க ாக பயிற்சி பெற்ற தொழிலாளர் இல்லாமையினா ல், குறிப்பிட்ட இயந்திரம் முறையாக நிறுவப்படாததன் காரணமாக இந் நிலைமை ஏற்பட்டுள்ளது.	சேவை நிலையத்தின் பணிகள் நிறுத்தப்பட்டுள்ள மையால் அந்த உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படா மல் பொருளாதாரமற்ற தாக காணப்பட்டன.

(3D wheel Alignment) உபகரணம் செயற்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது.

3.65 புறொப்பட்டி டெவலப்மென்ட் லிமிடட்

ஆண்டு	மொத்த சொத்துக்கள் ரூபா.	மொத்த பொறுப்புக்கள் ரூபா.	உரிமையான்மை ரூபா.	வரிக்கு பின்னரான இலாபம்/ நட்டம் ரூபா.	அபிப்பிராயம்
2021	5,339,762,716	730,431,989	4,609,330,727	649,977,839	முனைப்பழியற்ற
2022	6,638,714,674	873,144,132	5,765,570,542	793,327,849	முனைப்பழியற்ற
2023	7,777,011,924	828,247,821	6,948,764,103	913,854,457	முனைப்பழியற்ற

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1.	PDL கோபுரக் கட்டிடம் தற்போது 50 ஆண்டுகளுக்கும் மேலாக பெறுமானத்தேய்விடப்பட்டு வருகிறது, இது கட்டிடத்தின் பயன்தரு ஆயுட்காலத்தை குறைவாக காட்டுகின்றது. ஒரு சொத்து அதன் பயன்தரு ஆயட்காலத்தை விட குறைவான காலப்பகுதியில் பெறுமானத்தேய்விடப்படும் போது அதன் பெறுமதி குறைத்து மதிப்பிடப்படும், மேலும் பெறுமானத்தேய்வு செலவினம் நன்மையுடன் சரியாகப் பொருந்தாது, இதன் விளைவாக இலாபம் தவறாகக் குறிப்பிடப்படுகிறது.	2021	BOC தலைமையக கட்டிடத்தின் எஞ்சிய சேவை ஆயுட்காலத்தை எதிர்வுகூறுவதன் அடிப்படையில் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.	ஆகஸ்ட் 2022 இல் மத்திய பொறியியல் ஆலோசனைப் பணியகத்திலிருந்து (CECB) BOC தலைமையகக் கட்டிடத்தின் மீதமுள்ள பயனுள்ள ஆயுட்காலம் பற்றிய அறிக்கையை நிர்வாகம் பெற்றது. அதன்படி, CECB அறிக்கையால் கணிக்கப்பட்டுள்ள புதிய பயனுள்ள ஆயுட்காலத்தின் அடிப்படையில் 31 டிசம்பர் 2022 இல் முடிவடைந்த நிதிநிலை	பரிந்துரைக்கு இணங்கியது.

			அறிக்கைகளில் நிறுவனம் தேவையான மாற்றங்களைச் செய்தது.	
மோசடி தடுப்பு சட்டத்தின் 2 ஆம் பிரிவு, 1840 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க மற்றும் 2022 ஆம் 31 ஆம் இலக்க நோட்டரி சட்டத்தின் திருத்தம் செய்யப்பட்ட விதி 14(30ஏ). அந்த அறிவுறுத்தலின்படி, சான்றளிக்கும் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்கு முன்னதாக, அவர் சான்றளிக்கப்பட்ட ஒவ்வொரு பத்திரத்தையும் அல்லது கருவியையும் பதிவு செய்வதற்காக பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டியது ஒவ்வொரு நோட்டரி பப்ளிக்கினதும் கடமையாகும். இருப்பினும், நிறுவனம் குறிப்பிட்ட காலத்திற்குள் காணிப் பதிவாளரின் குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் பதிவு செய்யவில்லை.	2022/ 2023	சான்றளிக்கப்பட்ட ஒவ்வொரு பத்திரத்தையும் அல்லது கருவியையும் குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கவும்	இந்த விஷயம் BOC (அதாவது குத்தகைதாரர்) உடன் விவாதத்தில் உள்ளது மற்றும் இந்த விஷயத்தின் தற்போதைய நிலை குறித்து பின்வரும் உண்மைகள் குறிப்பிடப்பட்டுள்ளன அ. இந்த விஷயம் BOC க்கு (அதாவது குத்தகைதாரர்) முகாமையாளர் (HRA)PDL ஆல் 09 ஆகஸ்ட் 2023 திகதியிட்ட PDL கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது. ஆ.BOC அவர்களின் கடிதத்தின்படி Ref.AGM/PROP/CM/pks 12 டிசம்பர் 2023 திகதியிட்ட குறிப்பின் கீழ் உள்ள விஷயம் தொடர்பாக சில ஆவணங்கை	BOC இன் பதிலுக்காக காத்திருக்கிறது. (அதாவது தாய் நிறுவனம் மற்றும் குத்தகைதாரர்)

ளக் கோரியிருந்தது .

இ. PDL 18 மார்ச் 2024 திகதியிட்ட PDL இன் கடிதத்தின் மூலம் BOC க்கு கூறப்பட்ட ஆவணங்கள ை அனுப்பியது அதன்படி, BOC யிடமிருந்து பதில் கிடைத்தவுடன் சபையின் ஒப்புதலுடன் உரிய நடவடிக்கை தொடங்கப்படும்.

செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

பின்வரும் மூலதனப் பணிகளுக்காக 2022 பாதீடு செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், 2022 ஆம் ஆண்டில் பணிகள் செய்யப்படவில்லை.

	விபரம்	பாதீடு ஒதுக்கம் (ரூபா.000)	குறிப்பு
(i)	சில்லர் முகாமை அமைப்பை மேம்படுத்தல்	4,000	2022 ஆம் ஆண்டில் சில்லர் முகாமை அமைப்பை மேம்படுத்துவதற்காள முழு பாதீட்டு ஒதுக்கீடும் பயன்படுத்தப்படவில்லை.
(ii)	அடித்தளம் 2 முதல் 17வது தளத்திற்கு 11 KV மின் கம்பிகளை மாற்றுதல் மற்றும் 17வது தளத்தில் 11KV ஜுசொலேட்டர் பேனலை மாற்றுதல்	30,000	அடித்தளம் 2 முதல் 17வது தளம் வரையிலான 11 KV மின் கம்பிகளை மாற்றுவதற்கும், 17வது தளத்தில் 11KV ஜுசொலேட்டர் பேனலை மாற்றுவதற்கும் ஒதுக்கப்பட்ட முழு பாதீடும் 2022 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படவில்லை.

2022 (i) காலதாமதமோ பாதீட்டை சரியான நேரத்தில் அல்லது முன்னோடியாக தயாரிப்பது அவசியம் (ii) ஒப்பந்தம் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டதால், தாமதத்தால் ஏற்படக்கூடிய இழப்புகளைக் குறைக்க, பணியை விரைவுபடுத்த முயற்சி தேவை.

வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு முன்னர், தொடர்புடைய மாற்று/மேம்படுத்தும் திட்டங்கள் பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டு திட்டங்களும் ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளன.

செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்

பின்வரும் மூலதனப் பணிகளுக்காக 2023 பாதீடு செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும், 2023 ஆம் ஆண்டில் பணிகள் செய்யப்படவில்லை.

	விபரம்	பாதீடு ஒதுக்கம் (ரூபா.000)	குறிப்பு
(i)	எயார் ஹேண்டிங் யூனிட்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்	84,000	2023 ஆம் ஆண்டில் எயார் ஹேண்டிங் யூனிட்களை வழங்குவதற்கும் நிறுவுவதற்கும் முழு பட்ஜெட் ஒதுக்கீடும் பயன்படுத்தப்படவில்லை. 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் பூஜ்ஜிய சதவீதமாக உள்ளது.
(ii)	தேர்ந்தெடுக்கப்பட்ட மாடிகளில் மின்சார துணை விநியோக பேனல்களை மாற்றுதல்	15,000	திட்டத்திற்கான முழு பாதீடு ஒதுக்கீடும் 2023 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்படவில்லை. 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் பூஜ்ஜிய சதவீதமாக உள்ளது.

2023 எந்த தாமதமும் இல்லாமல் அல்லது முன்னோடியாகவோ இல்லாமல் சரியான நேரத்தில் பாதீடு செய்ய வேண்டும்.

வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு முன்னர், தொடர்புடைய மாற்றீடு/மேம்படுத்துதல் திட்டங்கள் குறித்து விரிவான ஆய்வுகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள ஏர் ஹேண்ட்லிங் யூனிட்கள் மற்றும் எலக்ட்ரிக்கல் பவர் சப் டிஸ்ட்ரிபியூஷன் பேனல்கள் இன்னும் 2 முதல் 3 ஆண்டுகள் வரை பயன்படுத்தப்படலாம் என்பதால், இரண்டு திட்டங்களையும் 2026க்கு ஒத்திவைக்க நிர்வாகம் முடிவு செய்தது.

3.66 சீபாங் ஹொலிடே ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிடட்

	மொத்த சொத்துக்கள் ரூபா	மொத்த பொறுப்புக்கள் ரூபா	தேறிய சொத்துக்கள் ரூபா	வரிக்கு பின்னரான இலாபம்/ (நட்டம்)	அபிப்பிராயம்
2021	43,050,722	108,136,180	(65,085,458)	(26,669,357)	முனைப்பழியற்ற
2022	47,443,901	115,022,207	(67,578,306)	(2,492,848)	முனைப்பழியற்ற
2023	24,532,080	88,762,131	(64,230,051)	3,348,255	முனைப்பழியற்ற

	கணக்காய்வு அவதானிப்பு	அறிக்கையின் ஆண்டு	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை	கணக்காய்விற்கு உட்படும் நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்	அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரைகளை அமுல்ப்படுத்துதல் நிலை
1	தானியங்கு முறைமைக்கு பதிலாக, பொருளிருப்பு முகாமைத்துவம் மற்றும் பதிவுகளை வைத்திருப்பதற்கு கம்பனி கைமுறையிலான முறைமையைப் பயன்படுத்துகிறது, இது பொருளிருப்பு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய ஆபத்தை அதிகரிக்கும்.	2021	பொருளிருப்பு முகாமைத்துவம் தொடர்பாக தற்போதுள்ள முறைமைகள் மற்றும் நடைமுறைகளை மதிப்பாய்வு செய்வதற்கும், பொருளிருப்பு நகர்வுகளை கண்காணித்து கட்டுப்படுத்துவதற்கு பொருளிருப்பு தொகுதிகளை செயற்படுத்துவதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது.	தலைமை அலுவலக மட்டத்தில், இது ஒரு பறவைக் கண்ணோட்டத்துடன் மாதந்தோறும் இருப்பு அளவைக் கண்காணிக்கும். இது பில்லிங் செய்வதற்கான டிஜிட்டல் முறையை அறிமுகப்படுத்தும் செயல்பாட்டில் உள்ளது மற்றும் சரக்குகளுக்கான கட்டுப்பாடு மற்றும் வழங்கல் அமைப்பில் உள்ளது.	சரக்குகளுக்கான கையேடு நடைமுறையை நாங்கள் பின்பற்றுவதால், சரக்கு நிர்வாகத்தின் பொறுப்பு ஒவ்வொரு ஒய்வுக்கும் தொடர்புடைய குடியுரிமை முகாமையாளரிடம் உள்ளது. நிறுவனம் ஒரு புதிய கணினிமயமாக்கப்பட்ட அமைப்பை அறிமுகப்படுத்தும் வரை, தற்போதுள்ள கையேடு நடைமுறைகளின் கட்டுப்பாடுகளை வலுப்படுத்தவும், சரக்குகளுடன் தொடர்புடைய

				அபாயத்தைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கும்.
